


28 ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com




நதி: 28 | பாலம்: 24 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 15, 2018

# காலநிலை மாற்றக் குறிக்கோள் மாறிவிட்டதா?

பல எதிர்பார்ப்புக்களுடன் ஆரம்பமான கனேடிய மாகாண மற்றும் பிரதேச முதலர் வர்களுடனான கனேடியப் பிரதமரின் மாநாடு, எவருடைய வெளிநடப்பும் இல்லா மல் கனேடியப் பொருளாதார வளர்ச்சிக்கும் சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சுற்றுப் புறச்சூழலை உருவாக்கவும் தொடர்ந்து ஒத்துழைப்போம் என்று எல்லா முதல்வர் களும் பிரதமருடன் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையுடன் 2018 டிசெம்பர் 07இல் மொன்றியல் நகரில் முடிவுற்றது.



இம்மாநாடு ஆரம்பிக்கமுன்னர் வெளியிடப் பட்ட மாநாட்டின் நிகழ்ச்சி நிரலைப் பார்வையிட்ட பின்னர், ஒன்ராரியோ மாகாணத்தின் கரிசனைகளை பிரதமர் செவிமடுக்காவிட்டால் ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் மாநாட்டில் இருந்து வெளிநடப்புச் செய்வார் என ஒன்ராரியோ மாகாண அரசின் உயர் அதிகாரி ஒருவர் CBC ஊடகத்திற்குத் தெரிவித்திருந்தார்.

இதேபோல் சஸ்கச்சுவான் முதல்வர் Scott Moeஉம் அல்பேட்டா முதல்வர் Rachel Notleyஉம் தங்கள் மாகாணங்கள் எதிர் நோக்கும் மசகு எண்ணை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக கனேடியப் பிரதமர் முதல்வர்களுடனான மாநாட்டில் கலந்து ஆலோசிக்கவேண்டும் என ஊடகங்களுக்கு அறிக்கை விட்டிருந்தனர்.

கனேடிய மாகாண மற்றும் பிரதேச முதல் வர்களை மாநாடு ஒன்றில் ஒன்றாகப் பிரதமர் சந்திப்பது ஒரு சவாலான விடயம் என்பதால் கனேடிய முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பர் இவ்வாறான மாநாடுகளைத் தனது ஆட்சிக்காலத்தில் தவிர்த்திருந்தார். லிபரல் கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர் தற்போதைய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ மீண்டும் இம் முதல்வர்களுடனான மாநாட்டை ஆரம்பித்து நடத்திவருகிறார். கடந்த காலங்களில் லிபரல் ஆதரவு முதல்வர்கள் குறிப்பாக ஒன்ராரியோ மாகாண லிபரல் கட்சியின் முதல்வர் Kathleen Wynne இருந்ததால் ஜஸ்ரின் ரூடோவிற்கு இவ்வாறான முதல் வர்களுடனான மாநாடுகள் பல சிரமங் களைக் கொடுக்காமல் நடைபெற்றன. தற்போது ஒன்ராரியோ, சஸ்கச்சுவான், மனிற்ரோபா மற்றும் நியூ பிரவுண்ஸ்விக் மாகாணங்களில் பழமைவாதக்கட்சியின் முதல்வர்கள் இருக்கின்றனர். குவிபெக் மாகாணத்திலும் லிபரல் கட்சியைச் சேர்ந்த முதல்வர் தோற்கடிக்கப்பட்டு தற்போது CAQ கட்சியின் முதல்வர் Francois Legault இருக்கிறார். இக்காரணங்களால் இம்முறை முதல்வர்களுடனான மாநாட்டில் கனேடியப் பிரதமர் பல சவால்களை எதிர்நோக்குவார் எனப் பல ஊடகங்கள் எதிர்வு கூறியிருந்தன.

மாநாட்டில் பல காரசாரமான விவாதங்கள் நடைபெற்றிருந்தும் மாநாடு நிறைவெய்திய போது ஏகமனதாக ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சுற்றுப்புறச்சூழலை உரு வாக்கவேண்டும் என எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் அதை அணுகும் முறையில், மாசுபடுத்தலுக்கான




ஒரு விலையை நிர்ணயிப்பதில் முதல் வர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. எல்லா மாகாண மற்றும் பிரதேச முதல்வர்களும் தங்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்புடன் வேலை செய்வதற்கு ஒப்புதல் அளிக் கின்றனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநாட்டில் ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் உரையாற்றும்போது ஒன்ராரியோ மாகாண அரசு காபன் வெளியேற்றுதலுக்கு விலை நிர்ணயிக்காமலே பசுமைவாயுக்களை குறைக்கத் திட்டம் ஒன்றை சமர்ப்பித் துள்ளது. அதன்மூலம் கனேடிய அரசு பாரிஸ் மாநாட்டில் ஏற்றுக்கொண்ட 'பசுமை வாயுக்களின் அளவை 2005ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அளவிலும் பார்க்க 30% குறைவாக 2030ஆம் ஆண்டில் வெளியிடப் பட வேண்டும்' என்ற உறுதிமொழியை ஒன்ராரியோ மாகாணம் நிச்சயமாக அடையும். ஆனால் தற்போது கனேடியப் பிரதமர் ஒன்ராரியோ மாகாணத்தை அதன் பசுமைவாயுக்களின் வெளியீட்டை 30%இற்கு மேலதிகமாகக் குறைக்கக் கூறுவது ஒன்ராரியோ மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் என்றார். கனேடியப் பிரதமர் தனது குறிக்கோளை ஏன் மாற்றுகிறார் எனவும் கேட்டார்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது இல்லமும் - 524

## வாடகை அதிகரிப்பில் மாற்றம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendiran.ca
416.315.9397/416.321.6969

2018 ஜுன் 08இல் நடைபெற்ற ஒன்ராரியோ மாகாண அரசத் தேர்தலில் டக் ஃபோட்டின் (Doug Ford) தலைமையிலான அரசு வெற்றி பெற்றது. இவ்அரசு, முன்னைய லிபரல் அரசு கொண்டுவந்த பல செயற்பாட்டு திட்டங்களை மாற்றி வருகின்றது. அடுத்த ஆண்டிலிருந்து (2019) அடிப்படைச் சம்பள அதிகரிப்பை நிறுத்தி வைத்துள்ளது. அதாவது $15ஆக அதிகரிக்க இருந்தது. $14 ஆகவே தொடர்ந்து இருக்கிறது.

மற்றுமொரு நடவடிக்கையாக, மாதாந்த வாடகை அதிகரிப்பில் மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. வாடகை அதிகரிப்பு பணவீக்கத்துடன் சேர்ந்த்ததாகவே இருக்க வேண்டுமென முன்னைய அரசு சட்டத்தை கொண்டு வந்தது. புதிய அரசு இதில் மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மனை/வீடுகளின் வாடகை அதிகரிப்பிற்கு எல்லை கிடையாது என்ற மாற்றம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்பிரகாரம், இதுவரை வாடகைக்குக் கொடுக்காத புதிய மனை/வீடுகளுக்கு வாடகைக் கட்டுப்பாடு (Rent Control) கிடையாது. இதனால் புதிதாக மனை, வீடுகள் நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் உற்சாகம் அடைந்துள்ளன.



CMHC இன் அறிக்கையின்படி ஒன்ராரியோவில் வாடகைக்கு கிடைக்கக் கூடிய அளவு 1.6% ஆகவே காணப்படுகின்றது. (Vacany Rate 1.6%) இந்த பெறுமதி ரொறன்ரோவில் 1% ஆகும். வாடகையில் ஏற்பட்ட நெருக்கடியினால் ரொறன்ரோ பகுதியில் ஒரு அறை கொண்ட அடுக்கு மனையின் வாடகை $2000ஐ தண்டியுள்ளது.

அதிகளவு வாடகைக்குரிய மனைகளை கட்டுவதனை ஊக்குவிப்பதற்காக வாடகைக் கட்டுப்பாட்டினை நீக்கியதாக நிதி அமைச்சர் Vic Fedeli தெரிவித்துள்ளார்.

எனினும், கடந்த வருடத்திலும் இவ் வருடத்திலும் ஏற்பட்ட தொழிலாளர்களின் சம்பளச் செலவு, நிர்மாணத்திற்கு பாவிக்கும், பொருட்களின் விலை அதிகரிப்பு, நிலத்தின் விலை அதிகரிப்பு போன்றவை மனை/வீடு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய செலவை




அதிகரிக்க செய்துள்ளது. இதனால் வாடகையில் ஏற்படும் அதிகரிப்பு தவிர்க்க முடியாததாகவே காணப்படுகின்றது.

ஏற்கனவே அதிகவிலையில் காணப்படும் வாடகை மேலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதை எதிர்வு கூறக்கூடியதாக உள்ளது. இந்நிலைமை ரொறொன்ரோ பெரும்பாக மக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரிக்கப் பண்ணப் போகின்றது.

## ரொறன்ரோவின் வாடகை நிலமை

உலகளாவிய ரீதியில் ரொறொன்ரோ நிதித்துறையில் ( Financial Services Sector ) மூன்றாவது நிலையை அடைந்துள்ளது. 2012 - 2017 காலப்பகுதியில் 55,194 புதிய தொழில் வாய்ப்புகள் ரொறொன்ரோ நகரில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா வின் முக்கிய நகரங்களாக: நியூயோர்க், பொஸ்டன் (Boston), சான்பிரான்சிக்கோ (San Francisco)களுக்கு முன்னுக்கு ரொறொன்ரோ வருகின்றது. சீனாவின் இரு நகரங்களான பீஜிங் மற்றும் சங்காய் (Shanghai) முதல் இடத்தில் இருக்கின்றன.

ரொறொன்ரோ உலகளவில் பிரசித்தி பெற்று வருவதாலும் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை ரொறொன்ரோவிற்கு சாதகமாகவே காணப்படுகின்றது. இதனால் ரொறொன்ரோவில் வாடகையின் நிலைமை இறுக்கமாகவே உள்ளது.

அடுத்த வருடம் இதேநிலமை தொடரலாம் என்றே ஆய்வுகள் கூறுகின்றன. இந்நிலைமையால் ரொறொன்ரோவில் அடுக்கு மாடி மனைகளின் விலை அதிகரித்து வருவதனைக் காணலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE - 1st & 2nd

## Real Estate - Buying & Selling

⇒ $35,000.00 வரை Personal Loan (பெர்சனல் லோன் ) தேவையா?

⇒ In 24 hours $50,000.00 வரை 2nd மோர்ட்கேஜ் தேவையா?

⇒ Unlimited Private 2nd Mortgage தேவையா?- No Income Verification

⇒ மோட்கேஜ் பலன்ஸ் கட்டாது வீட்டினை பறி கொடுக்கும் நிலையில், அடுத்து என்ன செய்வதென யோசிக்கிறீர்களா?

⇒ Refinance / Renewal - ரிபைனான்ஸ் / ரினிவல் செய்ய வேண்டுமா?

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ் தேவையா?

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா வேண்டுமா?

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**நீங்களும் வெல்லலாம்**

**$100,000**

எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.*

**மேலும் மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான அனைத்து தேவைகளுக்கும்**

## மோட்கேஜ் கிளினிக்

**உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது.**



## ஜெ (Jey) இராசதுரை

MBA. BBA (Hon). AMP

Team Leader/Mortgage Agent/Real Estate Broker

**Cell : 416 - 624 - 4843**

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

**1504 Markham Road,**
**Toronto ON M1B 2V9**
**(Markham Road & HWY 401)**

MORTGAGE ALLIANCE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3 Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொலிஸார் படுகொலையும் முன்னாள் போராளிகள் மீதான அச்சுறுத்தலும்

**- ஆதித்தன் -**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு பகுதியில் இரண்டு பொலிஸார் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் போராளிகள் மீது குறிவைக்கப் படுவதால் முன்னாள் போராளிகளும் அவர் களது குடும்பத்தினரும் அச்சமடைந்துள்ள னர். இக்கொலை தொடர்பில் சில அரசி யல்வாதிகளும், சில ஊடகங்களுமே மோச மான வதந்திகளை பரப்பி வருகின்றமையை காணமுடிகின்றது.

கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி அதி காலையில் மட்டக்களப்பிலுள்ள வவுணதீவு பகுதியில் காவல் கடமையிலீடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனந் தெரியாதோரால் படுகொலை செய்யப் பட்டனர்.

வவுணதீவு வலையிறவுப் பாலத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் சாவடியில் கடமையிலிருந்த அவர்கள் கூரிய ஆயுதங் களால் குத்தப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. தாக்குதல்களை மேற் கொண்டவர்கள் பொலிஸாரின் கைத்துப் பாக்கிகளை எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரின் கொலைகளை அதனோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் நிலைமையும் ஏற்பட்டது. வவுணதீ விலுள்ள முன்னாள் போராளிகளின் வீடுகளுக்குச் சென்ற படைப் புலனாய்வுப் பிரிவினர் தேடுதல்களை நடத்தியதுடன், விசாரணையிலும் ஈடுபட்டனர். முன்னாள் போராளிகளின் பெயர் பட்டியலுடன் சென்ற அவர்கள் குறித்த பெயர்களைக் கொண்டவர்கள் வீட்டிலிருக்கின்றார்களா அவ்வாறில்லையெனில் அவர்கள் தற்போது வதியும் அல்லது தொழில் புரியும் இடங்களின் விபரங்களையும் திரட்டினர்.

அப்பகுதியில் மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் கைது செய்யப்பட்டார். அவருடன் பணியாற்றியவர்களை கைது செய்யவும் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கைதானவருடன் கிளி- நொச்சியை சேர்ந்த ஒருவரும் பணியாற்றியதாக கூறி அவரைக் கைது செய்வதற்காக கிளிநொச்சி பொலிஸ் விசேட குழுவொன்று தேடுதல் நடத்தியது. இந்நிலையில் வட்டக்கச்சிப் பகுதியை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முன்னாள் போராளி இராசநாயகம் சர் வானந்தன் (வயது 48) என்பவர் கிளிநொச் சிப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். சந்தேக நபரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றதன் பின்னர், அவரை குற்றப் புலனாய்வாளர்களிடம் ஒப்படைத்தனர்.



மாவீரர் நாள் நிகழ்வு நடத்துவதற்குப் பொலிஸார் இடையூறு வழங்கியதால், அதற்குப் பழிவாங்குவதற்காக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்ற கோணத்தில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களே இந்தப் படுகொலையை செய்துள்ளனர் என கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள நாளிதழ்கள் செய்தி வெளியிடுகின்றன.

விடுதலைப்புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண தளபதியாக இருந்தவரும், பின்னர் மஹிந்த அரசாங்கத்தில் பிரதியமைச்சர் பதவி வகித்தவருமான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளி தரன் இப்பொலிஸாரின் படுகொலைக்கு முன்னாள் விடுதலைப்புலிகளே காரணம் என்று தெரிவித்திருக்கின்றார். விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் இறுதி யுத்தத்தில் உயிரி ழக்கவில்லை என்றும், அவர் நோர்வே நாட்டில் உயிருடனிருப்பதாகவும் புதிய தகவல் ஒன்றையும் அவர் வெளியிட்டிருக் கின்றார். சிங்களப் பத்திரிகை ஒன்றிற்கு இத்தகவல்களை அவர் கூறியிருக்கின்றார்.

அத்துடன், 'நல்லாட்சி அரசாங்கம்' நாட்டின் புலனாய்வுப் பிரிவை செயலிழக்கச் செய்துள்ளதெனவும், தேசிய பாதுகாப்பைப் புறக்கணித்து பாதுகாப்பு படையினருக்கு அவமரியாதையை ஏற்படுத்தியுள்ளது என்றும், இதன் காரணமாக விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்குவது ஆச்சரிய மானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருணா கூறியிருப்பது பாரதூரமான விடய மாகும். மஹிந்த அரசாங்கத்தின் போது முன்னாள் போராளிகளும் அவர்களது குடும்பத்தினரும் அச்சத்துடன் வாழும் நிலை இருந்தது. அவர்கள் மட்டுமன்றி தமிழ் ஊடகவியலாளர்களும் பொதுமக் களும் கூட அச்சுறுத்தப்பட்டனர். ஆட்சி மாற்றத்தின் பின்னர் நேரடி அச்சுறுத்தல்கள் இல்லாத நிலை ஏற்பட்டது. கருணாவின் கருத்து முன்னாள் போராளிகளும், தமிழ் மக்களும் தொடர்ந்தும் ஓர் இறுக்கமான சூழலில் வைக்கப்பட வேண்டும் என்பதாகவே உள்ளது. அதுவே அவரது ஆசை என்பதாகவும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. கருணாவின் இக்கருத்திற்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியிருக்கும் பதில் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவின் தலைவர் பொட்டு அம்மான் வெளிநாடொன்றில் உயிருடன் உள்ளார் என கருணா கூறியிப்பது முழுப் பொய் என அவர் குறிப்பிட்டுள்ளார். பொட்டு அம்மான் யுத்தத்தின் இறுதித் தருணங்களின் போது வெடிகுண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்துகொண்டார் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இத்தக வலை கே.பி தெரிவித்தார் எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யுத்தம் இடம்பெற்ற போது கருணா அம்மான் எனப்படுபவர் கொழும் பிற்கு அழைத்து வரப்பட்டு பாதுகாக்கப் பட்டார் என்றும், எனினும் பிரபாகரன் எங்கிருக்கின்றார் என்ற தகவல்களை அவர் படையினரிற்கு வழங்கவில்லை என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். யுத்தம் முடிவடைந்த பின்னர் கருணா இரவு விடுதிகளில் காணப்பட்டார் என்றும், அவ் வாறான நபர் தற்போது ஏற்பட்டுள்ள அரசி யல் நெருக்கடியை பயன்படுத்தி கருத்துக் களை வெளியிடுகின்றார் எனவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

பொட்டு அம்மான் இறுதித் தருணம் ஒன்றில் உடலில் வெடிகுண்டுகளுடன் காணப்பட்டதாகவும், பின்னர் ஒரு கட்டத்தில் அவர் இறுக்கமானதோர் பகுதியை ஊடறுத் துச் செல்ல முற்பட்டு அது முடியாமல் போகவே உடலிலிருந்து குண்டுகளை வெடிக்கவைத்து தற்கொலை செய்து கொண்டதாகவும் முன்னாள் போராளிகள் சிலர் கூறுகின்றனர். இதில் சரத் பொன்சேகா கே.பி. சொன்னதைக் குறிப் பிட்டு தெரிவித்திருக்கும் கருத்து சரியான- தாகவே தோன்றுகின்றது. அடுத்து கருணா குறித்து அவர் கூறிய விடயமும் சரி யானதே. போர் முடிவுற்றதன் பின்னர் கருணா இரவு விடுதிகளில் மதுவருந்தி கூத்தாடும் காட்சிகளை கூகுலில் தேடிப் பார்த்தே அறிந்து கொள்ளலாம்.

இவர் போன்றோரின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பில் யாரும் கவனத்தில் கொள்வது தேவையற்றது எனினும், அவர் முன்னாள் போராளிகளை ஆதாரமின்றி குற்றம் சாட்டுவதும் பொட்டு அம்மான் வெளி நாட்டில் உயிருடனிப்பதாகவும் அவரது ஆட்களின் நடவடிக்கைகள் நாட்டுக்குள் இருப்பதாக கூறுவதும் உள்நோக்கமுள்ள தாகும். அவரது மனிதாபிமானமற்ற மனநி லையின் வெளிப்பாடாகும். இனவாத அரசி யல்வாதிகளுக்கும், ஊடகங்களுக்கும் அவரது இந்தக் கருத்துக்கள் ஊக்க மளிப்பதாகவே அமைந்துள்ளன.

இதேவேளை, பொலிஸார் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 39



குரு அரவிந்தன்

கனடாவின் முதற்குடி மக்களில் இனுவிட், இன்னு முதற்குடி மக்களும் முக்கிய இடம் வகிக்கின்றனர். ஆதிகாலத்தில் அரசியல் ரீதியாக நாடுகளோ அல்லது மாகாணங்களோ பிரிக்கப்படவில்லை. எனவே முதற்குடி மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களைக் கருத்தில் கொண்டு குறிப்பாக குடிநீரும், உணவும் கிடைக்கக் கூடிய இடங்களில் வாழ்ந்தனர். முக்கியமாக ஆறுகள் அல்லது ஏரிகள் உள்ள இடங்களிலும், வேட்டையாட அல்லது கடல் உணவுகளைப் பெறக்கூடிய இடங்களே அனேகமாக அவர்களின் வதிவிடங்களாக இருந்தன. ஆசியக் கண்டத்துடன் தரை-வழிப் பாதைத் தொடர்பு இருந்ததால் அப்பாதை வழியாக வந்து இப்பகுதிகளில் குடியேறி இருந்தனர். அவர்களின் பரம்பரையினரில் சிலரே இப்பிரதேசங்களில் தற்போது வாழ்கின்றர். வடக்கே உள்ள குளிர் பிரதேசமான லாபரடோர் மாகாணத்தில் வடக்கு இனுவிட் மக்களும் தெற்கு இனுவிட் மெற்ஸ் இனத்தவரும் மற்றும் இன்னு இனத்தவரும் உள்ளனர்.

ஐரோப்பியர்களான நோர்ஸ், போத்துக்கேயர், பாஸ்குயூஸ், பிரெஞ்சு, டச் மற்றும் பிரித்தானியர்களை இவர்கள் எதிர்கொள்ள வேண்டி இருந்தாலும், வெளியுலகிற்கு வராது உள்பகுதிகளில் மறைந்து வாழ்ந்ததால் இவர்களால் அதிகம் அறியப்படவில்லை. 1960களில்தான் இவர்களது றிசேவ் பகுதிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டன. இவர்கள் வாழும் இந்த லாபரடோர் பிரதேசம் கனடாவின் நியூபவுன்லாந்து மற்றும் லாபரடோர் மாகாணத்தின் வட பகுதியில் அமைந்துள்ள மண்டலமாகும். இந்தப் பகுதி அத்திலான்டிக் கனடாவின் வடகோடியில் அமைந்துள்ள பெரிய புவியியல் பகுதியாகவும் இருக்கின்றது. மேலும் இப்பகுதி நியூபவுண்ட்லாந்திடமிருந்து பெல் ஐல் என்ற நீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தின் மேற்கிலும் தெற்கிலும் கியூபெக் மாகாணம் அமைந்து உள்ளது. அதேசமயம் கனடியப் பகுதியான நூனவுட்டுடன் கில்லினிக் தீவு மூலமாக சிறு எல்லையைப் பகிர்ந்துள்ளது. நியூபவுண்ட்லாந்து தீவில் இருந்து வேறுபட்ட இந்தப் பிரதேசம் 113,640 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. லாபரடோரின் பரப்பளவு நியூபவுண்ட்லாந்து தீவின் பரப்பை விட இருமடங்காக இருந்த போதிலும் இங்கு சுமார் 27,000 மக்களே வாழ்கின்றனர். 1940களின் பிற்பகுதியில் இயற்கை வளங்கள் காரணமாக இனுவிட் அல்லாத மக்கள் தொழில் நிமிர்த்தம் இப்பகுதியில் வந்து குடியேறினர்.

பாதர் லோறியின் 1930ஆம் ஆண்டு அறிக்கையின்படி 18ஆம் நூற்றாண்டில் இன்னு இனமக்கள் அப்பகுதியில் வாழவில்லை என்பதை அறிய முடிகிறது. ஆனால் 1700களில் இரு இனங்களுக்குள் ஏற்பட்ட பகை காரணமாக இன்னு இன மக்கள் அப்பிரதேசத்தில் இருந்து இறோக்குயோஸ் இன மக்களால் விரட்டப்பட்டிருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். 20ஆம்



நூற்றாண்டில் குளிர்காலத்தில் காட்டுப் பகுதிகளிலும், கோடைகாலத்தில் கரை-யோரப் பகுதிகளிலும் தங்கியிருந்து வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களில் இவர்கள் ஈடுபட்டதாகத் தெரிகின்றது. கரையோரப் பகுதிகளில் மீன், சீல், கடற்பறவைகள் போன்றவற்றை உணவாகக் கொண்டிருந்தனர். 16ஆம் நூற்றாண்டில் லபரடோரின் தென் பகுதில் தங்கியிருந்த பாஸ்கியூ மீனவர்களை இவர்கள் சந்தித்தாகவும், 17ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு, 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரைச் சந்தித்ததாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன. கோடைகாலத்தில் சென். லோரன்ஸ், லேக் மெல்விலி, யுன்ஹாவா குடாக்கரை மற்றும் லபரடோரின் அத்திலாண்டிக் கடற்கரையோரம் போன்ற இடங்களில் இவர்கள் தங்கியிருந்ததைக் குறிப்பிடலாம். 20ஆம் நூற்றாண்டில் இந்த இடங்களை அவர்கள் மெல்ல மெல்ல தங்களின் நிரந்தர குடியிருப்பாக மாற்றிக் கொண்டனர்.

தொடக்கத்தில் தோல் வியாபாரத்திற்காக ஐரோப்பாவில் இருந்து வந்தவர்களிடமோ, அல்லது மதமாற்றம் காரணமாக வந்த மிஸனரிமாருடமோ இவர்கள் தொடர்பு கொள்ளாமல் தங்கள் தனித்துவத்தைப் பேணிக்காத்தனர். ஆனால் 19ஆம் நூற்றாண்டில் வர்த்தக நோக்கத்தோடு வந்தவர்களின் தந்திர வலையில் சிக்கிக் கொண்ட இவர்களில் சிலர் ஆடம்பரப் பொருட்களுக்காக வர்த்தகர்களின் விருப்பப்படி வேட்டையாடுவதைக் கைவிட்டனர். மதமாற்றம் செய்யப்பட்டவர்கள் கூட கோடைகாலத்தில் மிஷனரிமாரை சந்திப்பதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. முதலாம் உலக யுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் தங்களுக்கான பகுதி-களை இவர்கள் எல்லைகளை வரையறை செய்து பாதுகாக்கத் தொடங்கினர். ஏனைய இனத்தவர்கள் அப்பகுதிகளில் நடமாடுவதைத் தடுக்கவும் முற்பட்டனர். அதனால் சிறந்த வேட்டையாடக்கூடிய பகுதிகளைத் தமதாக்கிக் கொண்டனர். 1900களில் இப்பகுதி காடுகளில் மிருகங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக கரிபு இன மான்கள் குறையத் தொடங்கியதால் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் இன்னு இன மக்கள் கரையோரம் நோக்கி நகரத் தொடங்கினர்.

இன்னு இன மக்களின் வதிவிடங்களும், வாழ்க்கை முறையிலும் 1980களிலும், 1990களிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டது. இராணுவ விமானங்கள் அவர்களின் குடியிருப்புகளுக்கு மேல-ாகவும், வேட்டையாடும் பகுதிகளுக்கு மேலாகவும் மிகப்பதிவாகப் பறப்பில் ஈடுபட்டதால், தங்களை அது பாதிப்பதாக அவர்கள் அரசிடம் முறையிட்டனர். இதைவிட இப்பகுதியில் உள்ள வொய்ஸி குடாப் பகுதியில் உலோகம் கண்டு பிடிக்கப்பட்டதால், அவற்றைத் தோண்டி எடுப்பதற்காகச் சுரங்கம் தோண்டும் வேலைகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக யந்திரங்களும், தொழிலாளர்களும் அப்பகுதிக்குக் கொண்டு வரப்பட்டனர். இன்னுக்களில் ஒரு பகுதியினர் தங்களுடைய இயற்கையான வாழ்க்கை பாதிக்கப்படுவதாக இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனாலும் அரசு இத்திட்டத்தை நிறுத்தாது என்பது தெரிந்ததால், வேறு ஒரு பகுதியினர் தமக்கு இத்திட்டத்தில் வரும் இலாபத்தில் பங்கு தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். கனடாவின் இன்கோ என்ற நிறுவனம் இப்பகுதியில் உலோகத்தைத் தோண்டி எடுப்பதால், அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இப்பகுதி இன்னு மக்களுக்கு அதற்கான இலாபத்தில் பங்கு கொடுக்கின்றனர்.

சுரங்கம், தொழிற்சாலை போன்றவற்றை ஆரம்பித்ததால் இப்பகுதி மக்கள் இடம் பெயர வேண்டி வந்தது. தங்கள் பாரம்பரிய இடத்தை விட்டு வெளியேறியதால், இடப்பெயர்வு காரணமாக அவர்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் தங்கள் பாரம்பரிய வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களையும் கைவிட வேண்டி வந்தது. 1990களில் இப்பகுதியில் மது பானம், போதைவஸ்து போன்றவற்றின் ஆளுமை கட்டுபாடற்ற நிலையில் அதி-கரித்ததால் டேவிட் இன்லெட் பகுதி அறிக்கையின்படி இன்னு மக்களிடையே மரணங்களும், தற்கொலைகளும் பெரிய அளவில் அதிகரித்து இருந்தன. 1993ஆம் ஆண்டு ஆறு இன்னு இனச்சிறுவர்கள் போதைவஸ்து பாவிக்கும் வீடியோ ஒன்று வெளிவந்ததால் அது முக்கிய செய்தியாக உலகெல்லாம் பரவியிருந்தது. அதே வருடம் உள்ளூர் வாசிகள் வேறு இடத்திற்கு இடம்பெயர விரும்பிய போது அரசு அதற்கான செலவை ஏற்றுக் கொண்டது. 2002ஆம் ஆண்டு, 2003 ஆண்டுகளில் 680 பேர்வரையில் டேவிட் இன்லெட் பகுதியை விட்டு வெளியேறி சுமார் 15 கி-லோமீட்டர் மேற்கு நோக்கிச் சென்று நட்ராஸிஸ் பகுதியில் குடியேறினர். 2008 ஆம் ஆண்டு இப்பகுதியில் மதுபானம், போதை வஸ்துப் போன்றவற்றின் பாவனை முற்றாகத் தடுக்கப்பட்டது. இப்பகுதியில் மாதுபானம் வாங்கவோ விற்கவோ கூடாது எனச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.



நில உரிமை சம்பந்தமாக அரசுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஓரளவு கல்வி அறிவு பெற்ற இன்னு இன மக்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பதற்காக ஒன்றுபட்டு மன்றம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர். 1976ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நஷ்காப்பி மவுண்டன் இன்னு மன்றம் என்ற பெயர் 1990ஆம் ஆண்டு நஸ்காப்பி நேஷன் என்று மாற்றப்பட்டது. தாங்கள் இழந்த தங்களுடைய பரம்பரை நிலத்திற்காகவும், தங்கள் மயானத்திற்காகவும் பணம் தரவேண்டும் என்ற கோரிக்கையை தற்போது இவர்கள் முன் வைத்துள்ளனர். 2002 ஆம் ஆண்டு இன்னு இன மக்கள் மத்திய அரசால் முதற்குடி மக்களில் ஓர் இனமாக அங்கீ-கரிக்கப் பட்டனர். 2008ஆம் ஆண்டு 2200 இன்னு மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததற்கான பதிவுகள் இருக்கின்றன.

REVERSE MORTGAGE*, no monthly mortgage payments
Your money for the things that you want to take care of.
MORTGAGE ALLIANCE
• Renovation
• Pay for Wedding
• Consolidate Debts
• Help children with down payment
*Outstanding balance will increase over time
1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4, Tel:1-877-366-3487, Lic# 10530





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை!

**– விகிர்தன் –**

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை அரசியல்வாதிகளின் உண்மை முகங்களை நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தோலுரித்துக் காட்டியுள்ளது. அந்த வகையில் இன்றுள்ள நிலைமையினை ஒரு பாடமாக, அனுபவமாகக் கொள்ள முடியும். எல்லா குழப்பங்களுக்குமான பொறுப்பை நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அவர் என்ன நியாயங்களைக் கூறினாலும், இந்தக் குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுபட முடியாது. இப்போது, அவர் தனது செயலை நியாயப்படுத்துவதற்காகக் கூறும் காரணங்கள் கூட குழப்பமானதாகவே வெளிப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கியமைக்கு அவர் கூறும் காரணங்கள் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. தன்னை அவர் மதிக்கவில்லை, ஊழல் மோசடிக்குத் துணை போனார். நல்லாட்சி என்ற பாதையை சீர்குலைத்தார், தன்னைக் கொலை செய்யும் சதித் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ளார் என்றெல்லாம் கூறுவதை ஏற்றுக்கொண்டாலும், ரணிலுக்கு மாற்றாக அவரால் கொண்டு வரப்பட்ட மனிதர் தொடர்பில் அவர் கூறும் நியாயங்கள் மக்கள் மத்தியில் சந்தேகங்களை தோற்றுவித்துள்ளன. அண்மையில் பத்திரிகை ஒன்றிற்கு மைத்திரி வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கும் கருத்துக்கள் அவர் குறித்து மக்கள் வைத்திருந்த மதிப்பீடுகளை தலைகீழாக்கியுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஸ மிக மோசமான மனிதராக மைத்திரியால் சித்தரிக்கப்பட்டார். அவரது குடும்ப ஆட்சி, ஊழல் மோசடி, மனித உரிமை மீறல் தொடர்பில் கடுமையான குற்றச்சாட்டுக்களை தனது தேர்தல் பரப்புரையின் போது உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவர் வெளிப்படுத்தினார். தன்னை மஹிந்த தரப்பினர் கொலை செய்யத் திட்டமிட்டதாகவும், தான் தனது குடும்பத்தினருடன் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களில் தங்கியிருந்ததாகவும் அவர் கூறினார். அவர் ஜனாதிபதியாக வெற்றி பெற்ற பின்னரும் கூட இவ்வாறான குற்றச்சாட்டுக்களை மஹிந்த தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் அவர் வெளிப்படுத்தி வந்தார். இப்போது அவை யாவும் மக்களைக் கவர்வதற்காகக் கூறப்பட்ட பொய்கள் என்பதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.



மஹிந்த தன்னை கொலை செய்ய முயன்றதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை என்றும், அவ்வாறு அப்போது தான் கூறியது தேர்தலில் மக்களைக் கவர வேண்டும், மக்களின் அனுதாபங்களைப் பெற வேண்டும் என்பதற்காகவே என்றும் அந்த நேர்காணலில் மைத்திரி தெரிவித்திருக்கின்றார். தேர்தல் பரப்புரைகளின் போது எதிரெதிர் தரப்பினர் ஒருவரையொருவர் குற்றம்சாட்டுவது பொதுவாகவே நடைபெறும் விடயம்தான். அதனையும்விட, மக்களுக்கு அதீதமான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு பின்னர் அதனை நிறைவேற்றாது காலத்தை கடத்திச் செல்வதும் சாதாரணமாக நடைமுறையிலுள்ள விடயமே. ஆனால், கொலைக் குற்றசாட்டுக்களை ஒருவர் மீது சுமத்துவது பாரதூரமானது. அது மக்களை முட்டாள்களாக்கும் செயல்.

ஜனாதிபதி மைத்திரியின் குறித்த நேர்காணலை வாசித்தவர்களுக்கு அவர் தெரிவித்த கருத்துக்கள் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. அதிகம் பேசாதவர், சர்ச்சைகளுக்குள் சிக்காதவர், அமைதி யான சிந்தனையாளர் என்றெல்லாம் இருந்த அவரைப்பற்றிய விம்பம் இன்று சிதறிப் போயுள்ளது. அரசியல் நெருக்கடிகள் விரைவில் முடிவிற்கு வந்தவிடும். ஆனால், மக்களின் அபிப்பிராயங்கள், மதிப்பீடுகளிலிருந்து அரசியல்வாதிகள் தப்பிக்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

குறுக்கு வழியை நாடியது மஹிந் தவின் தவறு

மேலும் காலமிருக்கக் கூடியதாக 2015ஆம் ஆண்டு அவசரப்பட்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தியது மஹிந்தவின் தோல்விக்கான ஒரு காரணமாகப் பலராலும் கூறப்பட்டு வருகின்றது. அதேபோன்று இப்போது, அவருக்கான ஆதரவு மக்கள் மத்தியில் கனிந்து வந்த சூழலில் அவசரப்பட்டு பிரதமர் பதவியை அவர் ஏற்றுக் கொண்டமை அவரை மீண்டுமொரு தோல்விப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் எதிர்பார்த்த வாழ்வாதார நன்மைகள் மக்களுக்கு கிட்டவில்லை. மாறாக அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி மென்மேலும் அதிகரித்துக்கொண்டே சென்றது. மஹிந்த அரசாங்கத்தில் காணப்பட்டதைப் போன்று அபிவிருத்தித் திட்டங்கள் வேகமானதாக, வெளிப்படையானதாக நடைபெறவில்லை. மஹிந்த தனது ஆட்சியில் பெற்ற கடன்களாலேயே மக்களுக்கான வாழ்வாதாரப் பணிகளை மேற்கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படுவதாக 'நல்லாட்சி' அரசாங்கம் கூறிக்கொண்டிருப்பதை மக்கள் செவிமடுத்துக் கொண்டிருக்கத் தயாராக இல்லை. ஆகவே மீண்டும் மஹிந்த ஆட்சி வரவேண்டும் என தென்னிலங்கை மக்கள் விரும்பத் தொடங்கினர்.

கடந்த ஆண்டு மஹிந்த அணியினரால் நடத்தப்பட்ட மேதின நிகழ்வில் திரண்ட மக்கள் கூட்டம் இதனை வெளிப்படுத்தியது. இது நல்லாட்சி அரசாங்கத்தை அப்போது அச்சம் கொள்ளவும் வைத்தது. அதில் தொடங்கி கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகள் மஹிந்த ஆதரவிற்கு மேலும் வலுவூட்டியது. இந்த நிலையில், இன்னும் ஒரு வருடம் பொறுத்திருந்தால் மஹிந்த ராஜபக்ஸ தேர்தலின் மூலம் நியாயமான வழியில் பிரதமராகியிருக்கலாம். நாட்டில் மஹிந்த ஆட்சி மீண்டும் ஏற்பட்டிருக்கலாம். இதனை இன்று குமார வெல்கம போன்ற மஹிந்த ஆதரவாளர்கள் சிலரே சுட்டிக்காட்டி வருகின்றனர். மஹிந்தவின் அவசரம் அவரை குறுக்கு வழியை நாடச் செய்து குழப்பிவிட்டுள்ளது.
முன்னர் சோதிடர் ஒருவரை நம்பி மோசம்போன மஹிந்தவை இத்தடவையும் யாரும் ஏமாற்றிவிட்டார்களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. அண்மைய நாட்களில் அவரிடம் காணப்படும் மந்திரப் பொருட்கள் இவ்வாறான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எழுச்சி பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மைத்திரியும், மஹிந்தவும் செய்த காரியங்களால் சோர்வு நிலையிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இன்று எழுச்சிபெற்று வருகின்றது. உள்ளே முரண்பாடுகளைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இன்று தங்களுக்குள் ஒற்றுமையுடன் காணப்படுகின்றனர். இன்று அவர்கள் நடத்தும் போராட்டங்களில் மக்கள் திரளாக பங்கேற்கின்றனர். நடைபெற்ற அப்பட்டமான அரசமைப்பு மீறல், ஜனநாயக மீறல் என்பனவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் சிறுபான்மைக் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தங்களின் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று மைத்திரி, மஹிந்த தரப்பினருக்கு எதிரான நடவடிக்கையில் பிரதான பங்கினை வகிக்கின்றது. கருத்து ரீதியாக முரண்பட்டு வந்த முஸ்லிம் கட்சிகளான ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவும் மைத்திரி, மஹிந்த தரப்பினருக்கு எதிராகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

இலங்கையில் மாறிமாறி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுவரும் இரண்டு பிரதான தரப்புகளையும் புறக்கணிக்கின்ற ஜே.வி.பியினர் கூட நேரடியாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கும் கருத்தை வெளியிடாமல், பல சந்தர்ப்பங்களில் ரணில் விக்ரமசிங்கவை கடுமையாக விமர்சித்து வந்தபோதும், மைத்திரி, மஹிந்த தரப்பினரை கடுமையாக எதிர்த்து நிற்கின்றனர்.

இதே நிலைப்பாட்டில்தான் இன்று நாட்டு மக்களும் உள்ளனர். கட்சிகளை தவிர்த்து, எது சரி எது பிழை என்பதை சிந்தித்துப் பார்க்கும் வகையிலேயே மக்களின் மனநிலையும் உள்ளது. யாரை ஏற்றுக்கொள்வது என்பதை விடவும் யாரையெல்லாம் நிராகரிக்க வேண்டும் என்பதையே மக்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் தீர்மானிக்கலாம். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல்களும், மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அநாகரிகமான-வெறித்தனமான நடவடிக்கைகளையும் நேரடியாக தொலைக்காட்சியில் கண்ணுற்ற மக்கள் அவர்களை வெறுக்கின்றனர்.

இதேவேளை, அடுத்துவரும் தேர்தல்களில் மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மஹிந்தவின் பொதுஜன பெரமுனவும் இணைவது குறித்த பேச்சுக்கள் தற்போது அடிபட்டாலும் அந்த இணைவு யாருடைய தலைமையிலிருக்க வேண்டும் என்பதில் தற்போதே முரண்பாடுகள் எழ ஆரம்பித்து விட்டன. எனவே, இவை யாவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இப்போது சாதகமாகவே அமைந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ரணில் விக்ரமசிங்க வேறொருவருக்கு விட்டுக்கொடுப்பாரேயானால் அக் கட்சியின் பலம் மேலும் அதிகரிக்கலாம்.


பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை என்பது மைத்திரி, மஹிந்த இருவருக்குமே இன்று பொருந்தும்.

விளம்பரம்
VLAMBARAM
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
பதிப்பு: Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி
இரத்தினம் நித்தியானந்தன்

## குருசேத்திரப் போர்

மகாபாரத காவியத்தில் இந்தப் போர்க் காட்சியே முக்கியமானது. இக்காட்சி குரு சேத்திரத்தில் வரலாற்றுப் புகழ் பெற்ற போரை நினைவுபடுத்துகிறது. இக்காட்சி பெரியப்பா மகன்களுக்கும் சித்தப்பா மகன் களுக்கும் இடையில் நிகழ்ந்தப் போரை வர்ணிக்கிறது.



எதிர் எதிர் திசைகளிலிருந்து கௌரவப் படைகளும் பாண்டவர்கள் படைகளும் மோதுவதற்காக ஊர்வலகமாக வருகின் றன. இரண்டு போர் வீரர்களை அவர்கள் அணிந்திருக்கும் தலைப்பாகைகள் வித்தி யாசப்படுத்திக் காட்டுகின்றன. காலாட் படைகள் போர்க்களத்தில் ஊர்வலமாய் செல்வதில் இந்தக் காட்சி ஆரம்பமாகிறது. இசைவாணர்கள் இசைக் கருவிகளை வாசித்தப்படி செல்கிறார்கள். போர்க் காட்சி வீரர்கள் ஒருவரோடு ஒருவர் கைகளால் மோதுவதாக இருக்கிறது. வீரர்கள் இறந்து கிடக்கிறார்கள். தேர் மீது, யானை மீது, குதிரை மீது படைத்தளபதிகள் அமர்ந்து போரை மேற்பார்வையிடுகிறார்கள். மகா பாரத வீரர்களில் ஒருவரும், கௌரவப் படைத் தளபதியுமான பீஷ்மர் அம்புகளால் தைக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கிறார். சுற்றிலும் படை வீரர்கள்.

## தென்மேற்கு கூடாரம்

கூடாரத்தில் நுழைந்து நம்மை நோக்கிய காட்சிகளைப் பாருங்கள். இங்கே இருக் கும் சிற்பங்கள் கிருஷ்ணனின் வாழ்க்கை யையும், இராமாயணக் காட்சிகளையும் அற்புதமாக விளக்குகின்றன.

## கிழக்கு

அ. வலதுபுறம் - தண்ணீர்த் திருவிழா, இரண்டு அப்ஸரஸ்களுடன் இரு கப்பல் கள். சதுரங்கம் விளையாடுவோர் - மேல் கப்பலில்.

வலது புறம் - சேவல் சண்டை

ஆ. நடுவில் - கதவுக்கு மேலே பூசை செய்யப்படும் இந்துக் கடவுள்.

தெற்கு

இ. வலதுபுறம் மேலிருந்து கீழ், வாலிக்கும் சுக்ரீவனுக்கும் நடை பெறும் போர். வாலி யின் மீது ராமன் மறைந்திருந்து அம்பு தொடுக்கிறான். வாலி தனது மனைவியின் மடியில் படுத்துக் கிடக்கிறான். குரங்குகள் அவனது மரணத்துக்காக சோகமுறுகின்றன.

ஈ. நடுவில் கதவுக்கு மேலே அசுரனின் கொலைத் தீயை அணைக்கும் கிருஷ்ணன்.

மேற்கு



உ. வலது புறம் - கைலாச மலை மீது தனது மனைவி பார்வதியுடன் அமர்ந்திருக்கும் சிவன்.

ஊ. நடுவில் - கதவுக்கு மேலே - தன்னைக் கட்டி வைத்த பாறையோடு மரத்தை வேரோடுப் பிடுங்கும் கிருஷ்ணன்.

இடதுபுறம் - பச்சோந்தியாக மாறு வேடம் பூண்ட இராவணன் இந்திரனின் அரண் மனையில் தோன்றுதல்.

வடக்கு

எ. வலதுபுறம் - பாற்கடலைக் கடைதல். மேலே - சூரியனும், நிலவும்.

ஏ. நடுவில், கதவுக்கு மேலே - பொன்மானாக வந்த மாரீசனைக் கொல்லும் ராமன்.

ஐ. இடப்புறம் - இந்திரனின் கோபத்தால் உருவான புயலிலிருந்து இடையர்களையும் அவர்களது மந்தைகளையும் காப்பாற்ற கோவர்த்தன மலையைத் தூக்கும் கிருஷ்ணன்.

தெற்கு

இரண்டாம் சூரியவர்மனின் படை கெமர் களுக்கும் அவர்களுடைய எதிரிகளுக்கும் இடையில் நடந்த போரில் பெற்ற வெற்றி யின் ஊர்வலத்தை அற்புதமாக விளக்கும் காட்சி. இங்கே உள்ள காட்சிகள் வீரர்கள் கைகளால் ஒருவரோடு ஒருவர் மோதுவதை விளக்குகின்றன. இந்தப் போர்க்களக் காட்சிக்கு பின்புலத்தில் காட்சியளிக்கும் மரங்கள், விலங்குகள் யாவும் வித்தியாசமான காட்சிகள். இந்த அரங்கின் முக்கிய கதாநாயகனாக தோன்றுவது அங்கோர்வாட்டை கட்டிய இரண்டாம் சூரியவர்மன். இரண்டு இடங்களில் இவன் காட்சியளிக்கிறான். இங்கே இருக்கும் கல்வெட்டு, இச்சிலை கள் அவனுடைய மறைவுக்குப் பிறகு வைக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. இந்த அரங்கில் தொடர்பின்றி வெட்டி வைத்த நீண்ட சதுரமான துவாரங்களில்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

Rising Scholars of Canada
"ignite your passion"
GRADE 10 LITERACY EXAM
PREPARATION CLASS
REGISTER NOW!
PREPARE FOR THE
GRADE 10 OSSLT

TAUGHT BY
Aparna B. Srikanthan
BSc, MEd, Doctor of Education Candidate (EdD)
1585 Markham Road, Unit 213
Scarborough, ON. M1B 2W1
(416) 827- 2681
• OFFICIAL LITERACY CURRICULUM DEVELOPER FOR YHS
• APPROVED BY MINISTRY OF EDUCATION
• OLC40 TEACHER



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TBC Toronto Business College

You May Be Eligible For A
GOVERNMENT GRANT OF $28000
FOR STUDYING & LIVING
(unemployment or maternity)
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை



Second Career candidates & International Students Welcome

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH ,2019

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH ,2019

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Accredited by the National Association of Career Colleges
STARTS JAN. 7TH , 2019

PERSONAL SUPPORT WORKER (WEEK END)
38 Weeks Certificate
Immediate Job Opportunities

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
STARTS JAN. 7TH ,2019

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016 , Access 2016
Quick Books 2017
Sage 50 Accounting 2017
Sage 300 2017 , Auto CAD
First Aid & CPR
Food Handler Certification

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Placement Assistance
- Ample Free Parking

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# காலநிலை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இதற்குப் பதிலளித்த கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தான் கனடாவின் குறிக்கோளை மாற்றவில்லை எனவும், ஒன்ராரியோ முதல்வரே இலக்கங்களைத்




தமக்கு சாதகமாக மாற்றி சாதுரியமாகப் பேசுகிறார் என்றார். கனடாவின் குறிக்கோள் பாரிஸ் மாநாட்டில் உறுதியளித்த மாதிரி 'நாடு முழுவதும் வெளியிடும் பசுமை வாயுக்களின் அளவை 2005ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பசுமைவாயுக்களின் அளவிலும் பார்க்க 30% குறைவாக 2030ஆம் ஆண்டில் வெளியிடப்பட வேண்டும்' என்பதே என்றார்.

ஆனால் கனடாவில் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவையான மசகு எண்ணை உற்பத்தி செய்யும் அல்பேட்டா மற்றும் சஸ்கச்சுவான் மாகாணங்களால் தனித்து பசுமைவாயுக்களின் வெளியேற்றத்தை 30%ஆல் குறைக்க முடியாது. ஒன்ராரியோ போன்ற மாகாணங்கள் பசுமை வாயுக்களின் வெளியேற்றத்தை மேலதிகமாகக் குறைப்பதன் மூலம் கனடா நாடு தழுவிய 30% குறைப்பை அடையமுடியும் என்றார்.

ஒன்ராரியோ மாகாணத்தின் முந்தைய லிபரல் அரசு காபன் வெளியேற்றத்திற்கு விலை நிர்ணயித்து அமல்படுத்திய பசுமை வாயுக்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் மூலம் பசுமைவாயுக்கள் வெளியேற்றம் 2005ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அளவிலும்பார்க்க 40%ஆல் 2030ஆம் ஆண்டில் ஒன்ராரியோவில் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டத்தை தற்போதைய ஒன்ராரியோ அரசு இரத்துச் செய்துவிட்டது.

மாநாட்டு மட்டபத்திற்கு வெளியே பலர் கனடா இன்னும் தீவிரமாக மாசுக் கட்டுப்பாடு விடயங்களில் ஈடுபட வேண்டுமென பதாதைகள் தாங்கியவண்ணம் நின்றனர்.




மாநாட்டின் பின்னர் அல்பேட்டா முதல்வர் Rachel Notley ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் முதல்வர்களது மாநாட்டில் தங்களது மசகு எண்ணையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எவ்வாறு கனடாவின் துறைமுகங்களுக்கு எண்ணைய் கொண்டுசெல்வது என ஆராயப்பட்டது என்றார். இது தொடர்பாக 7,000 தொடருந்து எண்ணை தொட்டிகள் (Tanks) வாங்குவது பற்றி ஆராயப்பட்டது. ஆனால் மத்திய அரசின் உதவி பெறுவது பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றார்.

மாநாட்டின் முடிவில் குவிபெக் முதல்வர் Francois Legault ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமது மாகாணத்தின் முக்கிய பிரச்சினையான அமெரிக்காவில் இருந்து அகதிகள் வருவது பற்றி ஆராயப்பட்டது. இதற்கு குவிபெக் மாகாண அரசு $300 மில்லியன் செலவழிக்கிறது. இதன் ஒரு பகுதியை மட்டுமே தற்போது கனேடிய மத்திய அரசு தருகிறது. இம்மாநாட்டில் மத்திய அரசு இச்செலவில் பெரும்பகுதியை ஏற்றுக்கொள்வது பற்றி விவாதிக்கப்பட்டது என்றார். ஏற்கனவே ஒன்ராரியோ அரசும் இவ்வாறு வரும் குடிவரவாளர்களை குடியமர்த்த ஒன்ராரியோ மாகாண அரசிற்கும் $200 மில்லியன் செலவாகிறது. அதில் பெரும்பகுதியை கனேடிய மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருந்தது.



மாநாட்டின் இறுதியில் சஸ்கச்சுவான் முதல்வர் Scott Moe ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் தற்போதைய லிபரல் அரசு அமலாக்க உள்ள C69 சட்டவரைபு புதிய செயற்திட்டங்களை செயற்படுத்த முன்னர் மிகவும் கடினமான சுற்றுப்புறச்சூழல் விதிமுறைகளை ஒரு நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் எனக் கூறுகிறது. இது நிறுவனங்கள் எண்ணை வளத்திட்டங்கள் தொடங்குவதைப் பாதிக்கும். இதனால் இச்சட்டமூலத்தில் சில திருத்தங்கள் கொண்டுவர சஸ்கச்சுவான் மாகாணம் விரும்பியது. இது தொடர்பாக முதல்வர்கள் மாநாட்டில் ஆராயப்பட்டது. கனேடியப் பிரதமர் C69 சட்டவரைபில் சில மாற்றங்கள் செய்ய முன்வந்தது மிகவும் வரவேற்கத்தக்கது என்றார்.

கனேடிய மாகாண மற்றும் பிரதேச முதல்வர்கள் நாட்டின் முன்னேற்றம், பொருளா தார வளர்ச்சி, சுற்றுப்புறச்சூழலை முன்னேற்றுதல் என்பனவற்றிற்கு தொடர்ந்தும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்துவோம் என்ற ஏகமனதான கூட்டறிக்கையுடன் இம்மாநாடு முடிவுற்றது, தற்போதைய கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் ஆளுமைக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே பெரும்பாலான ஊடகவியாலாளர்களால் நோக்கப்படுகிறது.

> வாழ்க்கை என்பது நமக்கு
> திணிக்கப்பட்ட பாடம்தான்
> அதற்காக அதை வெறுக்காதே
> விரும்பி படித்துப்பார் ஒவ்வொரு
> பக்கமும் சுவாரசியம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண அரசின் மருத்துவ சலுகைகள் இல்லாத முதல் மூன்று மாதங்கள்?

## (Waiting Period for Ontario Health Card)

## கனடிய தகவல் தொடர் 297




கனடாவில் தமிழர்களின் குடும்பம் ஒன்றில் நடந்த சம்பவம் இதுவாகும். குடும்ப ஸ்பொன்ஸரில் கனடா வந்து சேர்ந்த ஒரு வயதான பெண்மணி கனடா வந்து சுமார் இரு கிழமையினுள் திடீரென நோய் வாய்ப்பட்டு ஹோமா நிலைக்குத் தள்ளப்பட்டு வைத்தியசாலையின் அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

புதிதாகக் கனடாவிற்கு வருகை தரும் குடிவரவாளர்களுக்கு முதல் மூன்று மாதத் திற்கும் வழமையான மாகாண அரசின் மருத்துவக் காப்புறுதி திட்டங்களின் (OHIP Coverage) சலுகைகள் எவையும் கிடைக் கமாட்டாது. இவர்கள் முதல் மூன்று மாதங் களுக்கும் பிரத்தியேகமான தனியார் மருத்துவ காப்புறுதியை தமது செந்தச் செலவில் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு ஒரு தனியார் மருத்துவக் காப்புறுதியும் பெற்றிருக்க வில்லை. ஸ்பொன்ஸர் செய்தவர் முதல் மூன்று மாதங்களுக்கும் உரிய மருத்துவ செலவுகளை பொறுப்பு ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மாகாண அரசின் மருத்துவக் காப்புறுதி இல்லாத முதல் மூன்று மாதங்களுக்குள், இவ்வாறான நிலையில் செலவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை வந்தால் அதற்குக் கனடா வில் ஏதாவது மாற்றுவழி உண்டா? கடந்த 2018 ஒகஸ்ட் 27இல் பின்வரும் தலைப்பில் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் கட்டுரை ஒன்று வெளியானது. மரணத்தினை



தழுவும் நிலையில் புற்றுநோயுள்ள இளைஞன் அரச நிர்வாகத்துடன் போராடு கிறார் 'Gravely ill teen battling cancer bureaucracy'. என்ற அந்தச் செய்திக் கட்டுரையின் விபரம் பின்வருமாறு.

ரோமன் ஓர்லோ (Roman Orloo) என்ற 18 வயது இளைஞன் 'உக்ரேன்' (Ukraine) நாட்டிலிருந்து குடிவரவாளராக இவ்வருடம் கனடாவினுள் வந்து சேர்ந்தார். வந்து சேர்ந்து மாகாண அரசின் மருத்துவ சலுகைகள் இல்லாத முதல் மூன்று மாத காலத்தின் ஆரம்பத்தில் 'புற்று' நோயால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவருக்கு விசேட சத்திர சிகிச்சை அவசரமாகச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சத்திரசிகிச்சை செய்யா விட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். ஆனால் சத்திர சிகிச்சையில் ஏற்படப் போகும் பாரிய செலவிற்காக மூன்று மாதங் கள் காத்திருக்க வேண்டிய பரிதாபகரமான நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த இளைஞனுக்கு துரித கதியில் சிகிச்சை வழங்கினால் புற்று நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. எனவே இந்த சட்ட மூலத்திலிருந்து விதி விலக்கு வழங்குமாறு மருத்துவக் குழுவும் மாகாண அரசினைக் கோரியிருந்தது. இறு தியாக 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை உட்பட கனடாவின் ஆங்கில ஊடகங்களும் இந்த விடயத்தை மனிதாபிமான முறையில் அரசினைக் கோரியிருந்தன. இந்தக் கட்டுரையினை எழுதும் வரை இக்குறிப்பிட்ட சட்ட மூலத்தில் இருந்து மாகாண அரசு விதி விலக்கினை வழங்கியதாகத்தெரிய வரவில்லை.

கனடாவில் ஒன்ராரியோ, கியூபெக், பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய மூன்று மாகாணங் களில் மட்டுமே இச்சட்டவிதி உள்ளது.

**இப்படியான பிரச்சினையில் தவிப்பவர் களுக்குத் தீர்வு என்ன?**

ஒருவர் கனடாவினுள் வந்து சேரமுன்பு அல்லது வந்து சேர்ந்தவுடன் இம்மூன்று மாதங்களுக்கும் தனியார் மருத்துவக் காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்திருக்க வேண்டும்.

**மாற்றுவழி என்ன?**

அதனையும் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையின் செய்திக் கட்டுரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இங்கு இம் மூன்றுமாத காலதாமதம் என்ற சட்டப் பிரிவில் ஒரு மனிதாபிமான அடிப்படையில் விதி விலக்கு வழங்கும் உரிமை 'மருத்துவ சேவை அப்பீல் மீளாய்வு சபை' (Health Service Appeal Review Board) என்ற மாகாண அரச நிறுவனத்திற்கு மட்டுமே உள்ளது. ஆனால் அந்நிறுவனத்திற்கும் மேற்கூறிய சம்பவத்தில் அப்பீல் விண்ணப் பம் சமர்ப்பித்து கோரிக்கை வைத்தபோதும்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)


# JOBS! JOBS! JOBS!

## TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator




Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல் நீக்கும் இயற்கை - 39


- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய "ஆசாரக்கோவை"இல் குறிப்பிடப்படும் பயனுள்ள கருத்துக்களுடன் இந்த இதழிற்கான உரையாடலை ஆரம்பிப்போம். "ஆசாரக்கோவை" நூலினை கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார் இயற்றினார். இந்த நூலிற்கு உரை எழுதிய உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையின் உதவியுடன் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சில கருத்துக்களைக் கவனிப்போம்.

ஆசாரங்களைத் தொகுத்துக் கூறும் நூல் என்பதால் ஆசாரக்கோவை என்ற பெயரைப் பெற்றது. இந்த நூலிலிருந்து நமது தலைப்பிற்குப் பொருத்தமான விடயங்களைக் கவனிப்போம். அதிகாலையில் எழுந்து பல் சுத்தம் செய்து, கண் கழுவி கடவுளை வணங்கித் தொழவேண்டும். அதன் பின்னரே நாம் செய்ய வேண்டிய வேலைகளைத் தொடங்க வேண்டும். மாலையில் கடவுளை வணங்குவது நல்லது இல்லை என்று ஆசாரக் கோவை கூறுகின்றது. தெய்வத்தை வழிபடும் பொழுதும், தீய கனவைக் காணும் பொழுதும், தூய்மை குன்றிய காலத்தும், வாந்தி எடுக்கும் பொழுதும், தலைமயிர் வெட்டிய பொழுதும், உண்ணும் பொழுதும், மாலை நேரத்தில் உறங்கியிருந்தாலும், புணர்ச்சியான காலத்திலும், மலசலங் கழித்த பொழுதிலும் நீராட வேண்டும் என்ற ஆசாரம் இந்த நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

தலையில் தேய்த்த எண்ணெயினால் எந்த உறுப்பையும் தீண்டக் கூடாது. பிறர் உடுத்திய ஆடையையும், செருப்பையும் அணியக்கூடாது. நீரில் நமது நிழலைப் பார்க்கக் கூடாது. இரவில் மரத்தின் கீழ் நிற்கக் கூடாது. நீராடும் பொழுது எச்சில் உமிழக்கூடாது. கால் ஈரம் உலர்ந்த பின்பே படுக்கைக்குப் போக வேண்டும். படுத்தோ, நின்றோ, வெளியிடத்தில் நின்றோ உணவு உண்ணக் கூடாது. உணவை உண்ணும் பொழுது கசப்பானவைகளை கடைசியிலும், தித்திப்பான பண்டங்களை முதலாகவும் மற்றவைகளை இடையிலும் உண்ண வேண்டும். மின்னலையும், எரிநட்சத்தையும், காலை ஒளியையும், மாலை ஒளியையும் பார்க்கக் கூடாது என்று ஆசாரக்கோவை கூறுகின்றது. ஆசாரக்கோவையில் குறிப்பிட்டுள்ள உடல் நலத்துடன் தொடர்புடைய ஆசாரங்களைக் கவனித்தோம். எங்களால் முடிந்தளவு நன்மை தரும் ஆசாரங்களைக் கடைப் பிடித்துக் கொண்டால் நன்மை கிடைக்கும்.

இப்பொழுது மேலும் சில இயற்கை மருத்துவத் தகவலைப் பற்றி அறிந்து கொள்வோம். நாம் உண்ணும் உணவில் இஞ்சி கலந்து சாப்பிடுவதால் உணவு எளிதில் ஜீரணமாகிறது. இஞ்சியுடன் கொத்த மல்லி துவையல் அரைத்து சாப்பிட்டால் நன்கு பசி எடுக்கும். இஞ்சி நினை வாற்றலுக்கு உகந்தது.

கர்ப்பமான பெண்களுக்கு வாந்தி, குமட்டல் போன்ற பிரச்சினைகளுக்கு பாலில் முட்டையின் வெண்கருவையும், சிறிது சோடாவையும் கலந்து சாப்பிட்டுவரக் குணமாகும். அறுகம்புல்லில் சாறு எடுத்து சப்பாத்தி மாவில் கலந்து ரொட்டி செய்து சாப்பிட்டால் நல்லது. வெள்ளைப் பூண்டு சாப்பிட்டு வந்தால் உடற்பருமன் குறையும். இதய அடைப்பு வராமல் தடுக்க வெள்ளைப்பூண்டு உதவும்.

வாயுத்தொல்லை உள்ளவர்கள் இறுக்கமான உடைகளை அணியக் கூடாது. கறிவேப்பிலையுடன் தேங்காய், உப்பு, புளி சேர்த்து துவையல் சேர்த்து சாப்பிட்டால் வயிற்றில் உள்ள வாயு வெளியேறும். கறிவேப்பிலை இலைகளை மென்று உண்டு வந்தால் வயிற்றுப் போக்கு குறையும்.

நரம்புக் கோளாறு, நினைவாற்றலில் குறைபாடு, இருமல், தொண்டை வலி போன்ற பிரச்சினைகளுக்கு துளசி இலைச்சாற்றில் தேன், இஞ்சி கலந்து சிறிதளவு பருக வேண்டும். வயிற்றுப்பொருமல், தொந்தி போன்ற பிரச்சினைகளுக்கு விளாம்பழம் நல்லது.

அன்னாசிப்பழத்தை சிறு துண்டுகளாக வெட்டிய பின்னர் ஓமத்தை அன்னாசியுடன் கலந்து நீர் ஊற்றி இரவில் கொதிக்க வைத்து ஆறவிட வேண்டும். மறுநாள் காலையில் அதனை வடித்து கிடைக்கும் நீரை வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். 10 நாட்களுக்கு இதனைச் செய்துவர தொந்தி கரையும் என சொல்லப்படுகிறது.

வாழைப்பழம், காளான், உருளைக்கிழங்கு ஆகியவை உடலுக்கு எழுச்சியைக் கொடுக்கும் உணவுகளாகும். இவற்றில் உள்ள விட்டமின் பி 6, பொட்டாசியம் போன்றவை இதற்கான காரணிகளாகும்.

இப்பொழுது வெங்காயத்தில் உள்ள மருத்துவப் பயன்கள் பற்றிக் கவனிப்போம். வெங்காயத்தை மணந்து சுவாசிக்க தலை யிடி குறையும். வெங்காயத்தை வெல்லத் துடன் சேர்த்து சாப்பிட்டால் உடலில் உள்ள பித்தத் தன்மை குறையும். வெங் காயத்தை வதக்கிச் சாப்பிட்டால் ஆசனக் கடுப்பு நீங்கும். வெங்காயச் சாற்றை



வெந்நீரில் கலந்து வாய்கொப்பளித்து வந்தால் பல்வலி குறையும். சின்ன வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நரம்புத்தளர்ச்சி குணமாகும். உடலில் ஏற்படும் தேமல் போன்ற பிரச்சினைகளுக்கு வெங்காயச்சாற்றைப் பூசிவரக் குணமாகும். வெங்காய ரசத்தை நீர் கலந்து குடித்து வந்தால் நன்றாகத் தூங்க முடியும். வெங்காயச் சாற்றை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும். அவித்த வெங்காயத்தை கற்கண்டு, தேன் ஆகியவற்றுடன் சேர்ந்து உட்கொள்ள உடலுக்குத் தெம்பைக் கொடுக்கும்.

இரத்த அழுத்தம் குறைவதற்கும் வெங்காயம் நல்லது. புகைப்பிடிப்பவர்கள் கட்டாயமாக வெங்காயச்சாற்றை ஒரு நாளுக்கு மூன்று தடவை சிறிதளவு உட்கொண்டு வந்தால் பலன் உண்டு. மாரடைப்பால் பாதிக்கப் பட்டவர்கள் சின்ன வெங்காயத்தை பயன்படுத்துவது நல்லது. தலைவலியைக் குறைப்பதற்கு வெங்காயத்தை அரைத்து நெற்றியில் பற்று போடலாம். பூச்சிக்கடி, தேள் கொட்டுதல் ஆகியவற்றால் பாதிக் கப்படும்பொழுது வெங்காயச்சாற்றைப் பூசி நிவாரணம் பெறலாம். தொண்டை கட்டி குரல் பாதிக்கப்படும்பொழுது வெங்காயத் தை சாப்பிட்டு பயனடையலாம். உடலில் உள்ள வாதத்தன்மையைக் குறைக்கவும், மூல நோயைக் குறைக்கவும் வெங்காயச் சாற்றுடன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வேண்டும். சின்ன வெங்காயம் நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்தது. முகப்பருவுக்கு வெங்காயச்சாற்றைப் பூசி நிவாரணம் பெறலாம். நகச்சுற்றுக்கு வெங்காயம், சோறு, உப்பு கலந்து அரைத்து பற்று போட்டு நிவாரணம் பெறலாம். வெங்காயத்தை பச்சையாக சாப்பிடுவது நல்லது. வெங்காயத்தில் அதிகளவு விட்டமின் சி உள்ளது. சுட்ட வெங்காயத் துடன், நெய், மஞ்சள் தூள் சேர்த்து பிசைத்து உடலில் ஏற்படும் கட்டுக்களுக்கு பற்று போட்டால் நிவாரணம் கிடைக்கும்.

வெங்காயத்தை வெட்டி திறந்தபடி வைத்து திரும்பப் பயன்படுத்தக் கூடாது. வெங்காயத்தை வெட்டி வைக்கும் பொழுது சூழலில் உள்ள நச்சுப்பொருட்களை உறிஞ்சி விடும் என்பதால் எப்போதும் வெங்காயத்தை வெட்டி வைத்துப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் அல்லது காற்றுப் போகாதவாறு மூடிய பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். (தொடரும்)






ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜினி எங்கே நின்றாலும் எதிர்ப்போம்!

## நேர்காணல்: இயக்குனர் கௌதமன்

**- சந்திப்பு கண்ணன் -**

தமிழகத்தில் கட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது. இப்போது மேலும் ஒன்று. புதிய கட்சி தொடங்குவதாக அறிவித்திருக்கிறார் திரைப்பட இயக்குநர் கௌதமன். அவரை சந்தித்தோம்.

**திரைத்துறையிலிருந்து வந்திருக்கும் இன்னொரு கட்சி என்று உங்கள் கட்சியை பார்க்கலாமா?**

நான் கடந்த 15 ஆண்டுகளாக தமிழகத்தின் அத்தனை பிரச்சினைகளிலும் முன்னின்று போராடியிருக்கிறேன். பல முறை கைதாகியிருக்கிறேன், சிறை சென்றிருக்கிறேன். தமிழகத்தின் பிரச்சினைகள் பற்றி எதுவுமே தெரியாமல், போராடாமல், வெறும் திரையுலக அறிமுகத்தை வைத்து மட்டுமே முதலமைச்சர் ஆகிவிட முடியும் என்ற கனவில் நான் அரசியலுக்கு வரவில்லை. நான் சினிமாக்காரனா போராளியா என்பது மக்களுக்கு தெரியும்.

**என்ன திடீரென்று அரசியல் பிரவேசம்?**

நான் 15 ஆண்டுகளாகக் குறும்படங்கள், ஆவணப்படங்கள், நாடகங்கள், திரைப்படம் என எல்லாவற்றிலும் மக்கள் நலனை முன்னிறுத்தியே இயங்கியிருக்கிறேன். எனது அப்பா கம்யூனிச கட்சியில் முக்கிய மானவராக இருந்தார். புலவர் கலிய பெருமாள், தமிழரசன் போன்றோரோடும் பழக்கத்தில் இருந்தவர். எனக்கு பெயர் வைத்ததே பெரியார்தான். அதனால், எனக்கு சிறுவயது முதலே அரசியல் ஆர்வம் அதிகம். இதனால்தான், இத்தனை ஆண்டுகளாக மக்களுக்காக களத்தில் நின்று போராடியிருக்கிறேன். நான் திடீரென்றெல்லாம் அரசியலுக்கு வரவில்லை. பெரும் வலிகளை சுமந்துதான் வந்திருக்கிறேன்.

**இன்றைய தமிழக அரசியல் சூழலில் ஒரு புதிய கட்சியின் தேவை என்ன?**

தமிழகம் முழுவதும் இப்போது நியூட்ரினோ, ஹைட்ரோகார்பன், கெயில், ஸ்டெர்லைட், மீத்தேன், காவிரி, முல்லைப் பெரியாறு, மணல் கொள்ளை, மலைக் கொள்ளை, கச்சத்தீவு, மீனவர்கள் படுகொலை, எட்டு வழிச் சாலை என்று எல்லா பக்கமும் பிரச்சினைகள் சூழ்ந்து நிற்கிறது. இந்த சூழலில் வெறும் அறிக்கை மட்டும் விடாமல் களத்தில் நின்று போராடும் தலைமையும் கட்சியுமே தேவைப்படுகிறது. நானும், என்னுடன் பயணிப்பவர்களும் இதுபோல களத்தில் நின்றவர்கள்தான். ஆனால், நாங்கள் தனித்தனியாக போராட்டக்களத்தில் நிற்கும் போது எங்களுக்கு நிறைய அச்சுறுத்தல் வருகிறது. அதனால்தால் மக்களின், ஆளுமைகளின், போராளிகளின் விருப்பத் திற்கிணங்க கட்சியை தொடங்கியுள்ளேன்.

**திராவிடம், இடதுசாரி, வலதுசாரி, தமிழ்த் தேசியம், தலித் விடுதலை என தமிழக அரசியலில் பலர் களத்தில் உள்ளனர். இதில் உங்கள் கட்சி எந்த பாதையில் பயணிக்கும்?**

எனது கட்சி தமிழர்களின் நலனுக்காகவே போராடும். நாங்கள் பேசுவது என்ன தத்துவம் என்று மக்களே சொல்வார்கள். எங்கள் கட்சி பேச்சுக்கு முன்னுரிமை தராது, செயலுக்கே முன்னுரிமை தரும்.

**உங்கள் கட்சிக்கு எதிரி யார்?**

எங்களுக்கு தனிப்பட்ட எந்த கட்சியும் தலைவரும் எதிரி இல்லை. தமிழகத்திற்கு எதிராக செயல்படும் யாராக இருந்தாலும் எங்கள் எதிரிதான்.

**ரஜினி அரசியலுக்கு வந்தால் அவர் போட்டியிடும் தொகுதியில் நீங்களும் போட்டியிடுவதாக அறிவித்திருந்தீர்களே?**

ரஜினி, கமலை திரைக்கலைஞர்களாக மதிக்கிறோம். ஆனால், அரசியல்களத்தில் அவர்களை எதிர்ப்போம். தமிழர்களின் வலி, வரலாறு, வாழ்க்கை முறைபற்றி எதுவுமே தெரியாதவர், ரஜினி. எந்தப் போராட்டத்திலும் மக்கள் பிரச்சினைக்காக களம் காணாத அவர் எங்களை ஆளும் கனவுடன் வருவதால்தான் அவரை எதிர்க்கிறேன். தமிழர்களுக்கு எதிரான எல்லா திட்டங்களையும் ரஜினி ஆதரிக்கிறார். எழுவர் விடுதலையில் அவர்கள் யாரென்றே தெரியாது என்கிறார். இதனால் தான் அவரை எதிர்க்கிறோம். ரஜினி எந்த தொகுதியில் நின்றாலும் எதிர்த்து நின்று அவரை படுதோல்வி அடையச் செய்வேன்.

**உங்களுக்கான ஆதரவு எப்படி உள்ளது?**

என்னை கட்சி தொடங்க சொல்லி வலியுறுத்தியதே ஜல்லிக்கட்டுக்கு போராடிய இளைஞர்கள், மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள்தான். நான் கட்சி தொடங்கியதாக அறிவித்தவுடன் முன்னாள் துணைவேந்தர்கள், அதிகாரிகள், ஆளுமைகள், போராளிகள் என்று



பலதரப்பில் இருந்தும் வரவேற்கிறார்கள்.

**உங்களால் வெற்றி பெறமுடியுமா?**

ஓட்டுக்கு பணம் பெறக்கூடாது. நேர்மையாகவும் உண்மையாகவும் போராடுபவர்களுக்குதான் இனி வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணம் தமிழக மக்கள் மத்தியில் வந்துவிட்டது. அதனால், உறுதியாக எங்களை வெற்றிபெற செய்வார்கள்.

**கட்சியின் பெயரை எப்போது அறிவிப்பீர்கள்?**

வரும் பொங்கல் பண்டிகைக்குப் பிறகு எங்களது கட்சியின் கொடி, பெயர், கோட்பாடு, கொள்கைகள் அறிவிக்கப் படும். கட்சி மாநாடு நடைபெற இருக்கும் இடம், தேதி, எதிர்கால திட்டங்கள் குறித்தும் அப்போது அறிவிக்கப்படும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# அஜீரணக்கோளாறுகளைப் போக்க எளிய வழிகள்




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy) India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)



யோகக்கலை இதழைப் படித்து அதில் உள்ள பயன்களை எல்லாம் மனதில் பதிய வைத்துக் கடைப்பிடித்து ஆரோக்கியமாக வாழும் என் இனிய வாசகர்கள் என்று ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தனை செய்கிறேன்.

வாசகர்களே! இந்த இதழில் அஜீரணக் கோளாறுகளைப் போக்கும் எளியவழிகள் பற்றிக் கூறுகிறேன். படித்து பயன் அடையுங்கள்.

இன்று நாம் வாழும் வாழ்க்கை எந்திரம் போல் ஆகிவிட்டது. காலை முதல், இரவு வரை உழைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் வேளாவேளைக்கு சாப்பிடுகி றோமா? இல்லை என்றுதான் பலரும் கூறுவார்கள். அதுதான் உண்மை. ஒருசிலர் காலையில் சாப்பிடவில்லை. அதனால் மதிய வேளையில் காலை உணவையும் சேர்த்து சாப்பிடுகிறேன் என்று வயிறு முட்ட சாப்பிடுவார்கள். அவ்வாறு சாப்பிடுவதால் அஜீரணக்கோளாறுகள் ஏற்படுகிறது. அதனால் ஜீரணசக்தி ஆகாமல் மலச்சிக்கல் ஏற்படுகிறது.


அளவுக்கு அதிகமாக உணவு உண்ணும் போது பல பாதிப்புகள் ஏற்படும். அதனால் கல்லீரல் உறுப்பு மிகவும் பாதிப்படையும் என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறு கின்றனர். ஆகவே உணவை அளவோடு சாப்பிட வேண்டும்.

இதைத்தான் வள்ளலார் நாம் உண்ணும் உணவின் அளவைப்பற்றி கூறுகிறார். அரை வயிறு உணவு, கால்வயிறு தண்ணீர், கால்வயிறு காற்றுக்காக காலியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

நம் வயிற்றுப் பகுதி சுமார் ஒரு லீட்டர் உணவு வரைதான் பிடிக்கும். இவை மற்ற ஜீரண உறுப்புகளுக்கு செல்வதற்கு சுமார் இரண்டு முதல் ஆறு மணிவரை ஆகும். நாம் ஒரு பொருளை வாயில் போடுகிறோம் என்றால் அது பெருங்குடலைத் தாண்டி ஆசனவாய் வழியாக வெளியேறுவதற்கு சுமார் பன்னிரண்டு மணி நேரம் ஆகும். இப்போது நாம் உண்ணும் ஒரு உணவுப் பொருள் ஜீரணமாக பன்னிரண்டு மணி நேரம் ஆவதால் நாம் தேவைக்கு அதிகமான உணவு உண்டால் ஜீரணம் ஆகாமல் அஜீரணக் கோளாறு ஏற்படும்.

கிராமப்புறத்தில் பெரியவர்கள் ஒரு பழமொழி கூறுவார்கள். 'வாய் வேண்டும் என்கிறது, வயிறு வேண்டாம் என்கிறது'. அதாவது நாம் எந்த உணவு சாப்பிட்டாலும் வாய்ப்பகுதி வாங்கிக்கொண்டே இருக்கும். ஆனால் வயிறு வேண்டாம் என்று சொல்வதுபோல் வயிறு பெரிதாகவே ஆகிக்கொண்டிருக்கும். வயிறு வேண்டாம் என்று சொல்வதற்கு ஏப்பம் (சத்தம்) போன்றவை வரும். அப்போது நாம் உண்ணும் உணவு அளவு போதும் என்று நிறுத்திக்கொள்ள வேண்டும்.

### அஜீரணக் கோளாறுகள் ஏற்படாமல் இருக்க இயற்கை மருத்துவம் கூறும் ஆலோசனைகள்



1. நன்கு பசித்தபின் உணவு உண்ண வேண்டும்.
2. உணவுகளை நன்கு வேகவைத்து உண்ண வேண்டும். அதனால் கல்லீரல் பாதிப்பு வராமல் தடுக்கலாம்.
3. அளவோடு உண்ண வேண்டும்.
4. மாமிச உணவுகளைத் தவிர்த்து விட வேண்டும்.
5. காலையில் விழிக்கும் போதும் இரவு படுக்கச் செல்லும்போதும் குடிநீர் வேண்டும்.
6. பகல் நேரங்களில் நொறுக்குதீனி சாப் பிடுவதைத் தவிர்த்து விடுதல் நல்லது.
7. பூமிக்குக் கீழ் விளையும் கிழங்குகளில் கருணைக் கிழங்கு தவிர மற்ற கிழங்குகளை உண்ணக்கூடாது.
8. நாம் உண்ணும் உணவுகளில் காய் கறிகள், கீரைகள், பழங்கள் போன்ற வற்றைத் தினமும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
9. சாப்பிடும்போது தண்ணீர் பருகுவதைத் தவிர்க்க வேண்டும். சாப்பிட்டபின் தண்ணீர் பருக வேண்டும்.
10. மாதம் ஒருமுறை உண்ணாநோன்பு இருப்பது நல்லது. உண்ணாநோன்பு இருப் பதால் உடலில் உள்ள கழிவுகள் ஜீரண மாகிறது. மற்றும் இரத்தம் சுத்திகரிக்கப் படுகிறது. இரத்தம் சுத்திகரிக்கப்படுவதால் இனிப்பு மற்றும் உப்பு போன்றவை நீங்குகிறது.
11. இரவு நேரங்களில் உணவு உண்பதைத் தவிர்க்க வேண்டும் அல்லது எளிய உணவு களை அதாவது நன்கு ஜீரணம் ஆகும் உணவுகளை உண்ண வேண்டும்.

### அஜீரணக் கோளாறுகளைப் போக்கும் தெய்வீக மூலிகைகள்

வேப்பிலை, வில்வம், அறுகம்புல், அத்தி இலை, நெல்லிக்கனி, கீழாநெல்லி, தும்பை, குப்பைமேனி, துளசி, கொத்துமல்லி, கடுக்காய், கரிசலாங்கன்னி, முருங்கை யிலை போன்ற மூலிகைகளை பொடி செய்து அனைத்தையும் சம அளவாக ஒன்றாகக் கலந்து சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் காலை, இரவு ஒரு ஸ்பூன் அளவு பொடியை எடுத்து தேன் அல்லது சுடுநீரில் கலந்து சாப்பிடவும். மேற்கண்ட பொடிகள் சித்த ஆயுர்வேத மருந்துக்கடை களில் கிடைக்கும்.

### அஜீரணக் கோளாறுகளைப் போக்கும் எளிய உணவுகள்

1. கறிவேப்பிலையை துவையலாக (சட்னி) உணவில் சேர்த்து சாப்பிட்டால் அஜீரணக் கோளாறுகளைப் போக்கும்.
2. கரும்புச் சாறு சாப்பிட்டால் நன்கு பலன் கிடைக்கும்.
3. சுக்கு, மிளகு, பெருங்காயம் இவற்றை வறுத்து பொடி செய்து அத்துடன் கருப்பட்டி கலந்து ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் நன்கு பலன் கிடைக்கும்.
4. பலாப்பழத்துடன் உருக்கிய நெய், தேன் கலந்து சாப்பிடலாம்.
5. விளாம்பழம் சாப்பிட்டாலும் பலன் தெரியும்.
6. கொய்யா, திராட்சை, பப்பாளி, வாழைப் பழம் தினமும் சாப்பிட்டு வரவும். அஜீரணக் கோளாறுகளைப் போக்கும்.
7. தேங்காய், தக்காளி, அகத்திப் பூ மற்றும் கீரை, கரட் போன்றவையும் சாப்பிடலாம்.

### குழந்தைகளுக்கு அஜீரணக் கோளாறு போக்க வழிகள்

சின்ன குழந்தைகள் அடிக்கடி அழுதால் பசிதான் காரணம் என்று சில தாய்மார்கள் பால் கொடுப்பார்கள். இதனால் அஜீரணக் கோளாறு ஏற்படுகிறது. அஜீரணக் கோளாறு களால் பல, பாதிப்புகள் குழந்தைக்கு ஏற் படும். அதனால் குழந்தையை உடனடியாக டாக்டரிடம் காட்ட வேண்டும். கோடைக் காலம் ஆரம்பித்து விட்டால் சுட்டெரிக்கும் வெயிலில் உங்கள் குழந்தைகளுக்கு சோற்றைக் கண்டால் எரிச்சலாக இருக்கும். அவர்களுக்கு தினமும் காலையில் கேழ் வரகினால் செய்யப்பட்ட கூழைக் குடிக்க வைக்க வேண்டும். அதனால் அஜீரணக் கோளாறு வராமல் தடுக்கலாம்.

*நீண்ட நாள் வாழ்வதற்கு நிதானமாக வாழ்வது அவசியம்.*

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc
• கழுத்து, • முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி,
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGETHERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSEVEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன்."

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348

'மாதங்களில் அவள் மார்கழி' என்று கவிஞர்கள் கூறுகின்ற வனப்பான மார்கழி வந்து விட்டது. விடுமுறைகளும் நத்தார் பண்டிகைகள் போன்ற கொண்டாட்டங்களும் நிறைந்த இக்காலப்பகுதி உங்கள் அனைவரையும் குதூகலப்படுத்தட்டும். 'மகிழ்ச்சியாய் இருங்கள்' விளம்பரத்துடன் இணைந்து நானும் கூறுகின்றேன்.




இனி எங்கள் விடயத்திற்கு வருகிறேன். சென்ற தடவையில் மனிதக் கூர்ப்பின் பாதையை மிகவும் சுருக்கமாகவும் எளிமையாகவும் கூறியிருந்தேன். இவ்வளவு அறிவியற் தகவல்களுடன், கீழடி விவகாரங்கள் என்னைப் போன்றவர்களின் கவனங்களைத் ஈர்த்திட, தேடல்களின் பரப்பு விரிவடைந்தது. பல அறிந்திடாத, ஏதோ ஒருவகையில், மறைக்கப்பட்ட இரகசியங்கள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. அதிலொரு விடயத்தைப் பற்றி இனிப் பார்ப்போம். அதன்வழி போவதற்காக, உங்களை 100,000 (இலட்சம் என்பார்கள்) வருடங்களுக்கு முன்பான பண்டைக் காலத்திற்கு அழைத்துப் போக வேண்டியுள்ளது. மிகவும் சுவாரசியமும், ஆச்சரியமானதுமான அந்த விடயத்தைக் 'கூடியம் குகைகள்' என்ற தலைப்பின் கீழ்ப் பார்ப்போம். புதிய பரபரப்பு ஒன்றிற்குத் தயாராகிக் கொண்டு தொடருங்கள்.

### கூடியம் குகைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி, பித்தானியரின் ஆட்சியின் கீழ்த் தமிழகம் இருந்த காலம். இந்தியாவின் 'வரலாறுக்கு முற்பட்ட காலத்தின் வரலாற்றாசிரியர்' (Father of Indian Prehistory) என அழைக்கப்படும் சேர் றொபேர்ட் புறுஸ் பூட் (SIR ROBERT BRUCE FOOTE) என்ற புவியியல் அறிஞரும் தொல்பொருள் ஆய்வாளருமாக இருந்தவர், இந்தியாவின் தென் பகுதிகளில் தனது ஆய்வுகளைச் செய்து கொண்டிருந்தார். அவ்வேளையில், 1863ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி தமிழ்நாட்டின் பல்லாவரம் பகுதியில் முதன் முதலிற் கற்காலக் கல்லாயுதம் ஒன்றினைக் கண்டார். நூறாயிரம் (100,000) ஆண்டுக்கும் மேற் பழமையான அக்கற் கோடரியைக் கண்டவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். அதுவரையில் இந்திய வரலாற்றை, அதிலும் தமிழரின் வரலாற்றுக் காலத்தை வெறும் ஐநூறு ஆண்டு காலத்திற்கு மட்டுமே முந்தியது எனக் கணிப்பிட்டிருந்த அவருக்கு இக்கைக்கோடரி ஆச்சரியப்படுத்தியது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லைத்தான். இக்கற்கோடரியை சென்னை அருங்காட்சியகத்தில் இப்போதும் காணலாம் என்கின்றனர்.

ஜேர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் மாத்திரம் கற்கால மனிதர் பாவித்த பொருட்களைப் பார்த்திருந்த ஆய்வாளர் றெபேர்ட்டுக்கு இக் கண்டுபிடிப்பானது இன்னமும் ஆர்வத்தினை ஏற்படுத்த, ஆச்சரியத்தின் உச்சியில் இருந்த றொபேர்ட் தனது ஆய்வுப் பரப்புகளை வில்லியம் கிங் என்ற ஆய்வாளருடன் இணைந்து விரிவாக்கினார். அதன் விளைவாகக் கற்கால மனிதர் பாவித்த பல கல்லாயுதங்கள் தமிழ்நாட்டுப் பகுதிகளில் சிக்கிக் கொண்டன. மீண்டும் பல்லாவரம் பகுதிக்கு வந்த றொபேர்ட், ஆய்வுகளைத் தொடர, 1864இல் மேலும் 3 கல்லாயுதங்களை அங்கு கண்டுபிடிக்கிறார். அதனால் அப்பகுதியில் தனது தேடல்களைத் தொடர, அல்லிக்குல்லி (Al-likkulli) என்ற வித்தியாசமான மலைக் குன்றுகளைக் காட்டின் இடையே கண்டு, அதனை தொல்லியற் பகுதியிற்குத் தெரிவிக்கிறார். அங்கே குகைகள் இருக்கலாம் என்பதையும், பூகோளவியலாளரான றொபேர்ட் தெரிவித்தார். அக்குகைகள்தான் கூடியம் குகைகள். இதனைக் 'குடியம் குகைகள்' எனவும் அழைப்பர். இங்குதான் நூறாயிரம் ஆண்டு முன்னர் வாழ்ந்த எங்களின் பண்டை மக்களின் தடங்கள் கிடைக்கப் பெற்றன.

ஆய்வாளர் றொபேர்டின் கண்டுபிடிப்புகள் மேலைநாட்டின் தொல்லியல் அறிஞர்களை ஆச்சரியப்படுத்தி, அவர்களின் பார்வையை இந்தியாவின் பக்கமாகத் திருப்பிய போதும், இந்தியர்களுக்கு, குறிப்பாகத் தென்னிந்தியத் தமிழருக்கு அதிகம் தெரிந்திருக்கவில்லை. தங்களின் பழமையைப் பேசிக் கொண்டு அவர்கள் திரிந்தாலும் அதனைக் காட்டுவதற்கான பௌதிகச் சான்றுகளில் அக்கறை எடுக்கவில்லை. ஏனெனில் அவர்களது நிலை வேறாக இருந்தது. ஆனால், அல்லிக்குல்லி மலை விடயம் மேற்கத்தய நாடுகளிற் பிரபலமாகிவிட்டது. பிரான்சியர்கள் அல்லிக்குல்லி மலை, கூடியம் குகைகள் பற்றிய ஆவணப்படத்தினைக் கூட எடுத்திருந்தார்கள் மனிதவினத்தின் தோன்றல், பரம்பல் என்பனவற்றின் ஆய்விற்காக.

மேலும் விபரங்களைப் பார்ப்பதற்கு முன்னராகக் கூடியம் குகைகள் இருக்கின்ற அல்லிக்குல்லி மலை பற்றித் தெரிந்து கொள்வோம். சென்னையில் இருந்து வடக்காக 65 கிலோமீற்றர் தொலைவில் உள்ள திருவள்ளுவர் மாவட்டத்தின் பூண்டி என்ற இடம் வரும். இந்தப் பூண்டியில் இருந்துதான் சென்னைக்கு பெருமளவு குடிநீர் செல்கிறது. அதற்கான ஒரு பெரிய நீர்த்தேக்கமும் உண்டு. இந்த இடத்தை அண்மித்ததாக இம்(மலைக்) குன்று அமைந்துள்ளது. தொலைவிலிருந்து இவ்விடத்தினைப் பார்ப்பவர்கள் இதனை ஒரு மலைப்பகுதியாகவே கூறமாட்டார்கள்.



(கிட்டத்தட்ட இலங்கையின் வடக்கே அமைந்துள்ள கீரிமலை போன்றதாகக் கூறலாம்.) இவ்விடத்தின் உயரம் கடல்மட்டத்தில் இருந்து 150 அடி உயரம் தான் இருக்கும் என்கின்றனார். முற்றிலும் காட்டுப்பகுதியாக இருக்கின்ற இப்பகுதி வெறும் காடு போலவே தோற்றமளிக்கிறது. இக்காட்டுக்குள்தான் அல்லிக்குல்லி மலையும் கூடியம் குகைகளும் உள்ளன. பூண்டியில் இருந்து இன்னமும் 15 கிலோ மீற்றர் தூரம் வடக்காகப் பயணப்பட்டால் குடியம் என்ற குக்கிராமம் வரும். 15 அல்லது 20 வீடுகளே உள்ள இக்குக்கிராமத்தில் இருந்து அடர்ந்த காட்டின் ஊடாக இன்னமும் 8 கிலோமீற்றர் தூரம் ஒற்றையடிப் பாதையில் பயணப்பட்டால் குடியம் குகைகளை அடையலாம். இதுபற்றிப் பின்னர் இன்னமும் தெளிவாகப் பார்ப்போம். அதற்கு முன்னதாக இந்த அல்லிக்குல்லி மலையும் குடியம் குகைகளும் மலைப்பிரதேசமாக இல்லாத அவ்விடத்தில் எவ்விதம் தோன்றின என்பதை புவியியலாளர்கள் பின்வருமாறு விபரிக்கிறார்கள். இயற்கை தன்னை அழகுபடுத்தும் வேலையில் ஒன்றான அதனையும் தெரிந்து கொள்வோம்.

8 மெய்யிரம் (மில்லியன்) ஆண்டு முன்னராக இவ்விடத்தை அண்மித்து ஒரு பெரிய ஆறு பாய்ந்திருக்கின்றது. இது 70 அடி ஆழம் கொண்டதாக இருந்திருக்கலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள். பெரு வெள்ளக் காலத்தில், இவ்வாற்றின் நீரோட்டம் அள்ளி வந்த வண்டல்மண் அப்பகுதியில் இருந்த கூழாங்கற்களை (அவை கூட, அவ்வாற்றினாலேயே எடுத்து வரப்பட்டிருக்கலாம்) ஒன்றிணைத்து அவற்றினை பசை போல ஒட்டி அவ்விடத்திற் படிகக்கற்களைத் தோன்றுவித்தன. தொடர்ச்சியான ஆற்றோட்டம் இப்படிகக்கற்களை ஓரமாகத் தள்ளித் தள்ளிச் செல்ல, மெதுமெதுவாக கூழாங்கற் படிகப்பாறைகள் உருவாகி அவ்விடத்தினிற் ஒரு குன்றுப் பகுதியினைத் தோற்றுவித்து விட்டது என்கிறார்கள். அவ்வண்ணம் குன்றுப்பகுதி உருவாகுகையில், இயற்கையாகவே கூடியம் குகைகள் எனப்படுகின்ற குடியம் குகைகளும் தோன்றிவிட்டன.

அடுத்த தடவையில் பல ஆச்சரியங்களைத் தரப் போகும் குடியம் குகைகள் நோக்கிப் பயணப்படப் போகிறோம். உங்களைத்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார்.....

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர் புடைய புலனாய்வு பிரிவிவைச் சேர்ந்தவர் என்பது குறித்து தகவல்கள் வெளியாக



வில்லை என்றும், முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமையவே தக வல்களை வெளிப்படுத்த முடியும் என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்தினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை என இராணுவ தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித் துள்ளார். பாதுகாப்பிற்கு பொறுப்பான வர்கள் வதந்திகளை மறுத்து இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது சற்று ஆறுதல் தருவதாகவுள்ளது.

பொலிஸாரின் படுகொலையை கண்டித்து கிழக்கிலும் வடக்கிலும் பொது அமைப் புக்கள் கவனயீர்ப்பு போராட்டங்களை நடத்தி வருகின்றன. இந்தப் படுகொலை- களை தமிழ் மக்கள் வன்மையாக கண்டித்து வருகின்றனர். இக்கொலைகளை செய்தவர்கள் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை. இவ்வாறான சம்பவங்கள் தமிழ் பிரதேசங்களில் அமைதி வாழ்க்கையை சீர்குலைக்கும் நோக்கத்தின் அடிப்படையி- லேயே மேற்கொள்ளப்படுகின்றன என்கின்ற பலத்த சந்தேகம் தமிழ் மக்களிடம் உள்ளது.

# மாகாண...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அவை நிராகரிக்கப்பட்டு விட்டது.

மூன்று மாதங்கள் மருத்துவ சலுகைகள் இல்லாத புதிய குடிவரவாளர்களின் காலம் என்பது 1994ஆம் ஆண்டு ஒன்ராரியோ மாகாணத்தில் அமல்படுத்தப்பட்டது. ஆனால் இக்காலங்களில் இதே மாதிரியான வழிகளில் பல நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் ஒன்ராரியோ மருத்துவக் காப்புறுதி திட்டங்களின் (OHIP) சட்டவியலாளராகப் பணி புரிந்தவரும், கடந்த 40 வருடங்களாக மருத்துவச் சட்டப் பிரிவு கள் தொடர்பான வழக்குகளில் சமூக மளிக்கும் ரொறன்ரோவின் சட்டத்தரணி திரு. பெரி புரோட்கின் (Mr. Perry Brodkin) அவர்கள் இந்த விடயத்தில் 'மருத்துவ சேவை அப்பீல் மீளாய்வு சபை' விதி விலக்கு வழங்கத் தவறியதனை குறிப்பிட்டு கண்டித்ததுடன் இன்றைய மாகாண முதல்வர், சுகாதாரத் துறை அமைச்சருக்கு முடிவு எடுக்கும் அதி உச்ச அதிகாரம் உள்ளது என்பதனையும் குறிப்பிட்டிருந்தார். மாகாண அரசின் மருத்துவ காப்புறுதி திட்டத்தில் (OHIP - Health Card) சேர முடியாதவர்களுக்கு கனடிய மத்திய அரசு இன்னொரு வழியினை காட்டியுள்ளது.

அதுவே மத்திய அரசின் இடைக்கால மருத்துவ திட்டம் ஆகும். (Interim Federal Health Program- IFHP). கனடாவில் வாழும் ஒருவருக்கு மாகாண அரசின் மருத்துவச் சலுகைகள் கிடைக்கும் வரை, மத்திய அரசின் இத்திட்டம் கை கொடுக்கும். இது அகதி அந்தஸ்துக் கோரிய நிலையில் இருப்பவர்கள், அக்கோரிக்கை நிராகரிக்கப் பட்டுக் கனடாவில் நிற்பவர்கள், பாதுகாப்புக் காக நிற்பவர்கள் மட்டும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். முதல் மூன்று மாதங் களுக்குக் காத்திருக்கும் புதிய குடிவாளவர் களுக்கு இச்சலுகை கிடைக்காது.

# அதிசயக்...

09 ஆம் பக்கத்தொடர்ச்சி

கோயிலின் மதிப்புமிக்க பொருட்கள் இருக்கலாம்.

மேல் அடுக்கில் மலை மீது மன்னர் அமர்ந்தவாறு மக்களிடம் குறை கேட்கிறார். கீழே காட்டிலுள்ள மலையிலிருந்து ஒரு பெண் நடந்து செல்கிறாள். ஆய்வு செய்வதற்காக ராணுவம் கூடியிருக்கிறது. யானை மீது அமர்ந்திருக்கும் படைத்தலைவர்கள் எதிரியை நோக்கிச் மார்பின் மீது குறுக்காக போர்வாள் தொங்க மன்னன் இரண்டாம் சூரியவர்மன் யானை மீது நின்று கொண்டிருக்கிறான். பணியாளர்கள் 15 குடைகளைப் பிடித்த வாறு அவனைச் சூழ்ந்து நிற்கின்றனர். மன்னனின் யானைக்கு முன்பாக இருக்கும் கொடிமரத்தில் கருடன் மீது நிற்கிற விஷ்ணு, பெட்டியில் ஏந்திய தீ வலம் செல்கிறது. அதனைத் தொடர்ந்து இசை வாணர்களும், விகடகவிகளும் செல்கின்ற னர். தாளம் போட்டவாறு பிராமணர்கள் மந்திரம் ஓதுகிறார்கள். பல்லக்கில் அரச பணியாகச் செல்கிறார்.

முகப்புப் பலகையின் முடிவை நோக்கி



செல்லும் தமது படை அணிவகுப்பில் சேர்ந்து கொள்கிறார்கள். படை தளபதி களின் பதவியைப் பற்றிய குறிப்பைச் சிலைக்கருகில் இருக்கும் கல்வெட்டு அறிவிக்கிறது.

தாய்ப் படை அணி வகுப்பு, வீரர்களோடு சேருகிறது. தாய்ப் படை யானை மீது உள்ள படைத்தலைவரால் வழிநடத்தப்படு கிறது. தாய் படை, கூலிப்படையாகவோ அல்லது லோவோவிலிருந்து கெமருக்க கட்டாயப் போர் பணிக்காக வரவழைக்கப் பட்ட படை அணியாக இருக்கலாம். கெமர் வீரர்களில் ஒருவன் தலைக்கவசம் அணிந்து, ஊது கொம்பை ஏந்தியிருக்கிறான். சிலருடைய கேடயங்கள் பூதங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

## எமனின் தீர்ப்பு - சொர்க்கமும் நரகமும்

மூன்று அடுக்குகளில் மனிதர்களுக்குத் தீர்ப்புக் கூறும் எமன், இரண்டு அடுக்குகள் சொர்க்கத்தையும், நரகத்தையும் விளக்குகின்றன. மாளிகையில் பொழுது போக்கும் 37 சொர்க்கவாசிகளையும் தண்டனையால் துன்புறும் 32 நரக வாசி- களையும் செதுக்கியுள்ள காட்சிகளை இங்கே காணலாம். இரண்டையும் அப்சரஸ்களும் அலங்கார துணியும் பிரித்துக் காட்டுகின்றன. அடுக்கின் கீழ்புறத்தை கருடன்களின் வரிசை அலங்கரிக்கிறது. கூரை 1947ஆம் ஆண்டு மின்னலில் சிதைந்து போனது. உடனடியாக இந்தக் கூரை பிரஞ்சுக்காரர்களால் மீண்டும் அமைக்கப்பட்டது. முகப்புப் பட்டையில் உள்ள குதிரை வீரர்கள் மீது பளபளப்பைக் காண முடிகிறது. கீழ்ப்பக்கம், மிகவும் மோசமான நிலையில் சிதைந்து சிமெண்ட் பூசப்பட்டிருக்கிறது.

## கீழ் அடுக்கு

உச்ச நீதிபதியாக எமன், (பல கரங்களுடன் தண்டாயுதத்தை நீட்டியபடி, எருமை மீது சவாரி செய்தவாறு) குறிப்பெடுப்பவர்களுக்கு சொர்க்கத்தைக் குறிக்கும் மேல் பாதையையும், நரகத்தைக் குறிக்கும் கீழ் பாதையையும் காட்டியவாறு, தீர்ப்புக்காகக் காத்திருக்கும் ஆவிகள், எமனின் உதவியாளர்கள் தீயவர்களை குறுகிய வழியின் மூலம், தண்டனை அளிக்கும் பகுதிக்கு தள்ளுகிறார்கள்.

## மேல் அடுக்கு

சொர்க்கலோக மாளிகையைத் தாங்கி நிற்கும் கருடன்கள், வானத்தில் அப்ரஸ்கள்.

தொடரும்...)


# வாழும் திறன்

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள் பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

வி. கணேஷ்: 416.816.2563 மகேன்: 416.893.1222 ஆறுமுகம் (AGR): 416.832.9467


# பாலன் பிறந்தனன்!

பாலன் பிறந்தனன் ஞாலம் மீதினில்
பாவியை இரட்சிக்கப் பாலன் பிறந்தனன்
சீலம் மிக்கதோர் ராஜ்ஜியம் நிலைபெற
சீதளத் தென்றலாய் பாலன் பிறந்தனன்!

கார்முகில் சூழ்ந்து கறுத்த வானிடை
கனிந்த வால்நட்சத்திரம் ஒளியினைச் சிந்திட
பார்புகழ் இரட்சகர் பாழுலகு காத்திட
பாலனாய் உலகினில் வந்து பிறந்தனன்!



மார்கழி மாதக் கடுங்குளிர் வாட்டிட
மருவும் நள்ளிரவு மாட்டுத் தொழுவத்தில்
சீர்மிகு அறிவும் கருணையும் கொண்டு
சிலுவை சுமந்திடப் பாலன் பிறந்தனன்!

அன்னை மேரியின் அருந்தவப் புதல்வனாய்
அவனியைக் காத்திட பாலன் பிறந்தனன்
தன்னை இழந்து இம்மண்ணினைக் காத்திட
தர்மதூதனாய் வந்து பாலன் பிறந்தனன்!

பாவியர் திருந்தி பண்புடன் வாழ்ந்திட
பகலவன் போலொளி சிந்திடப் பிறந்தனன்
ஆவிதுடிக்க ஆணிக்கு ஈந்திட உடலை
அர்த்த ராத்திரியில் பாலன் பிறந்தனன்!

கவிஞர் புரட்சிபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

# குழம்பு பதார்த்தம்

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796



கடந்த இதழ் தொடர்ச்சி...

## ஏலம்

பூர்வீக விளைபொருட்களில் ஏலமும் ஒன்றாகும். இந்தியாவில் அதிகம் விளைபொருளாகவுள்ளது. ஆறு சார்ந்த இடங்கள், மலைச்சாரலிலும் அதிகம் உண்டு. இயற்கையாக விளைகின் றதாகவும் அறியமுடிகின்றது. ஏலத்திற்கு அஞ்சி, கோரங்கம், துடி என்னும் பெயரும் உண்டு. ஏலத்தில் போலியான தன்மையுள்ளவையும் உண்டு எனவும் அறியப் படு கின்றது. ஜாவாவில் இருந்து வரும் உருண்டையான அமோமம் காபலேஜ் (AMOMUM KAPALAGE), கற்பூரமணம் உள்ள வங்களா ஏலம் காய் முள்ளு உள்ளதாகவும், விதை வேறுபட்ட மணம் உள்ளதாகவும் இருக்கும். தாய்லாந்து, 'சீயம் ஏலம்'. இவை பெரிய-தாகவும் நிறம் சிவப்பாகவும் விதை ஏலத்தின் வாசனை யுடையதாகவும் உள்ளது. கோரறிமா (KORARIMA) ஏலம் - இவை நான்கும் போலி யானதாகும். இந்தியாவில் உணவிலும் நாட்டு வைத்தியத்திலுள்ள மருந்துகளில் பயன்படுத்தப்படுகின்றது. அந்நிய நாடுகளில் பலகாரங்களில் சுவைக்காகச் சேர்க்கப்படுகின்றன. மேலும் மேல்நாட்டு மருத்து



வர்கள் விதையில் இருந்து தைலம், (டிக்காசன் இறக்கி) அதைப் பல மருந்துகளில் கலந்து கொள்வது எனவும் அறிய முடிகின்றது. ஏலத்திற்கு உடல் வளத்தையும் தாதுவிருத்தியையும் உண்டாக்கும் குணம் உண்டு. நிறம் இலேசான மஞ்சள் நிறமும் வாசனையும் உடையது. இவ் வெண்ணெய் காற்றில் ஆவியாகும் தன்மையுடையது.

**ஏலத்தின் தனிக் குணம்** - வாழை, மஞ்சள், இஞ்சி, அரத்தை, ஏலம் முதலியன ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவை. ஏலங்கிழங்கில் இருந்து தட்டைகள் வெடித்து மேலே வரும். இத்தட்டைகள் அடியில் கொஞ்சம் பருத்திருக்கும். இப்பருத்த அடிப்பாகத்தினின்றும் கலப்புப் பூ கொத்துக்கள் உண்டாகும். செடியின் அடிப்பகுதியில் கலப்புப் பூக்கொத்துக்கள் உண்டு. ஒவ்வொரு சிறு கொத்திலும் 10 - 20 பூக்கள் காணப்படும். காய் உருண்டையாகவும், நீளமாகவும் காணப்படும். ஏலத்தில் பல வகை உண்டு.

**மலையாள ஏலம்** -இதன் பூக்கொத்துக்கள் தரையில் படர்ந்து செல்லும். காய் உருண்டையாகவோ அல்லது கொஞ்சம் நீண்டிருக்கும்.

**மைசூர் ஏலம்** - உருண்டை வடிவானது.

**இலங்கை ஏலம்** - பூக்கொத்துக்கள் அதிகம் காணப்படும். பூக்கொத்தில் உள்ள காய்கள் நெருக்கமின்றி விலகிக் காணப்படும். காய்கள் நீளமாக இருக்கும்.

**மஞ்சராபத் ஏலம்** - பூகொத்துகள் தரையில் படர்ந்து செல்லும். காய்கள் நெருக்கமாகவும், உருண்டை வடிவாகவும் இருக்கும். ஏலத்திற்கு ஆஞ்சி, கோரங்கம், துடி என்னும் பெயர்களும் உண்டு. ஏலம் கார்ப்புச் சுவையுடையது. வெப்பம் உண்டாக்கும் இயல்புடையது. வாயுவை அகற்ற வல்லது. பசியை அதிகரிக்கும் தன்மையுடையது. சிற்றேலம் என்ற ஒரு வகையும் உண்டு. கார்ப்புச் சுவையுடையது, வெப்பம் உண்டாக்கி, வாயுவை அகற்றும், சிறு நீரைப் பெருக்கும்.

**ஏலத்தின் தன்மை**

"மலவாதமோடு வயிற்றுக் கொதிப்பு
சல முறல் வாயினிப்பு தாகம் - சலபேதி
வேர்க்குந் தலைநோய் மிகுருட்சை ஐயமிலை
போக்குஞ் சிற்றேலம்புகல்" எனவும் கூறப்படுகின்றது.

**காட்டு ஏலம்** - இது பயன்படுத்தப்படாத காட்டு நிலங்களில் காணப்படுகின்றது. சுவையில் கார்ப்பு, துவர்ப்புடையது. பசியைத் தூண்டக்கூடியது. காம உணர்ச்சியை அதிகரிக்கச் செய்யும். கபம், பேதி, அரோசகம் ஆகியவற்றை நீக்கும் தன்மையுடையது.

**மலை ஏலம்** - மலை சார்ந்த இடங்களிலும், காடுகளிலும் வளரும். கார்ப்புச் சுவையுடையது. நாவரட்சி, பித்த வியாதி, நீர்ச்சத்ருக்கு யாவும் தீர்க்கவல்லது.

## கசகசா

நீண்ட தண்டும் பளபளப்பான பூக்களும்



உடையது. பூக்கள் விரியும்போது இரண்டு புறவிதழ்களும் உதிர்ந்துவிடும். இதழ்கள் பொதுவாக 4 இருக்கும். சூற்பையில் பல விதைகள் இருக்கும். அது காயாகி

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக நாவலர்



விதுசிகா அருள்தாசன்
அகவை - 13

ஆறுமுக நாவலர் 1822, மார்கழி மாதம் 18ஆம் திகதி கந்தர்பிள்ளை, சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு கடைசி மகனாக யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தார். நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார். ஆறுமுக நாவலரின் இயற் பெயர் ஆறுமுகப்பிள்ளை. அவருக்கு நான்கு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். நாவலர் பெருமான் சைவநெறி, தமிழ் மொழி செழித்து வளர பெரும் பணியாற்றியவராவார்.

அவரது ஆரம்பக் கல்வி வீட்டிலேயே தொடங்கியது. நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களைக் கற்றார். 9 வயதில் தந்தையை இழந்தார். குருகுல முறையில் உயர் கல்வி பயின்றார். தமிழ் இலக்கியம், இலக்கணம், சாஸ்திரங்கள், சிவாகமங்களைக் கற்றார். சிறு வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலத்தில் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணம் மெதடிஸ்த ஆங்கில பாடசாலையில் தனது 20ஆவது வயதில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுடன் பணிபுரியத் தொடங்கினார் நாவலர். சைவ சமயம் வளர்ப்பதற்காக பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்து இவரது முதற் பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் 1847 டிசம்பர் 31ஆம் நாள் தொடங்கி பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் பலனாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.

வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து தனது ஆசிரியப் பணியை விட்டுவிட்டு இப்பணியினை தொடர்ந்தார்.

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் தொடர்ந்தது. அவர் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். அவர் நினைவாக நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில் நாவலர் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு 1971ஆம் ஆண்டில் அஞ்சல்தலை ஒன்றையும் வெளியிட்டது.



இவர் 1879 மார்கழி 05இல் தனது 56ஆவது வயதில் இறைபதமடைந்தார்.

# கிறிஸ்மஸ் (நத்தார்)

இயேசு நாதர் பிறந்த தினத்தை கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் தினமாகக் கொண்டாடுவர். இவ்விழாவினை உலகத்தில் அதிகமான மக்கள் கொண்டாடுவர். இத்தினத்தில் கிறிஸ்மஸ் மரம் வைத்து மின் விளக்குகள், மற்றும் பல அலங்காரப்பொருட்கள் கொண்டு அலங்கரிப்பார்கள். வீடுகள் எங்கும் நட்சத்திரம் தொங்க விடுவார்கள். அனைவரும் ஒன்று கூடி மகிழ்வர். கிறிஸ்தவர்கள் 24ஆம் திகதி இரவு தேவாலயம் சென்று நல்லிரவு (25ஆம் திகதி) 12 மணிக்கு பாலன் பிறப்பை கொண்டாடி மகிழ்வர்.



கிறிஸ்மஸ் மரம் - Pine Tree

குளிர்காலத்தில் அனைத்து மரங்களும் பசுமையை இழந்து, இலைகள் உதிர்த்து விடும். ஆனால் கிறிஸ்மஸ் மரம் (Pine Tree) பச்சை நிறம் மாறாது காணப்படும். அதனால் அம் மரத்தினை கிறிஸ்மஸ் தினத்தில் வீட்டில் வைத்து அலங்கரித்து கொண்டாடுவதை வழக்கமாக்கி கொண்டனர். அதிகமானோர் அம்மரத்தை வீட்டில் வைப்பதனால், நோய்கள் வராது, தீயசக்திகளிடம் இருந்து பாதுகாக்கும் என நம்பினர். ஜேர்மனியே இம்மரத்தின் பிறப்பிடம்.

அனைத்து வாசகர்களுக்கும் எனது நத்தார் தின வாழ்த்து.
*Happy Merry Christmas*

# நாவலர் பெருமான்

ஆறுமுகங்கள் கொண்ட ஆனைமுகன் தம்பி
ஆளும் நன் நகர் நல்லூரில்
பிறந்தவர் நாவலர்



குலம் போற்றும் கந்தர் சிவகாமிக்கு
குலமகனாய் வந்துதித்த ஒரு
வித்தகரே நாவலர்

தமிழ் கல்விதனை வளர்க்க தனித் தன் உழைப்பால்
பள்ளி அமைத்து அங்கு பாடம்
சொல்லிக் கொடுத்தவர்

வரவிலக்கணம் இலக்கியம் வளர தமிழ் நூல்களை
பழம் தமிழ் ஏடுகளில் இருந்து எடுத்துப்பலரும்
அறிந்திடப் பதிப்பிட்டவர்

திருமுறைகளை வெளிக்கொணர திருப்பெரும் தொண்டர் புராணம்வரை
சைவ வினாவிடை போன்றன இயற்றி
சைவம் வளர வழிவகுத்தவர்

பாலர் பள்ளியில் படிக்க பாலம்பாடப் புத்தகம்
அச்சிட்டு அகர முதல் எழுத்துக்களைக்
கற்றிட வழி சமைத்தவர்

அன்னியர் ஆதிக்கத்தால் அன்னைத் தமிழ் அழியும்
நிலைகண்டு தன்வீறு கொண்டெழுந்து
தடுக்கும் வழி கண்டவர்

பார்வதியை பாகமாய் கொண்ட பரமசிவன் திருவடிபணிந்து
திருத்தொண்டனாய் இருந்து ஆண்டு 1879இல்
சிவபதம் அடைந்தவரே நாவலர் பெருமான்



கவிநாதம் பரந்தாமன்

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்
மார்கழி மாத இலக்கியக் கலந்துரையாடல்
"மரபுசார் பதிவுகளில் அறிவியல்"
சிறப்புப் பேச்சாளர்கள் உரை:
"தொல்காப்பியத்தில் அறிவியல்" - திரு. கனி. விமலநாதன்
"திருக்குறளில் அறிவியல்" - திரு. அகணி சுரேஷ்
"திருவாசகத்தில் அறிவியல்" - முனைவர் நிர்மலா மோகன்
"திருக்குர்ஆனில் அறிவியல்" - பேரும்புலவர் முஹம்மத் ஹனீபா
"புத்தகம் புதிது" - வைத்திய கலாநிதி இ.லம்போதரன்
ஐயந்தெளிதல் அரங்கு
நாள்: 29-12-2018
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)
தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
அனுமதி இலவசம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளவிழா காணும் எஸ். பத்மநாதன்

**எஸ். கே. குமரகுரு, எம். ஏ.**

சிந்தனைச்செல்வர், சிந்தனைப்பூக்கள் என்று இலக்கிய உலகம் அழைக்கும் பெயருக்குச் சொந்தக்காரர் எஸ். பத்மநாதன் ஆவார். யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கில், டிசெம்பர் 22, 1943ஆம் ஆண்டு பிறந்த இவருக்கு இந்த ஆண்டு 75 வயதாகிறது. அவர் பவளவிழா காணும் நாயகராகிறார்.

ஆரம்பக் கல்வியை பத்மநாதன் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலும், இடைநிலை கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், உயர்நிலைக்கல்வியை ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும், பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார்.

1964-1968 காலப்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாகத்தில் புவியியல் துறையில் கல்விகற்று B.A. Hons. பட்டதாரியானார். இதனால் அவருக்கு துணை விரிவுரையாளராக சந்தர்ப்பம் ஏற்பட்டது. புவி வெளியுருவவியல், காலநிலையியல் ஆகிய பாடங்களில் தேர்ச்சியுள்ள மாணவர்களை இவரால் உருவாக்க முடிந்தது.

1970 ஆண்டின் பிற்பகுதியில் நுவரெலியா பரிசுத்த திரித்துவக் கல்லூரியில் ஆசிரியரானார். பின்னர் நுவரெலியா, பதுளை, பண்டாரவளை ஆகிய கல்வி மாவட்டங்களில் சமூகக்கல்வி ஆலோசகராகப் பணிபுரிந்தார். மலையகத்தில் அளப்பரிய கல்விச்சேவை புரிந்து நன்மதிப்பு பெற்றார்.

1979, செப்ரெம்பரில் கல்வித்துறையின் உயர்கல்வி டிப்ளோமா (Diploma-in-Education) பட்டத்தினை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார். யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் உயர்கல்வி துறையில் புவியியல் ஆசிரியரானார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் M.A. பட்டப்படிப்பையும் மேற்கொண்டிருந்தார். 1983இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு சமூகக்கல்வி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இந்தக் காலவேளையில் இலங்கை வானொலியில் 'அறிவியல் அரங்கம்' நிகழ்ச்சியில் பங்கு கொண்டதுடன், பிரதம புவியியல் பரீட்சகர், ஆசிரிய மூலவள ஆலோசகர், பாடவிதான சபை பாடத்திட்ட நூல் ஆலோசகர் போன்ற பல கல்வி நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டார். 1985 மார்ச் மாதம் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தார்.

பத்மநாதனின் எழுத்துத்துறை தாயகத்திலேயே ஏற்படத் தொடங்கி விட்டது. 1966இல் 'மல்லிகை' என்ற ஜீவாவின் சஞ்சிகையில் 'ஓவியம் பேசவில்லை' என்ற சிறுகதை மூலம் இது ஆரம்பமானது. கட்டுரை எழுதுவதில் நாட்டம் கொண்டு வீரகேசரி, தினபதி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் புவியியல், கல்வி சம்பந்தமான கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். கனடாவுக்கு வருகை தந்த அவருக்கு தொடர்ந்தும் எழுதப் பல ஊடகங்களின் தூண்டுதல் ஏற்பட்டது.



கனடாவிற்கு வந்த ஆரம்பகாலத்தில் மொன்றியலில் உள்ள 'தமிழர் ஒளி' நிறுவனமே இவருக்கு உதவியது. தமிழர் ஒளியில் திட்ட ஒருங்கிணைப்பாளராக (Program Co-ordinator) கடமைபுரிந்து அங்குள்ள நூலகம், பிரெஞ்சு மொழி வகுப்பு, தையல் வகுப்பு, இளம் தொண்டர் அமைப்பு, வானொலி நிகழ்ச்சி போன்றவற்றை திறம்பட நிர்வகித்தார். 'தமிழ் ஒளி', 'இளங்கீற்று' சஞ்சிகைகளிலும் இணைந்திருந்தார். 'ஒமேகா' சாரதி பயிற்சிக் கல்லூரியில் மொழி பெயர்ப்பாளராகவும், விரிவுரையாளராகவும் கடமை புரிந்து பல வாகன சாரதிகளுக்கு சாரதிப் பத்திரம் பெற உதவினார்.

ரொறன்ரோவுக்கு அவர் இடம்பெயர்ந்து வந்த பின்பதாக பல்வேறு ஊடகங்களிலும் அவரது பணி தொடர்ந்தது. கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (CTBC), றேடியோ ஏசியா, கீதவாணி போன்ற வானொலிகளில் உளவியல் சிந்தனைகளை உரைகளாக ஆற்றினார்.

இதேவேளையில் உளவியல் கட்டுரைகளையும் எழுதி வெளியிடலானார். அந்த வேளையில் 'தமிழருவி' என்ற பத்திரிகையின் ஆசிரியரான சந்திரமோகனின் தூண்டுதலால் அப்பத்திரிகையில் தொடர் கட்டுரைகளை எழுதலானார். இவற்றின் தொகுப்பு நூல் 1996இல் 'சிந்தனைப் பூக்கள்' பாகம்-1 என வெளிவந்தது. தொடர்ந்து நம்நாடு பத்திரிகையிலும் எழுதியமையால் அவற்றின் தொகுப்புகள் 'சிந்தனைப் பூக்கள்' பாகம் -2 என்பது 2001லும், பாகம் -3 2010இலும் வெளியானது. 'சிந்தனைப் பூக்கள்' என்ற பெயரில் நூல்கள் வெளிவருவதால் இவரை 'சிந்தனைப் பூக்கள்' பத்மநாதன் என்றே இலக்கிய உலகம் அழைக்கலாயிற்று.

ரொறன்ரோவில் வெளிவருகின்ற பெரும்பாலான பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் அவரது எழுத்துக்கள் வெளிவரலாயின. சுதந்திரன், விளம்பரம், தமிழர் செந்தாமரை, உதயன், முழக்கம், தாய்வீடு பத்திரிகைகளிலும் தமிழர் தகவல், தூறல், தளிர் ஆகிய சஞ்சிகைகளிலும் உளவியல், மருத்துவ கட்டுரைகள் தொடர்ந்தும் வெளிவந்து பல வாசகர்களை சென்றடைகின்றன. அவரது பல கட்டுரைகள் "Monsoon Journal" என்ற ஆங்கிலப் பத்திரிகையிலும் மொழிபெயர்ப்புடன் வெளியாகியுள்ளன.

ரொறன்ரோவில் இவருக்கு இலக்கியம், தொண்டர் சேவை என்பனவற்றிற்கான விருதுகள் பல கிடைத்துள்ளன. தமிழர் தகவல் மூலம் தொண்டர் சேவை விருதினைப் பெற்ற இவர் 2000ஆம் ஆண்டு தமிழர் தகவலின் 'இலக்கிய சேவை'க்கான விருதினை பெற்றுக்கொண்டார்.

2003 யூலையில் பிரமகுமாரிஸ் உலக ஆன்மீக பல்கலைக்கழகம் 'சிந்தனைச் செல்வர்' என்ற விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. 2004இல் மணிவிழா குழுவினரும் 'சிந்தனைச்செல்வர்' என்ற விருதினை வழங்கி கௌரவித்துள்ளனர். 2012இல் இலங்கையில் உள்ள சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் 'வித்தியா ஜோதி' என்ற விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.


2014இல் தமிழர் சேவை நிறுவனம் (Serving Tamil Organization) 'பொன்மனச் செல்வர்' என்ற விருது வழங்கி கௌரவித்துள்ளது.

2016இல் ரொறன்ரோவில் இயங்கும் தூறல் சஞ்சிகை அவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருதினை வழங்கியுள்ளது. இலண்டனில் வெளிவரும் 'புதினம்' சஞ்சிகையினர் நடத்திய சர்வதேசக் கட்டுரைப்போட்டியில் முதல் பரிசு பெற்று கனடிய எழுத்தாளர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரது கட்டுரைகள் இலண்டனில் 'மேகம்' என்ற சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வானொலி, எழுத்துத் துறைகள் தவிர்ந்த விமர்சனத் துறையிலும் இவரது பங்களிப்புக்கள் முக்கியமாகும். அமரர் எஸ்.கே. மகேந்திரனின் 'என்று முடியும் எங்கள் போட்டிகள்' என்ற நூலுக்கு ஆய்வுரை செய்வதில் ஆரம்பித்த இவரது பணி அளவில்லாத பணியாகத் தொடர்கிறது. நிகழ்ச்சிகளை விமர்சிப்பது, நூல்களை ஆய்வது, அணிந்துரை எழுதுவது அத்துடன் பல்வேறு நூல்களின் வெளியீடுகளிலும் உரை நிகழ்த்திச் சிறப்புச் செய்துள்ளார். இவரது எழுத்தாற்றல் பல அறிஞர்களால் விரும்பப் பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

சிந்தனைப் பூக்கள் பாகம் 2இல் தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் குறிப்பிடும்போது "கடந்த ஒரு தசாப்தமாக அவரை அருகிலிருந்து அவதானித்து வருகிறேன். கல்வித்துறைக்கு அவர் வராது மருத்துவத்துறைக்கு சென்றிருந்தால் மனோ

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை...

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

முதிர்ந்து காற்றால் அசைக்கப்படும்போது விதைகள் காயில் உள்ள சிறு துளைகள் வழியாக வெளியே வந்து விழும். இதன் பூக்கள் பல நிறங்களில் உள்ளன. விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் வைத்திருந்தால் கெடுதல் அடையாது. சுவையும் மணமும் இல்லாதிருப்பதினால் மேனாட்டில் ஒலிவ் எண்ணெயுடன் கலக்கப்படுகின்றது எனவும் அறியமுடிகின்றது. ஜெர்மனி, பிரான்ஸ், வடஇந்தியா போன்ற இடங்களில் கசகசா எண்ணெயை மக்கள் உணவில் சேர்ப்பதுண்டு. 'மேலும் வண்ண ஓவியந் தீட்டும் சாயங்களைக் குழைப்பதற்காக கசகசா எண்ணெய் பயன்படுத்துகின்றனர் எனவும் அறியமுடிகின்றது'.

## கடுகு

இதன் வேறு பெயர் ஐயவியாகும். கடுகு சிறுதாயினும் காரம் கூடியது என்பதை நாம் அறிவோம். கடுகின் விஞ்ஞானப் பெயர் பிராசிக்கா ஜான்சியா (BRASSICA JUNCIA) ஆகும். கடுகில் 25 - 39 சதவீதம் எண்ணெய் இருப்பதாக அறிய முடிகிறது. கடுகின் எண்ணெய்ச்சத்தால் கெடுதி உடம்பிற்கு உண்டு எனவும் கூறப்படுகின்றது. கடுகை நன்கு அரைத்து உடம்பிற்கு தேய்த்தால் எரிவு ஏற்படும். மேலும் அதிக நேரம் வைத்திருந்தால் கொப்பளம் உடம்பில் ஏற்படும் எனவும் அறிய முடிகின்றது. கடுகில் பல இனம் உண்டு. அவையாவன: கருங்கடுகு, வெண்கடுகு, இரண்டுடன் நாய்கடுகு, மலைக்கடுகு, சிறுகடுகு எனவும் கூறப்படுகின்றது. எல்லா கடுகுகளும் பொதுவாகக் காரச் சுவையுடையதாகும். அத்துடன் வாந்தியை ஏற்படுத்தக் கூடியவையாகும். உஸ்ணத்தன்மை உள்ள தாகவும், தடிப்புத்தன்மையை உடம்பில் ஏற்படுத்தக் கூடியதாகவும் செயல்படும். மேலும் கருங்கடுகானது தலையிடியுடன் கூடிய இருமல், பீனிசம், கபம், வாதகபம், குடைச்சல், முடம், அக்கினி மந்தம், குழம்பிய உமிழ்நீர், வயிற்றுவலி என்பனவற்றை கருங்கடுகு விலக்கும் தன்னையுடையது. மேலும் சுகப்பிரசவத்தை தரவல்லது. வாதசீதக்கடுப்பு, சந்துவாதம், கீல்வாதம்,



அசீரணம், தலைச்சுற்று, விக்கல் யாவற்றையும் நீக்கும் தன்மை உடையது. வெண் கடுகு - குழந்தைகளுக்கு உண்டாகும் தோஷங்களுக்கு உகந்ததாகும். முடக்கு வாத நிலையிலும் பாவித்தால் நற்பயன் உண்டு. வயிற்றின் மந்த நிலை நீங்கி சீரணசக்தியை உண்டாக்கும். அத்துடன் வாயுவையும் அகற்றும் தன்மையுண்டு.

## கறிவேப்பிலை

கறி சமைக்கும்போது பாவிப்பதுண்டு. காரப்பொடி, துவையல் செய்வதும் உண்டு. இதில் புரோட்டீன், தாதுப்பொருள், கொழுப்பு, காபோவைதரேட் என்பன செறிந்து காணப்படுகின்றன. அத்துடன் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்தும் கலந்துள்ளது. உயிர்ச்சத்து A, B உண்டு. இதன் பட்டை, வேர் சித்த மருந்துகளுக்கு எடுப்பதுண்டு. கருவேப்பிலை பூ, மல்லிகைப் பூ மணமுடையது. வெண்மை யான பூக்கொத்துக்களும், சிவப்பான கனிக் கொத்துக்களும் காணப்படும்.

இதனை கறிவகைகளிலும், குழம்பு, மிளகுநீர், நீர்மோர் என்பவற்றில் தாளிதமாய்ச் சேர்த்துக்கொள்வர். கறிவேப்பிலையை கறிவேம்பு, கறிவேப்பிலை, கறியபிலை எனவும் அழைப்பதுண்டு. இதன் சுவைத்தன்மை கார்ப்புத் தன்மையாக இருக்கும். இது



உடலை உரமாக்கும். பசியைத் தூண்டும் இயல்புடையது. நோய்நிலையில் அரோசகம், சீதபேதி, வயிற்றுளைவு, நாட்பட்ட சுரம், பித்ததோஷம் நீங்கும் தன்மையுடையது. எனவே இவற்றின் தன்மைகளை அறிந்து பாவிப்பதினால் நற்பயன் உண்டு.





நத்தார் தின வாழ்த்து

விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்.
Vlambaram Publications Inc.


# பவளவிழா...

19 ஆம் பக்கத்தொடர்ச்சி

வியல் பேராசிரியராக வந்திருப்பாரே என்றும் நினைப்பதுண்டு. அப்படியாக அமைந்திருந்தால் நல்லதொரு நண்பர் கிடைக்காமல் போயிருப்பார்" என்கிறார்.

அமரர் பொ. கனகசபாபதி அவர்கள் சிந்தனைப்பூக்கள் பாகம் 2இன் ஆய்வுரையின்போது குறிப்பிடுவது "ஆசிரியர் பத்மநாதன் நிறைந்ததோர் வாசகர் தாம் அறிந்தவற்றை அவதானித்ததை, கேட்டதை, கண்டதை, உணர்ந்ததை சமூக மேம்பாடு கருதி எழுத்திலே வடித்து நம்நாடு பத்திரிகையிலே பிரசுரித்தார்".

அமரர் க. செபரெத்தினம் எழுதிய 'நினைவில் நிறைந்தவை' என்ற நூலில் "பழகுதற்கு ஏற்ற பண்பாளராகவும், பணி செய்வதில் மகிழ்ச்சி காணும் அன்பாளராகவும் 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப நடக்கும் உத்தம உறவாளராகவும் திரு. எஸ். பத்மநாதன் திகழ்கிறார்" என்கிறார்.

சிந்தனைப் பூக்கள் பாகம் 3இல் எழுத்தாளர் நவம் குறிப்பிடும்போது "இருள் இருள் எனக் கூறிக்கொண்டு சும்மா இருப்பதை விடுத்து, ஒரு சிறு மெழுகுவர்த்தியை தேட முயற்சி செய் என்று கன்புயூஷியஸ் (Confucius) ஒருமுறை கூறியிருந்தார் இந்த நூலின் வழியாக நண்பர் திரு. எஸ். பத்மநாதன் எமக்கு சொல்லி வைத்திருக்கிறார். செய்தும் வைத்திருக்கிறார்" என்கிறார்.

பத்மநாதனின் மணிவிழாவின்போது கவிநாயகம் கந்தவனம் இயற்றிய பாடலில் சில வரிகள்
"வாயே வாழ்த்து கண்டாய்' என்றார் அப்பர்பெருமான் வல்லவரும் நல்ல வருமாகிய சிந்தனைச் செல்வரை வாழ்த்துவோமாக" என்கிறார்.

கவிஞர் சித்திவிநாயகம் இவரைப்பற்றிக் கூறும் போது "உண்மை மனிதர், உள் மனதை உள்ளபடியே சொல்லுகின்ற சிந்தனைப்பூக்கள் பத்மநாதனென்றும் சிரித்த மனிதர் இவர்" என்கிறார்.

எழுபத்தைந்து வயது கண்டு பவளவிழா நாயகராகியிருக்கும் பத்மநாதன் ஐந்து தசாப் தங்களுக்கு மேலாக பல்முக திறமைகளில் வாழும் ஒருவராவார். நல்ல ஆசிரியர், விரி வுரையாளர், எழுத்தாளர், சமுதாயவாதி, சிறந்த பேச்சாளர், பண்பாளர், தரமான ஆய்வாளர் என்ற வட்டத்திற்குள் வலம் வருகிறார். அவரை அனைவரும் வாழ்த்துவோம்.

அவருக்கு விளம்பரம் பத்திரிகையின் பவளவிழா வாழ்த்தும் உரியதாகும்!


ALL LINK
TRAVEL & TOURS INC.



வேறு எந்த விமான பிரயாணச் சீட்டு முகவர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!

இந்த கட்டணங்கள் 2019 ஜனவரி மாதத்திற்குரியவை!

*Cheapest air fares:*

- Colombo $ 1100
- Chennai $ 1060
- Bangalore $ 1040
- Paris $ 490
- London $ 520
- Germany $ 690
- Zurich $ 520

*All-inclusive packages:*

- Cuba $ 569
- Mexico $ 699
- Dominican& Republic $ 899

All these fares are applicable for January 2019

Contact: SUTHA

OFFICE-416 293 8700 CELL- 416 312 2995

ALL LINK TRAVEL & TOURS Inc. SCARBOROUGH. AJAX. BRAMPTON. MISSISSAUGA.


## தொல்காப்பிய மன்றம் - கனடா

# ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2018

கனடா தொல்காப்பிய மன்றத்தின் பொதுக் கூட்டத்திற்கும் செயலவை உறுப்பினர் தெரிவிற்குமான அறிவித்தல். நடப்பாண்டு உறுப்பினராகத் தம்மைப் பதிவு செய்து உறுப்புரிமை பெற்றுக்கொள்ளும் அனைவரும் இக்கூட்டத்திற் பங்கேற்க உரித்துடையவர்கள். பதிவிற்கான படிவங்களைத் தொல்காப்பிய மன்ற இணையத்தளத்திற் பெற்றுக்கொள்ளலாம். www.tolcappiyam.ca. அங்கத்தவருக்கான பதிவுகள் 15.12.2018 வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆண்டுச் சந்தா: $15.00 தொடர்புகளுக்கு:
தலைவர்: 416-546-1394, செயலாளர்: 905-479-5375, பொருளாளர்: 647-224-8871
கூட்ட நாள்: 23.12.2018 ( Sunday, December 23rd 2018)
நேரம்: மாலை 3.30 மணி
இடம்: 150, ஸ்காபரோ சிவிக் சென்ரர். (Scarborough Civic Centre)

த. சிவபாலு
தலைவர் 647-403-4965

சபா. அருள்சுப்பிரமணியம்
செயலாளர் 647-706-6124



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**HomeLife GTA Rea**

**AWARD PRESE**

**வருடாந்த ஒன்று கூடலும்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## lty Inc. Brokerage
## NTATION 2018
## விருது வழங்கல் விழாவும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகரின் இறை காதல்



நா. க. சிவராமலிங்கம்

திருவாசகம் மணிவாசகரின் அகவரலாறு எனலாம். அன்புப்பாதையில் அவர் உள் ளம் பயணித்த வரலாறு அது. இதனை ஓர் ஆன்மீகப் பயணம் என்றும் கூறலாம். நட்பிலும் காதலிலும் மனிதனது உணர்வு ஆழ்ந்து செல்வதைப் போன்று மணி வாசகரின் உணர்வு இறை அன்பில் ஆழ்ந்து சென்றது. அதன் தொடக்கம் முதல் முழுப் பரிமாணத்தையும் காட்டுவது திருவாசகம்.

மணிவாசகரின் அன்பின் வளர்ச்சி இரு வகையாக இருந்தது. ஒருபுறம் இறை வனின் நினைவில் ஒன்றியிருந்தது. இது அமைதி அன்பிற்கு இலக்கணமாகும். மறுபுறம் அவனைக் காணாமையால் இரங்கி, அரற்றி, அவனை தேடிப் பிடித்துக் கொண்டவர் போல திரிந்தது. அன்பின் ஆற்றாமைக்கு எடுத்துக் காட்டாக விளங் கியது தமது இவ்விரண்டு நிலைகளையும் 'கசிவது பெருகி கடலென மறுகி' என்று அவர் விளக்கியுள்ளார்.

'தப்பாமே தாம்பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுது உடல்
கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்'

என்று அதன் மெய்பாடுகளை விரித் துரைக்கு முகமாக கூறியுள்ளார். தமது அன்பின் ஆற்றாமையை வருத்தமும், திகைப்பும், ஏக்கமும் தோய்ந்த அன்பை பின்வருமாறு கூறியுள்ளார்

சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணதுவாக கோணுதல் இன்றிச்
சதுர் இழந்து அறிமால் கொண்டு சாரும்
கதியது பரம அதிசயமாக
கற்றா மனம் எனக் கதறியும் பதறியும்

என்று அதன் மெய்ப்பாடும் விளைவும் தோன்ற எடுத்துரைக்கின்றார்.


இறைவன் மீது அவர் கொண்டிருந்த அன்பு இவ்வண்ணம் வளர்ந்து விருத்தியான போது மனத்தின் ஆழத்தில் புதைந்திருந்த உ லகியல் வாசனை பெரிதும் நீங்கிற்று. இதனால் மந்திரிப் பதவியை துச்சமெனக் கருதித் துறந்தார். உலகில் வெற்றியுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் மறைந்தது. மேலும் பெண்கள் வாழ்க்கைக் கடலில் சுழித்து அடிக்கும் காற்று என்ற உ ணர்ச்சியும் மறைந்தது. தம்மையே ஒரு பெண்ணாகக் கருதி பிற பெண்களை தோழியராகக் கொண்டு மகளிர் ஆடும் விளையாட்டுக்களை அவர்களுடன் விளை ஆடுவதாக பாவனை செய்து அவ் விளையாட்டுக்களில் இறைவன் நினைவை யும் அவனது புகழையும் திருக் காட்சியையும் அதனால் தாம் பெற்ற அனுபவத்தையும் இணைத்துப் பாடும் நிலை அவரிடம் தோன்றியது. திரு எம் பாவை, திருபொற்சுண்ணம் திருக்கோத் தும்பி, திருப்பூவல்லி, திருத்தேணக்கம், திருச்சாழல், திருவுந்தியார், திருப் பொன்னூசல் ஆகியவை புலன் உணர்வில் எஞ்சி நின்றி வாசனையையும் அவர் வென்று விட்டமைக்குச் சான்றாகும். மாறி நின்று தன்னை மயக்கிய வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து உள்ளத்தில் ஊறி நின்ற பரம்பொருளின் பெருங் கருணையால் ஈறிலாப் பதங்கள் பெற்ற பேற்றினை வியந்தவையாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. மகளிர் விளையாட்டுக் களை வைத்து அவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்திலும் இத்தெய்வீக உணர்வே நிலவுகின்றது. இப்பாடல்கள் மணிவாசகர் காதல் உணர்வுடன் இறைபணி செய்ததை உணர்த்தும்.

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்து சோதியாய்
அன்பமைந்து
சீரார் பெருந்துறையான் என்னுடைய
சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து

என்றபடி அழையாமலே வந்து ஆட்கொண்ட அருள் வள்ளலான ஆண்டவனை தனக்கு இடையூறு ஏற்பட்ட போது இரங்கா மலிருப்பது பிறைசேர் சடையானே இது உனக்கு முறையோ என்று பிரலாபிக்கின்றார்.

மிகுதியான அன்பைத் தருமாறு இறைவனை மணிவாசகர் அழுது அழுது வேண்டியதற்கு ஏற்ப அவன் ஓரிரு முறை அகக் காட்சி வழங்கியதன் விளைவே அவரது இறை காதல். அந்தக் காதலையே நினைந்து ஆனந்தக்கண்ணீர் ஒருகாலும், பிரிவால் வந்த துயரக்கண்ணீர் ஒருகாலும் சிந்தினார். மணிவாசகரை சிவமாக்கி ஆண்டு கொண்ட இறைவனைக் காணாத போதெல்லாம் தேடித் திரிந்தார். ஆண்டு கொண்டு அருள் பாலித்தவன் அருளாமல் இருப்பது ஏன் எனத் திகைத்தார். அதன் காரணமாகவே துன்பக் கண்ணீர். இதுகே அவரது ஆதங்கம்.

இறைவன் தமக்கு திருப்பெருந்துறையில் அகக்காட்சி நல்கியது முதல் இப்பொழுது வரை அவன் அளித்த சிவானந்தமும் சோத னையும் திகைப்பும் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறுவதற்காக தொடர்ச்சி யாக நிகழ்ந்தவையாகும். அந்நோக்கம் தமது உயிரை அநாதியாகப் பற்றியிருந்த ஆணவ மலத்தினை வேரோடு களை தலாகும் என்பதனை இப்போது உணர்ந்து குறிப்பிடுகின்றார். இதனை பொய்யிருள் கடிந்த மெய்சுடரே' என்று பாடி புளகாங்கித மடைகின்றார். ஆணவமலம் வேரோடு நீங்கி யமையினால் அவரது திகைப்பு முற்றும் நீங்க சிந்தை தெளிந்து முழு ஞானம் கைவரப் பெற்றார். சீவன் முத்தராயினர் அந்நிலையில் 'சிந்தை தனை தெளிவித்து



சிவமாக்கி எனை ஆண்ட அந்த மிலா ஆனந்தம் அணிதில்லை கண்டேனே' என்று பாடுகின்றார்.

மணிவாசகர் தாம் பெற்ற இறைவாழ்வு முற்றிலும் புதுவாழ்வு என்பர். முன்பு தம்மிடம் இருந்தவற்றை எல்லாம் அழித்து இறைவன் தம்முட் புகுந்தான் என்றும் அதனால் தமது எலும்பு எல்லாம் உருகினை என்றும் பாச ஞானத்தார் உலகப் பொருள்களையும் இயல்புகளையும் மாறுபடும் இரட்டைகளாக உணரும் நிலை நீங்கிற்று என்றும் கூறுகின்றார். ஐம்பூதங்கள் அழிந்தாலும் அவை அழியும் ஊழிப் பெயர்ச்சியில் தான் அழிதலின்றி என்றும் ஒரே தன்மையதாய், சத்தாய் உள்ளவனுக்கு தனது ஊன்கெட்டது, உயிர் கெட்டது உ ணர்ச்சி கெட்டது, உள்ளம் கெட்டது. நான் என்ற அகங்காரம் கெட்டது என்று பாடியுள்ளார்.

வான்கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றி சலிப்பு
அறியாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர் கெட்டு
உணர்வு கெட்டென் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித்
தெள்ளோணம் கொட்டாமோ

இந்த இன்ப அன்பு நிலையில் 'அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவோ' என்ற பெருமித உணர்வில் திளைக்கின்றார். ஆட்கொண்டு அருளிய இறைவனால் ஈட்டிய இன்பத்தில் திளைத்து, நாட்பட தன்னை கைவிட்டதனால் ஏற்பட்ட வேட்கையை வெளிப்படுத்துகின்றார்.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடமை எல்லாமும்
குன்றே அணையாய் எனை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## வாசகர் குரல்

• கனடிய அரசுக்கு வருமான வரி செலுத்துவதில் தவறு செய்து சிறை சென்றவர்களின் கதைகள்.
• கனடாவில் சிறை சென்ற வருமான வரி யோடு சம்பந்தப்பட்ட தொழில் செய்வோரின் கதைகள் என்ற இரு வெவ்வேறு தலைப்புகளில் கடந்த இரண்டு 'விளம்பரம்' பத்திரிகைகளில் சிவ. பஞ்சலிங்கம் எழுதிய கனடியத் தகவல் தொடரினைப் படித்த எனக்கு கனடாவில் தமிழர் ஒருவருக்கு நடந்த உண்மையான சம்பவத்தினை பெயர் குறிப்பிடாது சகலருக்கும் ஓர் எச்சரிக்கைக்காக சொல்ல வேண்டும் என்ற உணர்வுடன் இங்கு குறிப்பிடுகின்றேன். கனடாவின் வரி செலுத்தும் விடயங்களில் GST வரி என்பது கவனமாகக் கையாளப்பட வேண்டிய விடயமாகும். அதாவது வர்த்தகம் செய்வோர் அரசுக்குச் செலுத்துவதற்காக வாடிக்கையாளர்களிடம் அறவிடும் கட்டணம் ஆகும்.

கனடாவில் வர்த்தக நிறுவனம் நடத்திய தமிழர் ஒருவருக்கு அவரது வர்த்தகம் இலாபகரமாகவோ அல்லது திருப்தியாக வோ தொடர்ந்து அமையாத காரணத்தினால் தமது வர்த்தகத்தினை இழுத்து மூடி விட்டார். கடைசி சில வருடங்கள் வருமானவரி தாக்கல் செய்யவில்லை. அவர் பதிவு செய்து வைத்திருந்த GST வரி தொடர்பான சமர்ப்பணங்கள் எவையும் கனடாவின் வருமானவரி நிறுவனத்திற்கு வழங்க வில்லை. தொடர்ந்து அவர் இங்கிலாந்துக்கு புலம்பெயர்ந்து விட்டார்.

கனடிய வருமானவரி நிறுவனம் கனடாவில் உள்ள அவரது முகவரிக்குக் கடிதங்கள் அனுப்பியிருந்தது. அவை எல்லாம் அவருக்குக் கிடைக்கப்பெறாத கடித மாகவே போய்விட்டது.

காலம் கடந்து ஒரு நாள் கனடாவுக்கு வருகை தருவதற்காக ரொறன்ரோ விமான நிலையத்தில் வந்து இறங்கினார். ஏற்கனவே கைது ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் விமான நிலையத்தில் அவருக்குக் கைவிலங்கு மாட்டப்பட்டது. தொடர்ந்து பிணையில் விடுதலையாகி நீதிமன்றத்தினால் சட்டரீதியாகத் தண்டிக்கப்பட்டார்.

இறுதியாக இவ் அனுபவத்திலிருந்து சொல்ல வருவது யாதெனில் அனுபவமுள்ள வருமானவரி நிபுணர்களின் ஆலோசனைகளின்படி சட்ட வரம்புகளை மீறாது செயல்படுங்கள். எதுவித ஆபத்தும் ஏற்படமாட்டாது.

- கரு. கந்தையா -

நம் கோபங்களின் அர்த்தம் புரியாதவர்களுக்கு
நம் பாசத்தின் ஆழம் புரியாது...
அவர்களிடம் கோபத்தை காட்டுவதும் வீண்...
பாசத்தை எதிர்பார்ப்பதும் வீண்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா நிகழ்வுகளுக்கும் காரணங்கள் உண்டு




## There are reasons for all events

மனித வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளுக்கும் விதி தானே காரணம் என்பர். இயற்கை அனர்த்தங்கள் என்றாலே ஆண்டவன் கோபத்தை காட்டுகிறார் என்பர் மத நம்பிக்கையாளர்கள். கருத்துக் கணிப்பின்படி 38 சதவீதம் அமெரிக்கர்கள் கூட இயற்கை பேரழிவுகள் கடவுளிடமிருந்து வரும் அறிகுறிகள் என நம்புகின்றனர். நிகழ்வதற்குரிய சாத்தியக் கூறினை தந்துள்ளேன் படித்து காரணத்தை அறிந்து கொள்வோம்.

புயல், சூறாவளி, காட்டுத்தீ, எரிமலை, வெள்ளம், மண்சரிவு, போன்ற எல்லா நிகழ்வுகளுக்கும் காரண காரியங்கள் உண்டு. கடலில் தாழமுக்கம் ஏற்படுவது வழமையானது தான். ஆனால் தாழமுக்கம் என்றால் என்ன? சூறாவளி ஏன் வருகிறது? அதன் பண்புகள் என்ன என்பது பற்றி வானியல் ஆராய்ச்சித் துறையில் இருப்பவர்களுக்குத் தெரிந்திருந்தாலும், சாதாரண குடிமக்களான நமக்கு அவ்வளவாகத் தெரிந்திருப்பதில்லை. தமிழில் சூறாவளி அல்லது புயல் என்று நாம் அழைத்தாலும், ஆங்கிலத்தில் பல்வேறு பெயர்களால் இந்த வெப்பவலய புயல்களை அழைகின்றனர்.


எப்பொழுதெல்லாம் காற்று சூடாகிறதோ, அது விரிந்து லேசாகிறது. லேசான காற்று மேலே செல்கிறது. அது ஏற்படுத்திய வெற்றிடத்தை நிரப்பக் கனமான குளிர்ந்த காற்று ஓடோடிச் செல்கிறது. இந்தக் காற்று செல்லும் வேகம் காரணமாகவே புயல்கள் உருவாகுகின்றன.

பூமிப்பந்து வெப்பதட்பங்களால் சூடேறியிருக்கிறது. என்னதான் கடல், ஆறு, ஏரிகள் இருந்தாலும் கூட, வெப்பத்தைச் சீராக்கும் கைங்கரியத்தைப் புயல் தான் செய்கின்றது. அதிவேகமான புயல், பரந்த பரப்பளவைக் காற்றினால் சீராக்கி விடுகின்றது. இதனை மனிதரால் செய்ய முடியாது. புயல் வெப்பமண்டலத்தை அண்மிய சமுத்திரப்பிரதேசத்தில் ஏற்படும் குறைவழுத்த வளிமண்டல நிலைமையால் ஏற்படும் சுழற்சியான வேகமான காற்றும், அதனுடன் சேர்ந்த இடியுடன் கூடிய மழையையும் குறிக்கும்.

பொதுவாக இந்த வெப்பமண்டல புயல்களை பல நிலைகளில் பிரிக்கலாம்.

வெப்பமண்டலக் காற்றழுத்த சுழற்சி - வெப்பமண்டல அல்லது வெப்பமண்டலத்தை அண்மிய பகுதிகளில் காற்றழுத்தத்தில் ஏற்படும் மாற்றம், கிட்டத்தட்ட 200 தொடக்கம் 600 கிலோமீற்றர் விட்டத்தைக் கொண்ட பரப்பில் உருவாகும் இந்த வித்தியாசம் 24 மணிநேரத்திற்கு மேல் அதேநிலையில் இருத்தல் வேண்டும்.

வெப்பமண்டல அழுத்தம் - காற்றழுத்த சுழற்சியினால் ஏற்பட்ட சுழல்காற்றின் வேகம் மணிக்கு 62 கிலோமீற்றரை விடக் குறைவாக வீசும் பட்சத்தில் அது வெப்பமண்டல அழுத்தம் எனப்படும்.



வெப்பமண்டலப் புயல் - நீடித்த மேற்பரப்பு சுழல்காற்றின் வேகம் மணிக்கு 62 கிலோமீற்றரை விடக் கூடுதலாகும்போது அது வெப்பமண்டல புயலாகிறது.

சூறாவளி - இதுவே மேற்பரப்புக் காற்றின் வேகம் மணிக்கு 118 கிலோமீற்றரை விட அதிகரிக்கும்போது அதனை நாம் சூறாவளி என்கிறோம்.

சூறாவளியை சபீர் சிம்சன் அளவுகோலின் படி 5 பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இதில் பிரிவு 1 உக்கிரம் குறைந்ததாகும், பிரிவு 5 மிக உக்கிரமான சூறாவளியாகும். ஆனால் அதைவிடவும் பெரிய சூறாவளி ஒன்று உண்டு. அதுதான் சூப்பர் ரைபூன் (super typhoon), இதனது வேகம் மணிக்கு 234 கிலோமீற்றரை விட அதிகமாக இருக்கும்.

சூறாவளி அல்லது புயல் என்பது உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. மேற்கிந்தியத் தீவுகளில் சூறாவளி (Hurricane-ஹரிகேன்) என்றும், ஐக்கிய அமெரிக்காவில் சுழன்றடிக்கும் சூறாவளி (Tornado-ரொர்னாடோ) என்றும், சீனக் கடற்கரைப் பகுதிகளில் சூறாவளிப் புயல் (Typoon-ரைபூன்) என்றும், மேற்கு அவுஸ்திரேலியக் கடற்கரைப் பகுதிகளில் புயல் (Willy Willy-வில்லி வில்லி) என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் புயல் (Cyclone- சயிக்லோன்) எனப்படுகிறது. இவை அனைத்தும் ஒரே பொருளையே குறிக்கிறது.

ஒரு வருடத்தில் சுமாராக 100 புயல்கள் உலகம் முழுவதும் உருவாகின்றன. இதில் சுமார் 12 புயல்கள் அட்லாண்டிக் கடலிலும், 15 புயல்கள் கிழக்கு பசிபிக் கடலிலும் மற்றவை உலகின் மற்றைய பகுதிகளிலும் உருவாகின்றன. பெரும்பாலான புயல்கள் ஒரு வாரமோ அல்லது அதற்கு அதிகமான காலத்துக்கோ மையம் கொண்டிருக்கலாம். ஒரே கடற்பகுதியில் ஒரே நேரத்தில் இரண்டு புயல்கள் அடுத்தடுத்து உருவாகியிருக்கலாம். அல்லது ஒரு புயல் வலுவிழக்கும் நேரத்திலேயே, மற்றொரு புதிய புயல் உருவாகலாம். ஒரு புயல் எங்கு உருவானது, எந்தத் திசையில் வருகிறது என்பதை உடனடியாக அறிவதற்கும், எச்சரிக்கை அடைவதற்கும் வசதியாகத்தான் பெயர் வைக்கும் வழக்கம் உருவானது.

இவ்வாறு பெயர் வைக்க ஆரம்பித்தபோது அந்தக் காலநிலை ஆராய்ச்சியாளர் இந்தப் புயல்களுக்கு அவர் தனது முன்னாள் மனைவியின் பெயரையும், தனக்கு பிடிக்காத அயல் வீட்டுக்காரரின் பெயரையும் வைத்ததாகக் கூறப்படுகிறது. பெயர்கள் சுருக்கமாக இருக்க வேண்டும் என்பதே அடிப்படை விதி. வானிலை ஆய்வாளர்களும், கடல் மாலுமிகளும், பொதுமக்களும் வானிலை எச்சரிக்கையைச் சரியாகப் புரிந்துகொண்டு செயல்படுவதற்கும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கும் வசதியாகவே பெயர்கள் கொடுக்கப்படுகின்றன.

தற்பொழுது உலக காலநிலை அமைப்பின் (World Meteorological Organisations) மண்டல அமைப்புகள் பெயர்களை அட்லாண்டிக் பகுதி, மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர்களைத் தேர்வு செய்துள்ளனர்.

அட்லாண்டிக் கடல் பகுதி மற்றும் கிழக்கு பசிபிக்கில் உருவாகும் புயல்களுக்கு ஆறு பெயர்ப் பட்டியல்கள் உருவாக்கப்பட்டன. இந்தப் பெயர்கள் ஆறு வருடங்களுக்குப் பிறகு திரும்பவும் உபயோகப்படுத்தப்படும். இந்தப் பெயர்களில் மோசமான விளைவுகளை ஏற்படுத்திய புயல்களின் பெயர்கள் மட்டும் நீக்கப்படும்.

ஹவாயன் (Hawaiian) பெயர்கள் மத்திய பசிபிக்கில் உருவாகும் புயல்களுக்கு வைக்கப்படுகிறது. உலக காலநிலை அமைப்பு போன்று உருவாக்கப்பட்ட மற்ற கால நிலைக் கமிட்டிகள் இதுபோன்ற பெயர்களைத் தேர்வு செய்து உபயோகப் படுத்தி வருகின்றது. 2000ஆம் ஆண்டில் இருந்து இந்தக் கமிட்டிகள் பல மொழிகளின் பெயர்களை உபயோகப்படுத்தி வருகின்றது.

இதுபோன்று வடஇந்தியக் கடல்களில் ஏற்படும் புயல்களுக்கு புதுடெல்லியில் காலநிலை மையம் பங்களாதேஷ், இந்தியா, மாலத்தீவு, மியான்மார், ஓமன், பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, தாய்லாந்து ஆகிய 8 நாடுகளும் சேர்ந்து 64 பெயர்களை உருவாக்கியிருக்கின்றன. இந்நாடுகளில் ஏற்படும் புயல்களுக்கு இந்தப் பட்டியலில் இருந்து பெயர்கள் வைக்கப்படும். இதேபோன்று தென்மேற்கு இந்தியக்கடல்களில் ஏற்படும் புயல்

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)




# சிந்தனைப்பூக்கள் பத்மநாதனின் ஆண்டகவை எழுபத்தைந்தின்போது



ஆண்டெ ழுபத்தைந்தை ஆர்வமுடன் கொண்டாடும்
மாண்பார் மனைவிபிள்ளை மற்றுமுள - நண்பர்கள்
ஒன்றுகூடும் நல்விழா ஒற்றுமை ஓங்கிடவும்
நன்றாய் நடந்திடவும் வாழ்த்து.

நல்லா சிரியனிடம் நற்கல்வி பெற்றவர்கள்
பல்வே றிடங்களில் பக்குவமாய் - நற்றொழில்கள்
பெற்று நலமுடனே பேருவகை யாளராய்
கற்றறிவால் வாழ்கின்றார் காண்.

நல்ல எழுத்தாளன் நாடுபோற்றும் பண்பாளன்
சொல்லாற்றல் மிக்கதிந்த சோர்விலன் - கற்றார்
களிப்புறவே காட்டிடுவார் தன்பேச்சை மேடைகளில்
விளிப்புணர்வு மேலோங்கத் தான்.

பண்பால் உயர்ந்திட்ட பத்மநாதன் பார்புகழ்
தண்டமிழில் வல்லநற் சிந்தையன் - வண்ணத்
தமிழில் வகைவகையாய் நூலெழுதும் சிற்பி
திமிரற்ற நல்லாசிரி யன்.

வாழ்கவே பல்லாண்டு வண்ணத் தமிழ்போல
தாழ்விலாச் சிந்தையனே தக்கநல் - ஆழ்ந்தறிவால்
செந்தமிழ் நூல்களை செப்பமுறத் தானளிக்கும்
சுந்தரனே வாழ்கபல் லாண்டு.

சிந்தனைப் பூக்கள் சிறந்த எழுத்தாளர்
எந்தன் தமிழுக்கு ஏற்றமுற - நித்தமும்
பத்திரிகை யில் எழுதும் பண்பாளர் பத்மநாதன்
வித்தகர் வாழ்க இனிது.

எழுபத்தை ந்திலும் இன்றும் இளைஞர்
ஒழுக்கம் நிறைந்த ஓங்கல்-வழுக்கியும்
சொல்லார் அழுக்கான சொற்கள் உலகினில்
பல்லாண்டு வாழ்க உயர்ந்து.
அன்பின் சிந்தனைப்பூக்களே வாழ்க பல்லாண்டு.

- கந்த. ஸ்ரீபஞ்சநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை -7

## விழாக்கள், சம்பவங்கள்



- துறையூரான் -

சென்ற முறை சுதந்திரதின விழா, நல்லூர்த்திருவிழா பற்றிப் பார்த்தோம். இம்முறை அந்நாட்களில் நினைவுக்கு வரும் விசேட சம்பவங்கள் பற்றிப் பார்ப்போம். 1951இல் சம்பத்தரிசியார் கல்லூரி (St. Patricks College) ஒரு பெரிய காணிவேல் நடத்தியது. யாழ்ப்பாணத்தில் நான் சிறு வனாக இருந்தபோது பார்த்த முதல் காணிவேல். அப்போது வண. பிதா லோங் அக்கல்லூரியின் அதிபராக இருந்தார். பாட சாலைக் கட்டிட நிதிக்காக அக்காணிவேல் நடத்தப்பட்டது. லொத்தர் ஒன்று ஒழுங்கு செய்து அதற்கு முதற்பரிசாக ஒரு வோக்ஸ் வகன் காரை கொடுப்பதாக விளம்பரம் செய்தார்கள். இதல் ஒரு முக்கியமான செய்தி என்னவென்றால் அக்காரை ஒரு லொறியில் ஏற்றி நகரின் எல்லாப் பகுதி களுக்கும் எடுத்துச் சென்று லொத்தர் சீட்டு விற்பனை செய்யப்பட்டது. ஒரு சீட்டின் விலை ரூபா 2. அக்காலத்தில் காலிஜிம் கானா என்ற லொத்தர் குலுக்கலை மாதம் தோறும் அரசு நடத்தி வந்தது. அச்சீட்டின் விலையும் ரூபா 2 தான். எனவே இந்த லொத்தர்முறை யாவருக்கும் தெரிந்திருந் தது. இத்துடன் முதன் முதலாக மல்யுத் தமும் யாழ். மக்களுக்கு அறிமுகஞ் செய்யப்பட்டதும் இந்தக் காணிவேலில் தான். கிங்கொங், தாராசிங், பரண்வொன், ஹொக்சி போன்ற மல்யுத்த வீரர்கள் வேறும் பலருடன் மல்யுத்தம் புரிநதனர். மக்கள் கூட்டம் அலை மோதியது. அந்நாட்களில் மாட்டுவண்டி, திருக்கல் வண்டிகளில் பலர் கிராமங்களிலிருந்து வந்து பங்கு பற்றினர். மல்யுத்த வீரர்கள் திறந்த வான்களில் கதிரைகள் போட்டு அமர்ந்திருக்க அவர் களை நகர்முழுவதும் கொண்டு சென்று நுழைவுச் சீட்டுகள் விற்பனை செய்யப் பட்டன. அப்போது நுழைவுச்சீட்டு 5ரூபா, 10ரூபா, 50ரூபா என விற்கப்பட்டன. அக் காணிவேல் யாழ்ப்பாணத்தில் வரலாறு படைத்தது என்றால் மிகையல்ல. இதில் சேர்க்கப்பட்ட பணத்தில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டது என நினைக்கிறேன்.

அந்நாட்களில் நகர்ப்பகுதிகளுக்கு தற்போது யாழ். வைத்தியசாலையுள்ள ஓரிடத்தில் ஒரு பெரிய மின்பிறப்பு இயந்திரம் இயங்கியது. மாலை 7மணி தொடக்கம் 9மணி வரையும் தெருக்களுக்கு மட்டும் மின்விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. விசேட விழாக் களுக்கு மின்சாரம் பெறுவதற்கு மின் பிறப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன. யாழ். நகரசபை எல்லைக்குள் மின்கம் பங்கள் நிறுவப்பட்டு கம்பிகள் மூலம் மின் சாரம் விநியோகிக்கப்பட்டது. மின்கம்பங் களில் கண்ணாடிக்கூடுகள் போன்றவற்றுள் மின் குமிழ்கள் இருந்தன. இவற்றை எரிய வைக்க மின் கம்பத்திலுள்ள ஒரு சுவிச்சைத் தட்டி விடுவதற்கு ஒருவர் ஒரு கொழுக்கி பொருத்திய நீண்ட கோலோடு பிற்பகல் 6:30 மணியளவில் வேலையை ஆரம்பிப்பார். பின் 9மணியளவில் அவ்விளக்குளை அணைத்து விடுவார். இவ்வாறு ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவராய் பலர் வேலை பார்த்தனர். மின் சாரம் வருவதற்கு முன் மின்கூடுகளுக்குள் விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன என அறி கிறேன். அந்நாட்களில் மாலை 6மணிக்கே நகர்ப்புறக் கடைகள் முதலியன பூட்டப்பட்டு விடும். அதன்பிறகு அதிக நடமாட்டம் இருக்கவில்லை.

மேலும் அந்நாட்களில் தனியார் பஸ் வண்டிகளும் வான்களும் போக்குவரத் துக்குப் பாவிக்கப்பட்டன. முக்கியமாக நோதேன் பஸ் கம்பனி மல்லாகம் பஸ் கம்பனி போன்றவை மிகப் பிரபலமானவை. பெரும்பாலும் சாதாரண மக்கள் சைக்கி ளையே பெரும்பாலும் பாவித்தனர். விளை பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதும் கடைகளுக்கு எடுத்துச் செல் வதற்கும் சைக்கிளையே பாவித்தனர். சில வேளைகளில் நான்கைந்து வாழைக் குலை களை ஒரு சயிக்கிளில் ஏற்றிச் செல்வதைக் காணலாம். காய்கறிகளை மூடைகளாக ஏற்றிச் சென்றனர்.



சம்பத்தரிசியார் கல்லூரிக் காணிவேலுக்குப் பின் முத்தவெளியில் ஒரு பெரிய கொட்டகை போட்டு மல்யுத்த போட்டிகளை யாழ். மாநகரசபை நடத்தியது. முன்பு பங்கு பற்றிய மல்யுத்த வீரர்களுடன் இன்னும் பலரும் பங்கு பற்றினர். இது ஏறக்குறைய ஒரு மாதத்துக்கு நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலுமிருந்து மக்கள் ஏராளமாக வந்து பார்த்து மகிழ்ந்தனர். அந்நாட்களில் சினிமாவைத் தவிர வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் எதுவும் இல்லாததால், இந்நிகழ்ச்சிக்கு நல்ல வரவேற்பிருந்தது. இந்நிகழ்ச்சியைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்த ஒரு வர்த்தகர் அங்கேயே மாரடைப்பினால் இறந்து போனதும் எனக்கு ஞாபகத்திலுள்ளது. அந்நாட்களில் தமிழ் செய்தித் தாள்களாக இருந்தவை கொழும்பிலிருந்து வந்த தினகரனும் வீரகேசரியுமாகும். தற்போது யாழ். குடா நாட்டிலேயே பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. யாழில் அந்நாட்களில் வெளிவந்த முதல் வாரப் பத்திரிகை ஈழகேசரி என நினைக்கின்றேன். சில பத்திரிகைகள் தோன்றியபின் மறைந்துபோயின.

1952ஆம் ஆண்டில் கொழும்பில் பொது நலவாய மாநாடுகளின் பொருட்காட்சி நடை பெற்றது. இதைப் பார்ப்பதற்கு நான் என்னுடைய பெரிய தந்தையாரோடு முதன்முதலாக கொழும்பு சென்றேன். இந்தப் பொருட்காட்சி அங்கிருந்த குதிரைப் பந்தயத்திடலில் நடந்தது. 52 நாடுகள் இப்பொருட்காட்சியில் பங்குபற்றின. இதைத் திறந்து வைப்பதற்கு தற்போதைய மகாராணி எலிசபெத் II தனது கணவருடன் வந்திருந்தார். அலரி மாளிகைக்கு முன் முடி போன்ற அமைப்பில் ஒரு பெரிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. இதுபோன்று பல வடிவங்களில் பந்தல்கள் காலி வீதியில் அமைக்கப்பட்டிருந்தன. நான் அலரிமாளிகைக்கு முன்னிருந்த பந்தலில் கூடியிருந்த பலருடன் மகாராணியின் ஊர் வலம் வருவதைப் பார்த்துக் கொண்டிருந் தேன். கையில் ஒரு பெட்டிக் கமராவை வைத்துப் படமெடுத்தேன். கமரா வைத் திருந்ததால் அங்கிருந்த பொலிஸ்காரர் என்னை யாவருக்கும் முன்நிற்க விட்டார். நான் அழகான ஒரு படம் எடுத்தேன். அந்நாட்களில் கமராவுக்கள் படச்சுருளைப் போட்டு ஒவ்வொரு படமும் எடுத்தபின் கையால் ஒரு கைப்பிடியைச் சுழட்டி அடுத்த படம் எடுக்கத் தயாராகச் சுருளை வைக்க வேண்டும். முதலில் ஒரு படச்சுருளில் 12 படங்களை எடுக்கலாம். பின் இது 16 படங்களாக அதிகரிக்கப்பட்டது. இந்தப்படச் சுருளை படம் கழுவும் ஸ்ரூடியோக்களில் கொடுத்து வெள்ளைத் தாள்களில் பிறின்ற் பண்ணி எடுக்க வேண்டும். ஒரு படச்சுருள் கழுவி பிரதி (பிறின்ற்) எடுக்க 4ரூபா முதல் 5ரூபா செலவு செய்ய வேண்டும். ஆரம்பத்தில் கறுப்பு வெள்ளையிலேயே பிரதிகள் கிடைத்தன. தற்போது கமரா எவ்வளவோ மாறுதல்களுக்குள்ளாகி கையடக்கத் தொலைபேசியில் வந்து படங்கள் மட்டுமல்ல வீடியோக்களும் எடுத்துப் பல புரட்சிகரமான சமூக மாற்றங்களை ஏற்படுத்தி வருவதை நீங்கள் யாபேரும் அறிவீர்கள்.

பொருட்காட்சியில் பங்குபற்றிய நாடுகள் ஒவ்வொன்றும் ஒரு பெரிய பந்தலை அமைத்து தத்தம் நாட்டில் நடைபெறுகின்ற பல தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களையும் பல்வேறு தொழிற்சாலைகளின் மாதிரி உருவங்களையும் பெரிய படங்களையும் காட்சிப்படுத்தியிருந்தன. கனடாவும் பல இயந்திரங்களையும் பல்வேறு உற்பத்திப் பொருட்களையும் காட்சிக்கு வைத்திருந்தது. தொடர்வண்டியின் டீசல் இயந்திரமொன்று அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த டீசல் இயந்திரம் எமது போக்குவரவு அமைச்சுக்கு இலவசமாகப் பொருட் காட்சியின் முடிவில் வழங்கப்பட்டது. இந்த இயந்திரத்தை வைத்து முதல் முதலில் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் கடுகதி தொடர்வண்டிச் சேவை ஆரம்பிக் கப்பட்டது. வழக்கமாகப் புகைவண்டியில் 10 மணிக்குமேல் எடுத்த பிரயாணம் 6 மணியாகக் குறைக்கப்பட்டது. இதனால் ஒரே வண்டி காலையில் கொழும்பிலிருந்து புறப்பட்டு மதியம் காங்கேசன்துறை வந்து சிறிது நேரத்தின் பின் கொழும்புக்குத் திரும்பிச் சென்றது. இச் சேவையால் பலர் பலன் பெற்றனர். தொடர்வண்டித் திணைக்களமும் அதிக இலாபமடைந்தது.

இந்தப் பொருட்காட்சியை முழுவதும் பார்ப்பதானால் குறைந்தது ஒருவாரமாவது தேவை. சில பந்தல்களுக்கு முன்னால்




மக்கள் மணிக்கணக்காக வரிசையில் நின்றனர். பெரும்பாலும் பாடசாலைப் பிள்ளைகளும் வெளிமாவட்ட மக்களுமே பெருவாரியாகக் காணப்பட்டனர். எனவே எனது மைத்துனர் ஒருவர் கொழும்பில் வேலை பார்த்தவர். சனி, ஞாயிறு நாட்களில் முழுநாளும் கூட்டிச் சென்று பல பந்தல்களை பல நாட்டுப் பொருட்களைப் பார்த்தோம். அவருக்கு ஆங்கிலம் அதிகம் தெரியாததால் நான் அங்கிருந்தவர்களிடம் விளக்கங்களைக் கேட்டும் எழுதியிருந்த வற்றை வாசித்தும் உதவினேன். வார நாட்களில் மதியம் 1மணிக்கும் வார இறுதி நாட்களில் காலை 10 மணிக்கும் காட்சி ஆரம்பித்து 10மணிவரை திறந்திருந்தது. இது உண்மையிலேயே வாழ்க்கையில மறக்க முடியாத ஒரு சம்பவம்.

பொருட்காட்சி மைதானத்தில் பல்வேறு சிற்றுண்டிச்சாலைகளும் குளிர்பானக்கடை களும் மக்கள் இளைப்பாறும் இடங்களும் குழந்தைகள் விளையாடும் சிறிய பூங்காக் களும் சிறப்பாக ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன. இத்துடன் பல்வேறிடங்களிலு மிருந்தும் பஸ் சேவைகளும் பொருட்காட்சி முடியும் வரைக்கும் நாள் தோறும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பொலிஸ் திணைக்களம், சுகாதாரத்திணைக்களம், வைத்தியசாலை போன்ற நிறுவனங்களும் மைதானத்தில் நிலையங்களை அமைத்து முக்கியமான சேவைகளை வழங்கிக் கொண்டிருந்தன. சிக்கல்கள் அதிகமில்லாமல் யாவும் ஒழுங்காகக் நடைபெற்று



முடிந்தது. பல சிறப்பு மலர்களும் சிறப்புப் பக்கங்களும் மும்மொழிப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. இதைத்தவிர பல்வேறு நாட்டுப் பந்தல்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய ஒரு கையேடும் அங்கு சிறிய தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது. அப்போது இலங்கையின் மகாதேசாதிபதியாக சேர். ஒலிவர் குணத்திலகாவும் பிரதம மந்திரியாக டி.எஸ். சேனநாயக்காவும் கொழும்பு மேயராக உருத்திராவும் இருந்தனர். (தொடரும்)

**Food Handler Certification**

Are you serving in a restaurant? or PSW or ECA

உங்களுக்கு Food handler certificate தேவைப்படலாம்.

Call experienced Instructor.

கலா: **647.624.2314/kalasarvaa@gmail.com**

( Group classes conducted at MARKAM & STEELS and at your location. )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BASEMENT FOR RENT

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.890.2361**

**PORT UNION & HWY401 (LAWSON RD)**
3 Bedroom & 2 Bath Brand new bsmt for rent. Sep.entrance, parking, laundry. No Pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.315.1933**

**MARKHAM & GOLDEN AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry, internet. Close to all facilities. Avail. January 01, 2019.
**647.745.4416 / 647.271.6865**

**WESTNEY & ROSSLAND**
2 Bedroom renovated bsmt for rent. Sep. entrance, parking, laundry, Cable, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.275.0390**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, utilities. Couple/Family Preferred. Close to all facilities. Avail. immediately.
**416.984.2412 / 905.294.8350**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Couple or family preferred Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.725.0021**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.282.0643**

**MIDDLEFIELD & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Ladies preferred Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.719.0543**

**MIDLAND & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance. no Parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.835.2003**

**BRIMLEY & EGLINTON**
1 bedroom bsmt for rent. looking for female student Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.716.1540**

**MARKHAM & STEELES**
2 Bedroom & 2 washroom bsmt for rent. Sep.entrance. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.931.3444**

**STEELES & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance. Close to walmart & School. No smoking. Avail. immediately.
**416.817.6910 /905.209.7998**

மேலும் பக்கங்கள்
29, 30, 31, 32, 33, 34

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.802.2827**

**9TH LINE & HWY 7**
2 Bedroom legally finished bsmt for rent. Sep. entrance, laundry, parking, internet. Close to all facilities. Avail. immediately.
**416.509.0102 / 416.509.4443**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Laundry. Close to all facilities. Available immediately.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

**WESTNEY & ROSSLAND (AJAX)**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647. 709.3494**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELSON**
1 bedroom bsmt for rent. Sep.entrance, Parking, laundry, internet. Single Female preffered. Close to Nofrills & Walmart Avail. immediately.
**647.968.7457 / 416.357.1252**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NEILSON**
3 bedroom bsmt for rent. Sep.entrance, 2 Parking, laundry, cable, internet, utilities. Close to U. of T, centennial college, mall, TTC, much more... Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.891.5515**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
2 bedroom, 1full & 1/2 washroom bsmt for rent. Sep.entrance, Parking, laundry, internet. Close toTTC, hospital. No pets & No smoke. Avail. January 05, 2019.
தொடர்புகளுக்கு:
**647.219.2341**

## BASEMENT FOR RENT

**MARKHAM & BRIMORTON**
2 Room bsmt for rent. Sep.entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.575.6226 / 647.341.1657**

**வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட**
வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்: **647.402.2937**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
1 Room for rent . laundry, internet. பெண்கள் மட்டும்.Close to Eraa Super Market, TTC, etc... Avail. immediately.
**647.739.6416 / 647.740.1504**

**MCCOWAN & FINCH**
1 Room for rent. laundry, cable. No parking. Female preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.803.0133**

**MCCOWAN & SHEPPARD**
1 Room for rent an luxury condo. Sep. washroom. Female preferred. Close to all facilities. Avail. immediately.
**905.447.1306 / 647.835.3376**

**WARDEN & FINCH**
1 Room for rent. Parking, laundry, cable, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.449.6818**

**NEILSON & MCLEVIN**
1 bedroom for rent in an apartment. Sep. washroom, Laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.727.3430**

**MARKHAM & MAJOR MCKENZIE**
புதிய town house இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Female only. Avail. January 01,2019.
தொடர்புகளுக்கு: **647.745.5453**

**MIDDLEFIELD & FINCH**
1 Room with sep.washroom for rent. Female preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.835.5244**

**MARKHAM & MAJOR MACKENZIE**
1 Bedroom room for rent in a basement. Female only. Kitchen & washroom share with other female person.
தொடர்புகளுக்கு: **647.624.6840**

**PHARMACY & LAWRENCE**
1 bedroom available in 3 bedroom upstairs house. Only ladies & Seniors 60 & older. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.985.7070**

**MARKHAM & DENISON**
Room for rent in a basment. Free rogers high speed internet & one parking spot included.
**Call: 416.666.6403** for more info.

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent in a bsmt. laundry, Close to TTC, mall, bank, school. Avail. immediately.
**416.454.9986 / 416.219.4936**

**MORNINGSIDE & FINCH**
2 Rooms for rent . Ladies only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.888.9437**

வீடு, அறை, நிலஅறை (**BSMT**), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom room for rent. Parking, laundry. Males Preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## HOUSE FOR RENT

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.821.4425**

**MARKHAM & SHEPPARD**
3 Bedroom & 2 Full Washroom bungalow house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. January 15, 2019.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

**HWY 7 & 9TH LINE (MARKHAM)**
2 Bedroom & 2 washroom town house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.438.2552**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**
2 bedroom newly renovated bsmt for rent. Sep.entrance, Parking. Couple or family preferred. Close to mall, School, TTC. Avail. immediately.
**647.909.9529 / 647.770.3118**

## BASEMENT FOR RENT

**SHEPPARD & DEAN PARK (MORNIGSIDE)**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Couple/family preferred. Close to Hwy 401. Avail. immediately.
**416.666.2673 / 416.833.4111**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
1 Room bsmt for rent. Sep.entrance, Parking, laundry. Single/student/seniors preferred. Close to all facilities. Avail. January 01, 2019.
**647.988.1120 / 416.286.3456**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, internet. Female/couple preferred. Close to all facilities. Avail. January 01, 2019.
தொடர்புகளுக்கு: **416.908.1250**

## ஹைக்கூ!

ஆசையை அழிக்கச் சொன்ன பூமியில் பேராசை!
- கவிஞர் இரா.இரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ROOM FOR RENT
**MARKHAM & HWY 7**
3 Rooms for rent in a bungalow house. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.227.2834**

## ROOM FOR RENT
**TAPSCOTT & CROW TRAIL**
1 Bedroom for rent in a house. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.303.3410**

## ROOM FOR RENT
**WHITES RD & SHEPPARD**
3 Bedroom for rent. Close to all facilities. Avail. December 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.727.8131**

## APARTMENT FOR RENT
**MARKHAM & EGLINTON**
1, 2 & 3-Bedroom Apartments for Rent. Utilities Included. Clean, Renovated High-Rise Building. Near TTC, Schools & Shopping. Tamil Store in Building. On-Site Laundry.
**CALL: 416-264-2818**

## APARTMENT FOR RENT
**MARKHAM & EGLINTON**
2 Bedroom apartment இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.272.3704 / 647.367.7057**

## HOUSE FOR RENT
**9TH LINE & HOOVER PARK (Stouffville)**
4 Bedroom & 3 Washroom full house for rent. Close to all facilities. Available immediately.
Call: **416-414-4436**

## HOUSE FOR RENT
**NEILSON & MCLEVIN**
3 Bedroom with 3 balcony house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.786.6161**

## HOUSE FOR RENT
**MEDOWVALE & ELLESMERE**
3 bedroom Bunglow house for rent. Top house only $1800 + utilities. Or Whole house ( Basement partly finished ) $2400 + utilities. Close to university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-560-4152**

## HOUSE FOR RENT
**MIDLAND & MCNICOLL**
3 அறைகள் 2 ½ குளியல் அறையுடன் கூடிய வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. பாடசாலைகள், bus, கடைகள் மற்றும் சகல வசதிகளும் மிக அருகில் உண்டு. அத்துடன் Sep. entrance, kitchen, living room, bath room உடன் ஒரு அறை கொண்ட நிலவறையும் உண்டு. தொடர்புகளுக்கு: ***416.949.5697***

## SALE / RENT
**Condo. for Sale**
1. Location.. Stunning Lake View 2 Br + 1 Wash room Unit W/Over Sized Balcony, 80 Western Battery Rd, (King/Strachan /Liberty) - **$599,000**
2. Spacious & Bright 2 Br Corner Unit Luxury Condominium With 2 Full Washroom. 710 Humberwood Blvd, (Hwy 427/Rexwood Bvd) - **$469,000**

**For Rent**
1. Bright & Spacious 2 Bed rooms and 2 bath rooms, Townhouse. Close to Stouffville Hospital. Markham - Hwy 7/ 9th Line - **$1,950**
2. Bright & Spacious 3 Bedrooms and 3 wash rooms Semi-Detached house for rest Markham/ Elson St - **$1,900**

தொடர்புகளுக்கு: **416.355.7693**

## HOUSE FOR RENT
**SCAR. GOLF CLUB & ELLESMERE**
3 bedroom in main floor & 2 Bedroom in Basement. Sep.entrance, Parking, laundry. No pets Avail. immediately.
**647.998.0181 / 905.471.2444**

## HOUSE FOR RENT / SALE
**WESTNEY & KINGSTON (AJAX)**
2+1 Bedroom house for rent/sale. Near Hwy 401. 3 parking, rent+utilities . Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.399.8093**

## HOUSE FOR SALE
**MORNINGSIDE & STAINES**
3 bedroom & 3 washroom townhouse for sale.
**We have more houses for sale & rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## HOUSE FOR SALE
**SCARBOROUGH**
**KENNEDY & EGLINTON**
3 Bedroom, condo apartment with one parking for sale $284,900.00

**AJAX**
**westney & rands**
3 bedroom 2 storey detached house with finished basement and attached garage for sale $499, 000.00

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

வீடு, அறை, நிலஅறை (**BSMT**), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது**
**அழையுங்கள்.**
**647.861.8240**

## உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு
வீடுகள், கொண்டோக்கள்
விற்க, வாங்க,
வாடகைக்கு விட,
வாடகைக்கு பெற்றுக்கொள்ள
அழையுங்கள்:
**Jey 416-816-9011**

## மணமகள் தேவை
33 வயதுடைய யாழ். இந்து வேளாளர் குலத்தை சேர்ந்த உத்தியோகத்திலுள்ள கனடா பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை கனடாவில் தேடுகின்றோம்.
தொடர்புகளுக்கு: **416.565.8384**

## மணமகள் தேவை
யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த பட்டம் பெற்று சொந்தமாக வேலை செய்யும் 29 வயது மணமகனுக்கு பல்கலைக்கழக பட்டம்பெற்ற 24 - 28 வயதில் உள்ள மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:
**tamilmarriageproposal@gmail.com**

## மணமகன் தேவை
யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 35 வயது லக்கினத்தில் செவ்வாய் உள்ள படித்த பட்டதாரி மணமகளுக்கு கனடாவில் அல்லது இலங்கையில் மணமகன் தேவை.
**647.533.9794 / 437.888.4515**

## மணமக்கள் இணைப்பு
**உவகை மணமக்கள் இணைப்பு**
தயவு செய்து இடைத் தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தொடர்புகளுக்கு: **வல்வை சகாறா**
**647.885.6104**
uvakai100@gmail.com

## BASEMENT / ROOM FOR RENT
**NEILSON & MCLEVIN**
- 1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2019.
- Rooms for rent in main Floor ( bungalow house ) ladies preferred.

Close to all facilities. Avail. January 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.534.5617**

## BASEMENT FOR RENT
**STEELES (TAUNTON) & WHITES ROAD**
1 bedroom bsmt for rent. Parking, laundry, cable internet. Close to all facilities. Avail. immediately. Markham & Steeles இல் இருந்து 10 Minute Drive(East).
தொடர்புகளுக்கு: **416.786.5816**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS
I am working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.
**உங்களது** rooms , house or basement **இனை சட்டரீதியாக**
University / College Students **இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட**
***HARI SANTHIRARAJAH - 647.262.8490***
HomeLife Future Realty Inc. Brokerage Inc.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன போக்குவரத்து

**Western** பல்கலைக்கழகம், விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி சுற்றாடல், மற்றும் குறுகிய தூரம்.

தொடர்புகளுக்கு: **416.880.5952**

## இலவச திருமணசேவை

இலவச திருமண சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

**BOVAIRD DR. E. & HEART LAKE RD (BROMPTON)**

2 வருடங்கள் வீட்டில் இருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும், சமைப்பதற்கும் ஒருவர் தேவை.

**416.402.4126 / 647.631.5942**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**PIZZA STORE ( FRANCHISE )**

**WHITBY & TAUNTON**

experienced • Cashier (Ladies Only) • Drivers wanted

Ajax & Whitby இல் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. ( Full time & Part time)

**Please call : 647.448.2059**

## வீடு/காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மீசாலை சந்தியில் (A9) புதிய வீட்டுடன் கூடிய $3\frac{1}{2}$ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**437.776.2213 / +94.77.558.9955**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.

**416.890.6497/**
**srisai2912@hotmail.com**

## AVAILABLE

**Base guitar keyboard classes**

நடைபெறும்.

Licensed **child care** available.

(அரச அனுமதி பெற்ற child care)

**416.624.8557 / 647.984.0264**

## PAPER WORK HELP

யாராவது visa or நிரந்தரவதிவிடம், work permit, study permit, passport application, sponsor your family member, sponsor a refugee எந்த குடும்ப உறுப்பினரிற்கும் விண்ணப்பிக்க விரும்பினால் என்னால் உங்கள் படிவங்களை பூர்த்தி செய்யமுடியும்.

Please. call - Ramneet: **437.771.5294**

## LAND FOR SALE

கோப்பாய் இராச வீதியில் (கிருஸ்ணன் கோவிலுக்கு அருகில்) அமைந்துள்ள 16 பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**647.299.6506**

## CAR FOR SALE

**2007 HONDA CIVIC**

180,000km

**2005 HONDA CIVIC**

190,000km

No Accident & very good condition.

தொடர்புகளுக்கு: **647.906.5839**

## AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

Requirements:

Minimum 1 years' experience

Cross Border experience

Good Communication Skills

Clean Abstract

**Please Contact : 416-835-6701**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.

Need 1-year experience and clean CVOR and abstract. Pay weekly.

For more info call : **647.274.0300**

## RESTAURANT FOR SALE

**MARKHAM & EGLINTON**

Famous Sri lankan ( sq.feet 1100 ) take-out Restaurant well established and profitable business with all the equipments, kitchen hood, walk in cooler, walk in fridge. விற்பனைக்கு உண்டு.

Pl. call -Thushy: **647.606.1009**

## VATHANY RENOVATION

I Do All Interior Renovation Work for affordable Price.

Washroom, Kitchen & Basement

தொடர்புகளுக்கு: **647.667.5193**

## DRIVER WANTED

Drivers wanted for courier service .

For More Info: **416.836.0074**
**416.843.3712**

## CLEANERS WANTED

For residential home cleaning

Men and women may apply.

Valid drivers license preferred.

Full or Part Time positions available

Day shift only.

**Call :905-472-6042**

## TUTORING

Tutoring classes are given by an experienced retired teacher based on ontario curriculum.

**Subject:- English GR. 1 to 8. Math.**

Please contact:

**416.289.3641** (After 3:00 pm)

## DRIVERS WANTED

**SAYAN TRANSPORT LTD.**

Dz, Az, Bz Drivers wanted for straight truck.

Full time & Part time.

Payment option available.

Call or text : **647.309.5030**

**sayan.26@hotmail.com**

## பகுதி நேர வேலைவாய்ப்பு

ஸ்காபுறோ கென்னடி சப்வேக்கு அருகாமையில் அமைந்துள்ள இடமொன்றில் வாரத்தில் இரண்டு நாட்கள் சமையல் மற்றும் கிளீனிங் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள இளம் பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

தொடர்புகளுக்கு: **416.752.0965**

**தயவு செய்து உங்கள் பெயரையும், தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்து விடவும். பதிவு செய்தால் மட்டுமே திருப்பி தொடர்பு கொள்ள முடியும்.**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு:

பிறேம் - **647.835.5244**

## HOME DAY CARE

**HWY 401 & WHITE RD. (PICKERING)**

அனுபவம் கொண்ட பராமரிப்பாளரால் நடத்தப்படும் Home daycare இல் பிள்ளைகளை பராமரிக்க விரும்பும் பெற்றோர்கள்.

தொடர்புக்கொள்ள: **416.275.7366**

## JANITORIAL JOB

**Day Porter/Cleaner** in **King City/Schomberg.**

Must have own transport. Clean valid G driving License

**Monday to Friday 11AM to 7PM Full Time Permanent .**

**Night Cleaners: Concord** (Keele St. & Rutherford).

**Restaurant Night Cleaners: Markham** (HWY 7 & HWY 404).

**Call 905-738-4468 Ext.3 Leave a detailed message.**

**Sub-contractors welcome.**

## BABU BRAND

யாழ். அளவெட்டியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான மிளகாய் தூள், கோப்பித்தூள், ரசத்தூள் விற்பனைக்கு உண்டு.

மற்றும் புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **647.629.9095**

## BINS RENTAL

**METRO EAST DISPOSAL**

Commercial, Residential & Industrial waste removal bins rental

**Francis Uthayan:**

**416.671.5025 /647.856.6902**

## AZ DRIVERS WANTED

Need immediately experience drivers (At least one year) for long & short run with in Canada. Full time, Part time & on call.

**647.528.2224 / 647.830.4644**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HOUSE & APARTMENT FOR RENT

**SCARBOROUGH**

From 1 Bedroom to 3 Bedrooms, Wash rooms & Kitchens.
Sep. Entrance, Parking, laundry. Available immediately.

**K. Aloysius/Broker/Royal Lepage Vision**

**416-993-9709**

## HOUSE FOR RENT

**KENNEDY & LAWRENCE**

TWO BEDROOMS, LIVING ROOM, DINING AND KITCHEN. All living facilities. Neat & Clean. Two car parking. Suitable for small Family. Close to all facilities. Avail. January 01, 2019.

Please call **416.264.3899 / 437.226.3337**

## ROOM & BASMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**

3 Bedrooms in main floor available for rent separately (தனித்தனியாக).
2 Bedroom besement with walkout entrance also available (newly renovated ). Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு : **416.908.9494**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**PRK DOORS & WINDOWS (MARKHAM & PROGRESS AVE)**

**welding** (Metal grill work) வேலை செய்வதற்கு அனுபவமுள்ள நிரந்தரமான வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## ARE YOU LOOKING FOR WORK ?

**416.514.0733-Manjit Or Send Resume to manjitglobalteam@gmail.com**

- Accountant AP/AR • Sewing machine (male/female)
- General Laborers / window assemblers/Food • Saw Machine Operator
- Forklift Operator - Raymond Reach / Counter Balance
- Driver (G, AZ, DZ), Driver Helper, Warehouse Worker
- Cabinet Maker, CNC, Electrician Apprentice, Mechanic, Technician
- All in Mississauga, Toronto, Vaughan, Brampton, Markham Area

## OFFICE SPACE FOR LEASE

**MARKHAM & MCNICOLL**

Office space for lease in busy plaza.
(Markham convention centre plaza)
Avail. Immediately

**Contact : 416.230.2007 / 416.833.3931**

## CLEANING வேலைக்கு ஆட்கள் தேவை

**NEW MARKET & RICHMOND HILL** இல் பகுதியில் 6:00 மணியில் இருந்து 2:00 மணி வரை Bus Cleaningக்கு ஆட்கள் தேவை.
Full time & Part time

தொடர்புகளுக்கு: **416.471.4423**

## SAREE IRONING, PLEAT & DRAPING



உங்களை சாரியில் மேலும் அழகாக காட்டுவதற்கு, நேர்த்தியான வடிவான முறையில் சாரி அயன் (iron, pleat) செய்தும், சாரி அணிவித்தும் (Draping) விடப்படும்.

**Saree Draping - $10**

**Saree Draping with Pleat & ironing - $20**



**Give me a call - 647- 719-1280.**

## சொர்க்கம் திருமணசேவை

● 30 வயதுடைய Engineer ஆக வேலை பார்க்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளையும் தேடுகின்றோம். ● 30 வயதுடைய Chartered accountant மணமகனுக்கு மணமகளை தேடுகின்றோம். மற்றும் இலங்கை இந்தியாவில் இருந்து நல்ல வரன்கள் எடுத்து தரப்படும்.

**416.666.1855 / 647.504.3336 (viber)**

## மணமகள் தேவை

36 வயதுடைய இலங்கையில் வாழும் படித்த (ஆங்கிலம், தமிழ், சிங்களம் சரளமாக பேசக்கூடிய) S.D Plantation Sector (Ratnapura District) இல் வேலை பார்க்கும் Badulla Sri lankaஇல் பிறந்து தாயுடன் வாழும் மணமகனுக்கு இலங்கையில் அல்லது கனடாவில் தகுந்த மணமகளை தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு: **416.846.0960**

## DEBT RELIEF & COUNSELLING

Credit Card, கடன் தொல்லை, அரசாங்க வரி கொடுப்பனவு இவற்றிலிருந்து விடுபடுவதற்கும் உங்கள் சொத்துக்களை பாதுகாத்து 80%க்கு மேற்பட்ட கழிவுடன் மாதாந்த சிறிய கட்டுப்பணத்துடன் விடுபட அரச அங்கீகாரம் பெற்றவரும் இத்துறையில் 12 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் பாராட்டுக்களைப் பெற்றவருமான *Suren Sornalingam / Sriharini Alagendra*

தொடர்புகளுக்கு: **647.274.2832 / 647.449.9568**

## வீடு/காணி விற்பனைக்கு

Mabola Wattala பகுதியில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
3100sq.ft House. 5 Rooms & 3 washrooms.
அழகான, அமைதியான சுற்றாடல்.

தொடர்புகளுக்கு: **647.280.8957**

## LIFE INSURANCE - Ages 50 - 79

Affordable no medical plans, cover final costs
Get free quote. Also supervisa insurance.

**Please call - Vathana 416-272-7269**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**

**Pay top dollars.**

**Contact: 416.835.3475**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

*Scarborough – Kingston / Lawson – full house*
(4+1Brm, 1Bath) Raised Bungalow In A High Demand Neighborhood ,spacious Lot. Close To University Of Toronto, Schools, 401, amenities. Basement Included As Well. **[Asking$2050/m]**

*Scarborough – Mccowan / Lawrence – main floor*
Bungalow For Lease In A Quiet Neighbourhood, Large Living And Dining With Two Large Windows, Closer To School, Shopping And Other Amenities. **[Asking $2100]**

*Downtown – Bay / College – Condo apt*
(1+1Brm, 1Bath) Spacious & Luxurious unit With Parking. Hardwood floor, modern kitchen, Walking Distance To U Of T, Ryerson University, Eaton Centre & Yorkville, Easy Access To Subway Downtown Toronto's Highly Desired College & Bay Area. **[Asking $2500/m]**

*North York - Leslie / Sheppard – Townhouse*
(3+1, 3bath) Bayview Village Neighbourhood. Steps To Ttc, Go Station, Super Market, Plaza, Mins To Library, Community Centre, Parks, 401, 404, Dvp, Seneca College, Ikea, Canadian Tire, Hospital, Bayview Village Mall, Fairview Mall. Finished Basement With Extra Kitchen And Washroom **[Asking 1850/m]**

** North York – Sheppard Ave E/ Leslie – Condo*
(1+1Brm, 1 Bath) Open Balcony, 9' Ceiling, Den Can Be Used As 2nd Bedroom, Laminate Floor On Master Br, One Locker And One Parking Included. . **[Asking $2000/m]**

*Markham – Hwy 7 / Warden– Condo apt*
(1+1Brm, 1Bath) Close to all amenities. Next To Uptown Market Perfect For Dining& Shopping, Schools, Parks,Mcdonald's,City Of Markham & Theatre, East Access To 407 & 404, Go Train&Viva.. **[Asking $1800/m]**

** Markham – Markham / Elson – Main Floor*
(4 Brm, 4Bath) Close To Costco, No frills, Great School, Shopping, Parks, Bank & Transportation. Available immediately. **[ Asking $2600/m]**

** Markham – Markham / 16th Avenue – Town house*
(2Brm, 1 Bath) Brand new house, 3 levels, 3 parking, close to all amenities **[Asking $1900/m]**

*Oshawa – Simcoe St / Conlin Rd – Full house*
(3Brm, 3Bath) Steps To Simcoe Rd, Walk To University, Durham College, Shopping, Close To Hwy 407, Schools, Park. **[Asking $1700/m]**

*Oshawa – simcoe / russett– Main floor*
(3Brm, 2Bath) Steps To Simcoe Rd, Close To University, Durham College, Shopping.High Demandlocation And All Other Amenities **[Asking $1300m]**

*Bowmanville—Short Term Stay/ Vacation Rental*
(6Brm, 3Bath) Bright & Spacious. 1.4 acres of land.. wake up to sunrise, cornfields, , . Great getaway for families/seminars/events, **[please call]**

MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

We make it easy for you to be a Landlord!

OUR SERVICES INCLUDE:
- Marketing, listing and showing properties
- Answering lease enquiries
- Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant
- Property inspections before and after renting
- Handle tenant enquiries
- rent collection and deposit to Landlord
- Eviction of bad tenants
- Scheduling Maintenance and repairs of property
- Year end accounting
- Renewal of lease
- Market value update

You can relax while we take care of your investment property!

WATSON PROPERTY MANAGEMENT LTD
Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாடாளுமன்றத்தை கலைத்தது சட்ட விரோதம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு!



இலங்கை நாடாளுமன்றத்தை அதிபர் சிறிசேனா கலைத்த உத்தரவு செல்லத்தக்கது இல்லை என்று இலங்கை உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இலங்கை பிரதமராக இருந்த ரணில் விக்கிரம சிங்காவை, கடந்த, ஒக்ரோபர் 26ஆம் திகதி, அப்பதவியில் இருந்து நீக்கிய அதிபர் சிறிசேனா, அதற்குப் பதிலாக முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார்.

இந்த நடவடிக்கை உலகமெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து ராஜபக்ஷாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார் ரணில் விக்கிரமசிங்க. இதில் ராஜபக்ஷா தோல்வி அடைந்த நிலையில் நொவம்பர் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைக்க உத்தரவிட்டார் சிறிசேனா. இதையடுத்து ஜனவரி 5ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அதிபரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து இலங்கை உச்சநீதிமன்றத்தில் 13 வழக்குகள் தொடரப்பட்டன. நவம்பர் 13ஆம் திகதி இது தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவில், அதிபரின் உத்தரவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் 7 நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு 2018 டிசெம்பர் 13இல் தனது தீர்ப்பை வழங்கியது. அதில் நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைத்தது அரசியல் சாசனத்திற்கு எதிரானது மற்றும் சட்ட விரோதம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் நான்கரை ஆண்டு காலம் பதவிக் காலத்தை பூர்த்தி செய்யும் முன்பாக அதை கலைப்பதற்கு அதிபருக்கு உரிமை கிடையாது என்ற அரசியல் சாசனத்தின் பிரிவின்படி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கால வரையறைக்கு முன்னதாக ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்ற தேவை எழுந்தால் அதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரின் ஆதரவுடன் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் விடுத்த தீர்ப்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. மேன்முறையீட்டுத் தீர்ப்பை ஆட்சேபித்து மஹிந்த ராஜபக்ஷா தரப்பினரால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட மனு மீதான விசாரணைகள் 2018 டிசெம்பர் 14இல் உயர் நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டது. இதனையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை 2018 டிசெம்பர் 15இல் பதவிவிலகுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 2018 டிசெம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா முன்னிலையில் மீண்டும் பிரதமராகப் பதவி ஏற்கவுள்ளார் என ஐக்கியதேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உறுதிப்படுத்தியுள்ளார்.


## COMPUTER REPAIR

**Laptop,Computer Repair, Virus Removal, Data Recovery, Upgrading, Networking, Printer Problems & Any Other**

**Troubleshooting** அனைத்து விதமான **Computer** திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

**Please Call - Varun: 416.894.6244**

## பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

**24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை**



பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்

416.613.1840 / 647.272.6993

birdsilvergardens@gmail.com

16 Birdsilvergardens, Scarborough ( Port Union & Island Road)

## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

*Special classes*

- Advanced function
- Calculus & vectors
- Data management

*All Classes available in Scarborough & Stouffville*



Mr.S.F.Xavier (Teacher)

*Contact: 647.340.9490 / 416.732.2228*

## மணமகள் தேவை



- 26 வயதுடைய B.SC. பட்டதாரி கனடாவில் வேலை பார்க்கிறார்.
- 28 வயதுடைய Hotel Management in Singapore இல் வேலை பார்க்கிறார்.

**ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் மணமகள்களை கனடாவில் தேடுகின்றனர்.**

**Contact :**

**647-609-6135**


பிறக்கும் தை 'நலத்தை'
'வளத்தை'
'செல்வத்தை' கொடுக்கட்டும்.

வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநல் இல்லாத இதயம்
வெறுப்பைக் காட்டாத முகம்
அம்மா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சார வேறுபாடு சிறுகதை

எஸ். பூபாலசிங்கம்

துளசி கனடா வந்து 10 வருடங்களாகி விட்டது. இங்குவந்து படித்து, பட்டம் பெற்று, வங்கியில் நல்ல வேலையும் கிடைத்து விட்டது. வயதும் கிட்டத்தட்ட 28 ஆகிவிட்டது. தந்தையை இழந்த துளசிக்கு ஆதரவு வயதுபோன தாயார் மங்களம்தான். தனது மகள் இத்தனை வயதிலும் திருமணம் செய்யவில்லை என மங்களத்துக்கு கவலை. யாழ்ப்பாணதிலி ருக்கும் தனது அண்ணன் மகன் வாசுவைத் திருமணம் செய்வதால் சொந் தம் விட்டுப்போகாது என்ற நம்பிக்கை. இதைப்பற்றி ஒரு நாள் மகளுடன் கதைத்தாள். துளசிக்கு தனது அத்தான் வாசுவைப் பிடிக்கும். அவன் ஆணழகன், கம்பீரமானவன். அம்மா உங்கள் விருப்பம் தான் எனது விருப்பமும் என்று சம்மதம் கூறிவிட்டாள் துளசி. அம்மாவுக்கு மிகவும் சந்தோசம். யாழ்ப் பாணத்துக்கு ரெலி-போன் எடுத்து சுந்தரத் துடன் மகன் வாசுவை கனடாவுக்கு கூப்பிட்டு துளசிக்கு திருமணம் செய்ய சம்மதம் கேட்டவுடன் அவர்களுக்கு மகிழ்ச்சி. அதற்குப்பின் வாசுவும் துளசியும் ரெலிபோனில் கதைப்பார்கள்.

இருவருக்கும் மிகவும் மகிழ்ச்சி. ஸ்பொன்சர் (Sponsor) சரிவந்து வாசுவும் கனடா வந்து விட்டான். வாசுவும் துளசியும் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். மங்களத்துக்கும் தனது அண்ணன் மகனே மருமகனாக வந்தது மிகவும் மகிழ்ச்சி. வாசுவும் மிகவும் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தான். துளசி நல்ல அழகான துடிப்பு மிக்க பெண், அதையும்விட படித்து நல்ல வேலையில் இருப்பவள். வாசுவும் பட்டதாரி தான். வாசு தமிழ்ப் பட்டதாரி, ஆனதால் அவன் ஆங்கில வகுப்புக்களுக்கும் கணினி வகுப்புக்களுக்கும் போகத் தொடங்கி விட்டான். வாசு வகுப்புக்கள் முடிந்து வீட்டுக்கு வரும்போது அதிகம் துளசி வீட்டில் இருப்பதில்லை. அவள் வேலை முடிந்து தோழிகளுடன் சுற்றிவிட்டு தாமதமாக வீட்டுக்கு வருவாள். வாசுவைக் கவனிப்பதும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. மங்களம்தான் மருமகனுக்கு உணவு பரிமாறுவாள். ஒருநாள் வாசு தனது காதலி, துளசியுடன் சாப்பிட வேணும் என்ற விருப்புடன், துளசியின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தான். மங்களம் கேட்டும் துளசி வரட்டும், அவளுடன் சேர்ந்து சாப்பிடுகி-றேன் என்றான். இரவு 11:30 மணிக்கு துளசி வந்தாள். வந்ததும் அம்மா நான் தோழிகளோடு படம் பார்த்துவிட்டு ரெஸ்ரோறனில் (Restaurant) சாப்பிட்டு விட்டேன் என்றாள்.

மங்களத்துக்கு நெஞ்சு பகீர் என்றது. வாசு சாப்பிடாமல் காத்திருக்க இந்தப்பிள்ளை ஏன் இப்படி நடக்கிறாள் எனக் கவலை. வாசுவும் தனக்கு சாப்பாடு வேண்டாம் எனக் கூறிவிட்டான். இவ்வளவு நேரமும் ஏன் சாப்பிடவில்லை என துளசி வாசுவைக் கேட்டாள். நான் உம்முடன் கதைக்க வேண்டும் என்று வாசு கூறினான். சொல்லுங்கள் எனக்கு நித்திரை வருகிறது, காலை எழும்பி வேலைக்கு போகவேணும் என்றாள் துளசி. எங்கே இவ்வளவு நேரம் சென்று வருகிறீர். வேலை முடிந்ததும் வீடு வரவேணும்,




இங்கு நான் காத்திருப்பேன் என்று தெரி யாதா? அதையும்விட, பெண் பிள்ளை வீட்டில் சொல்லாமல் இப்படி நேரம் கெட்ட வேளையில் வருவது தவறு எனத் தெரி யாதா? அதுவும் வயது போன அம்மாவும் நானும் காத்திருப்போம் என்று தெரிந்தும் வீட்டில் சொல்லாமல் படத்துக்குப் போய் சாப்பிட்டுவிட்டு வருகிறீர். இது எனக்கு பிடிக்கவில்லை. நான் வந்த நாட்களில் எவ்வளவு அன்பாக இருந்தீர். இப்ப ஏன் இப்படி என்னை உதாசினப்படுத்துகிறீர் என்று வாசு கேட்டான்.

வாசு எனக்கு வீட்டுக்கு சீக்கிரம் வரப் பிடிக்கவில்லை மற்றும் எனது சுதந்திரத்தில் யாரும் தலையிடுவதும் எனக்கு பிடிக்காத விஷயம். நான் படித்தனான், வேலை செய்கிறேன், இது எனது சுகந்திரம். என் அம்மாவே என்றும் கேட்பது இல்லை. நான் வேலையால் பிந்தி வந்தால் நீங்கள் குற்றவாளியைப் பார்ப்பதுபோல, என்னைப் பார்ப்பது எனக்குப் பிடிக்கவில்லை. எனக்குப் போலீஸ்காரன் வேலை பார்க்காமல் உங்கள் வேலையைப் பார்த்து இருங்கள். என்னை இப்படிக் கேட்பது, இதுதான் கடைசியாக இருக்கட்டும் எனக் கூறி, தனது படுக்கைக்குப் போய்விட்டாள். நாளுக்கு நாள் அவர்கள் வெறுப்புக் கூடிக் கொண்டே போனது. துளசியின் உடுப்பு, தலைமுடி வெட்டு, அவளது போக்கு ஒன்றுமே வாசுவுக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் துளசி தனது இரு சினேதிகளுடனும், இரு ஆண் நண்பர்களுடனும் இரவு 11:30 மணிக்கு வந்தாள். அந்த ஆண் நண்பர்களின் போக்கும், தலைமுடி வெட்டும், அவர்கள் துளசியுடன் தொட்டுத் தொட்டுப் பழகி யதும், வாசுவுக்கு அடியோடு பிடிக்கவில்லை.

அவர்கள் போனதும் துளசியோடு பெரிய சண்டை. அவனுக்கு வாழ்வே வெறுத்து விட்டது. இவனுடன் எப்படி வாழ்வது. வேண்டாம் இந்தக் கலியாணம். நாளையே இவரை வெளியேற்றிவிடுங்கள் என அழுதாள். தாய் பேரிடி விழுந்ததைப் போல திகைத்து விட்டாள். ஆனால் தாய்க்குத் தெரியும் மகள் ஒன்றைத் தீர்மானித்தால் அவளை மாற்ற முடியாது என்று. வாசு அடுத்த நாள் தனது நண்பன் வீட்டுக்கு போய் விட்டான். துளசி தனது ஸ்பொன்சரை (Sponsor) ரத்துச் செய்து விட்டாள். பின்பு வாசுவும் அகதி அந்தஸ்துக் கோரி இப்போது நன்றாகப் படித்து தனக்கேற்ற படித்த பெண்ணை யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைத்து திருமணம் செய்து வாழ்கின்றான். துளசி யும் தன்னுடன் வேலை செய்யும் ஒருவரை திருமணம் புரிந்து சந்தோஷமாக வாழ்கின் றாள். இருவரும் தங்கள், தங்கள், மனங்களுக்கு ஏற்றபடி வாழ்வு அமைத்து வாழ்கின்றார்கள்.

## அந்தரிக்கும் நிலையகற்றி ஆசிதாரும் யேசுபாலா



விண்ணகத்தில் தேவதூதர் ஆர்ப்பரிக்க
மண்ணகத்து மாந்தரொன்றாய் அக்களிக்க
அண்ணல்யேசு மானிடனாய் அவதரித்தார்
பண்ணிலவர் இசையெழுப்பி வாழ்த்துவோமே

மந்தைமேய்க்கும் ஆயருக்குச் சேதிசொல்லி அழைத்தவனே!
பந்தபாசத் தோடணைத்து ஆசியீந்து மகிழ்ந்தவனே!
வெந்துவாடி உளமுடைந்து பதகளிக்கும் தமிழர்களின்
அந்தரிக்கும் நிலையகற்றி ஆதிதாரும் யேசுபாலா

அருளில்லாச் சிங்களத்தார் அடக்கியாளும் பேரினத்தார்
கருவறுத்து, இனமழித்துக் கலங்கவைக்கும் கருணையினார்
உரிமைக்குக் குரல் கொடுக்கும் உறவுகளை இம்சிக்கும்
இரக்கமற்ற ஈனச்செயல் தகர்க்கவாரும் யேசுபாலா

சரணடைந்த உறவுகளைக் கொன்றழித்துப் புதைத்துவிட்டு
சுரக்கின்ற கண்ணீரோ டலைகின்ற அபலைகளை
விரட்டியச் சுறுத்துகின்ற சண்டாளர் திமிரடக்கக்
கரம் கூப்பி அழைக்கின்றோம் கருணை மழை பொழியுமையா

பாவியாரின் சிலுவை மரம் பரமனேயும் தோளிலேற்றி
காவிச்செல்லச் சக்தியற்று வீழ்ந்தெழுந்த காட்சிகண்டு
தேவியன்னன மரிகதறிக் கண்ணீர்சிந்த வைத்தவனே!
ஆவியூசலாடுகின்ற தமிழர்களைத் தாங்குமையா.

உயிர்நீத்த நிலையினிலும் கூரீட்டி பாய்ச்சிநின்ற
அந்தகனின் இருண்டவிழி ஒளிதுலங்க இரங்கிய நீர்
புயலினிடை தத்தளிக்கும் மரக்கலத்து, அகதிகளாய்
பயந்தழியும் தமிழர்களை மீட்டெடுப்பீர் யேசுபாலா

உலகத்து வல்லரசார் இதயத்தில் இரக்கமிலார்
உரிமைக்குப் போராடி அழிந்து நிற்கும் தமிழினத்தை
பலங்கொண்டு தன்னலத்தால் அடிமையாக்க எத்தனிக்கும்
பண்பிழந்த செயல்தகர்த்து மீட்பளிப்பாய் யேசுபாலா

- மாரீசன் -

## வாசகர் கடிதம்

கனடாவில் வருமான வரி தொடர்பான பிரச்சினைகளில் 'சிறை சென்றவர்களின் கதைகள்' என்ற எனது நண்பர் சிவ. பஞ்சலிங்கத்தின் தொடர் கட்டுரை யிலிருந்து ஒரு விடயத்தினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் கனடிய அனுமதிப்பத்திரம் பெற்ற ஒரு கணக்காளர். கனடா வருமான வரி நிறுவனத்தில் (CRA - Canada Revenue Agency) வணிக நிறுவனங்களின் கணக்கு பரிசோதகராக (Business Income Tax Auditor) பல வருடங்களாகப் பணி புரிந்து வருகின்றேன்.

எந்தவொரு வருமான வரி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், குற்றச்சாட்டுக்களுக்கும் நிறுவனம் முதலில் கடிதங்கள் அனுப்புவர். தொடர்ந்து எச்சரிக்கை கடிதங்கள் அனுப்புவர். பரிசோதனைகள், கணக் காய்வுகளுக்கு கௌரவமாக அழைத்து கௌரவமாக கையாள்வார்கள். எல்லாப் பிரச்சினைகளையும் கனடாவின் வருமான வரி சட்டங்கள், மரபுகளை அனுசரித்து தீர்த்து முடித்து விட்டால் பிரச்சினை எந்தக் கட்டத்திலும் பாரிய நிலைமைக்கு போகமாட்டாது. பணத் தண்டனைகளுடன் பிரச்சினைகள் முடிந்துவிடும்.

சில தவறுகள், மோசடிகள் என்பன ஓர் எல்லையினை மீறிச் செல்லும்போதே அங்கு கோப்புகள் யாவும் நிறுவனத்தின் குற்றவியல் புலனாய்வு பிரிவுக்குப் போய் இறுதியில் சிறைத் தண்டனை வரை போய் முடிகின்றது.

எனவே வருமான வரி சம்பந்தப்பட்ட எந்தவொரு பிரச்சினையினையும், அவை சம்பந்தப்பட்ட நிபுணத்துவம் வாய்ந்தவர் களின் வழிகாட்டலுடன் இலகுவாகத் தீர்வு காண முயலுங்கள். கிரிமினல் குற்றத்தினுள் அகப்பட வேண்டிய அவசியம் இருக்கமாட்டாது.


கந்தையா மகேந்திரலிங்கம்
Business Auditor - CRA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கத் தெரியாத மனசு - பாகம் 14

## குண்டலகேசியும் மந்திரிகுமாரியும்



வீணை மைந்தன்

மயிலை சீனி வேங்கடசாமி என்ற தமிழ் அறிஞர் "மறைந்து போன தமிழ் நூல்கள்" எனும் நூலை எழுதியிருந்தார். இந்நூல் என்னுடைய பாதுகாப்பிலிருந்து எனக்குத் தெரியாமல் எப்படியோ மறைந்து போய் விட்டது. காணாமல் போனவற்றின் பட்டியலில் இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டியது தான்.

மறைந்துபோன தமிழ் நூல்களில் வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரு காப்பிய நூல்களும் அடங்கும். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றே குண்டலகேசி. காப்பிய நாயகியின் பெயர்தான் குண்டலகேசி. தமிழ் அன்னையை அழகுபடுத்தும் ஐம்பெருங் காப்பியங்களாவன: குண்டலகேசி, மணிமேகலை, வளையாபதி, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் ஆகும்.


இக்காப்பிய நூல்களில் ஒன்றான குண்டலகேசியில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்வை ஒரு வரிக்கதையாகக் (One Line story) கொண்டு அதையே மந்திரிகுமாரியாக திரைக்கதை வசனம் எழுதியிருந்தார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி.

ஓர் அரசசேவகன் திருடுவதும் ஒரு கலையே என்று வாதிடுபவன். அழகானவன். ஆண்மை மிக்கவன். திருடுவதைத் தொழிலாக அல்லது கலையாக எண்ணுபவனை எப்படி ஆட்சியில் அமர்த்தலாம். அந்நாட்டு அமைச்சர் மகள் திருடனிடத்துக் காதல் வசப்படுகிறாள். இவர்களைச் சுற்றிப் பின்னிப் பிணையப்பட்ட திரை ஓவியமே கலைஞரின் கைவண்ணத்தில் வெற்றிப் படமாக மொடன் தியேட்டர்ஸ் தயாரித்த 'மந்திரி குமாரி' திரைப்படமாகும்.

இப்படத்தின் மூலம் பிரபலமாகியவர்களுள் மக்கள் திலகம் எம்.ஜி ஆரும் ஒருவராவர். முக்கிய பாத்திரத்தில் நடித்தவர் எஸ். ஏ. நடராஜன் என்பவர். வில்லன் நடிகர். எம். என் நம்பியாருக்கு இப்படத்தில் கிடைத்த ராஜகுரு வேடம் இதுவரை யாருக்கும் கிட்டியதில்லை. படத்தைப் பார்த்தால் புரிந்து கொள்வீர்கள்.

இப்படத்தின் வாயிலாகத்தான் முதன்முதல் ஒரு திரை நாயகனுக்குப் பின்னணிப்பாடகர் குரலில் பாடல் ஒலித்திருக்கும். அப்புகழைப் பெற்றவர் காலஞ்சென்ற பாடகர் திருச்சி எஸ். லோகநாதன். இப்படத்தின் தலைப்பிற்குரிய மந்திரிகுமாரியாக நடித்தவர் அக்காலத்தில் புகழ் வாய்ந்த கதா-நாயகிகளுள் ஒருவரான மாதுரிதேவி அவர்கள்.

மந்திரிகுமாரியான மாதுரிதேவி மறக்கத் தெரியாத மனசுவில் எப்படி இடம்பிடித்தார். அதுமாத்திரமல்ல நான் முதன்முதல் நேரில்




பார்த்துப் பரவசப்பட்ட திரைநாயகியும் மாதுரி தேவிதான். அது ஒரு வேடிக்கையான சம்பவம். அப்போது எனக்கு பன்னிரண்டு வயதிருக்கலாம். எங்களூரான காங்கேசன்(துறை) துறைமுகத்தை அண்டி ஒரு வாடிவீடு இருந்தது. ஆங்கிலத்தில் Rest House என்பார்கள். இங்கு Celebrities உம் பிரபலமானவர்களும் ஓய்வு எடுக்க வந்து தங்குவார்கள். வசதிபடைத்தவர்களும் வருவார்கள். இங்கு பல புகழ் பெற்ற மனிதர்களையும் வேடிக்கையான சம்பவங்களையும் நேரில் பார்த்தும் அறிந்தும் இருக்கிறேன்.

கொஞ்சம் வயது வந்ததும் Rest House Keeper பத்மநாதன் எனக்கு அறிமுகமாகி விட்டார். அதன்பின் நானும் அங்கு ஒரு வி.ஐ.பி தான்!

இன்று யாரோ ஒரு திரைப்பட நடிகை இங்கு வரப்போறா என்ற செய்தி கசியத்தொடங்கியதும் ஊரில் ஒரே பரபரப்பு "அட! மந்திரிகுமாரி மாதுரி தேவியாம்." ஊரில் உள்ள வாலிபர்களும் வயதானவர்களும் மாலை நான்கு மணியளவில் வாடிவீட்டில் கூடி விட்டார்கள்.

அப்போது நான் மந்திரிகுமாரி படம் பார்க்கவில்லை. நடிகை மாதுரிதேவியைப் பார்த்துச் சில வருடங்கள் கழித்தே பல தடவை படத்தைப் பார்த்து இரசித்தேன். எல்லோரும் வாடிவீட்டு விறாந்தையின் முன்பக்கம் குழுமியிருந்தனர். கூட்டம் கூட்டமாக மாதுரிதேவி பற்றி தங்களது கற்பனை உரையாடல்களைக் காற்றில் கலக்கவிட்டனர்.

இதுவரை பார்த்திராத அழகி ஒருவரைப் பார்ப்பதுபோல் எல்லோரும் ஆவலைத் தூண்டும் விதத்தில் பேசிக் கொண்டிருந்தனர். என்னுடைய வய-தையொட்டிய சில பெடியன்கள் பெரியவர்களை விடக் காரியத்தில் முந்திக் கொண்டனர். அவர்களுடன் நானும் இணைந்து கொண்டேன். இந்த தானாய்ச் சேர்ந்த கூட்டத்தில் இணைந்த அன்பர் ஒருவர் இப்போது மொன்றியலில் வாழ்கிறார். எனக்குமிகவும் அறிமுகமானவர்.

"அட நடிகை இருக்கிற அறை எனக்குத் தெரியும்."
"எப்படி"
"வாவன்ரா நான் காட்டிறன்"
எல்லோரும் அவனைப் பின் தொடர்ந்தோம். வாடிவீட்டின் பின்பக்கம் கடற்கரையை-யொட்டி ஒரு அறையிருந்தது. அந்த அறைக்குக் காற்றுப் போவதற்காக சுவரின் கீழே சுவரையொட்டி ஒரு சிறிய பலகணி இருந்தது.
"டேய் இதால பார்"
ஆளையால் முந்திக் கொண்டு பார்த்தோம். உள்ளேயிருந்த ஒருவன் பலகணிக்கூடாக எங்கள் முகங்களில் தண்ணீரைப் பீய்ச்சியடிச்சான்.
வெட்கப்பட்டுக்கொண்டு சாரத்தால் முகத்தைத் துடைத்தபடி பழையபடி விறாந்தையடிக்கு வந்தோம்.
முதன்முதல் ஒரு திரைக் கதாநாயகியைப் பார்ப்பதற்காகப் போய் முகத்தில் நீரால் நனைந்த நினைவுகளையும் பிற்காலத்தில் பிரசித்தி பெற்ற இந்தியத்திரை நாயகி "நாட்டியப் பேரொளி" திருமதி. பத்மினி இராமச்சந்திராவுடன் அருகில் அமர்ந்து விருந்துண்ட நினைவையும் நடிகர் திலகம் அவர்களது 'அன்னை இல்லத்து' விருந்தாளியாக இருநாட்கள் அழைக்கப்பட்டதையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

இப்போது கனவுலகத் தேவதை வெளியே வந்துவிட்டார். அடேயப்பா! எவ்வளவு கொள்ளை அழகு. பொன்னிறமான மேனி. இளமையின் துள்ளல். அழகின் சிரிப்பு. இவர்தான் மந்திரிகுமாரி மாதுரிதேவி என்றார்கள். எனவே எனது வாழ்நாளில் முதன்முதல் நேரில் பார்த்துப் பரவசப்பட்ட



தென்இந்திய சினிமா நட்சத்திரம் மாதுரிதேவி அவர்கள்தான். அவர் நடித்த படங்களை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். பொன்முடி - ஏழுபிள்ளை நல்லதங்காள் - ஏழை படும்பாடு இன்னும் பல நினைவில் உள்ளன. பெயர் வரத்தாமதமாகிறது.

பிற்குறிப்பு - மேற்கூறிய வாடிவீடு (Rest house) தான் இப்போது இலங்கை அரசின் இராணுவ நிர்வாகத்தால் நடத்தப்படும் 'தல் செவனா' விடுதியாகும். 'தல் செவனா' என்றால் 'பனைமரக்குடில்'.

மனசு தொடரும்

ALEXANDER IMMIGRATION SERVICES
CANADIAN IMMIGRATION & CITIZENSHIP CONSULTING FIRM
கனடா குடிவரவு குடியுரிமை ஆலோசனை நிறுவனம்

- Study Permit
- Spousal Sponsorship
- Express Entry
- Visitor Visa
- Citizenship Applications
- LMIA based Work Permits
- Visa Extension
- Super Visa - Parents
- Parents Sponsorship
- Business Immigration
- Provincial Nominees
- PR Card Renewals
- Post Graduate Work Permits
- Humanitarian Applications

தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் சேவை.
உன்னதமான தொழில்முறை சேவைக்கு அழையுங்கள்.

Canadian Government Regulatory Body Licensed Immigration Consultant

Hemalatha K Alexander, B.Sc, MBA, RCIC, Commissioner of Oaths
by Tel : +1 647 773 3673 or email : info@alexanderimmigration.ca

10 Milner Business Court Suite 354 Toronto M1B 3C6 ON Canada






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா...

26ஆம் பக்கத்தொடர்ச்சி

களுக்கும் பெயர்ப்பட்டியல் உண்டு. அதில் இருந்து அங்கு உருவாகும் புயல்களுக்குப் பெயர் சூட்டப்படும்.

எரிமலை, பூகம்பம்: புவித் தட்டுக்கள் அசையும் தன்மை கொண்டவை. அதன் சக்திக் (Power) கேற்ப பூகம்பங்கள் (Earthquakes), எரிமலைகள் (Volcanoes), வெடிப்புகள் (Eruptions) உருவாகின்றன. இந்த இயற்கைக் காரணிகளால் மலை சிதையலாம். அது சமவெளியாகிப் போகலாம். சில நதிகள் மலையாகியிருக் கின்றன. அதிலும் நமக்குத் தெரிந்த கனடா தேசத்தின் ரொக்கி மலைத்தொடர் (Rocky Mountains). கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேட்டா மாகாண எல்லையில் ஒரு காலத்தில் கடல் பாதை யாக இருந்த பகுதி ரொக்கி மலைத் தொடரானது. கனடாவில் தொடங்கி ஐக்கிய அமெரிக்காவின் நியூ மெக்சிகோ மாநிலம் வரை நீண்டுள்ளது. மற்றொன்று உலகிலேயே ஒப்பற்ற மிகப்பெரிய, மிக-வுயர்ந்த இமயமலைத் தொடர் (Himalayas). பெரும் நதியாய் ஒரு காலத்தில் பெருக்கெடுத்து ஓடியிருந்த பகுதி அது.

சுனாமி: சுனாமி என்பது, கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத்தட்டுக்களின் அசைவு, அதைத் தொடர்ந்து ராட்சத அலை (சுனாமி) என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது.

மண்சரிவு: நிலச்சரிவு ஏற்படுவதற்கான முதன்மையான விசை புவியீர்ப்பு விசையாக இருந்தபோதும், உண்மையான சாய்வு உறுதித்தன்மையைப் பாதிக்கும் பிற காரணிகளும் உள்ளன. மண்ணரிப்பு, பனி உருகுதல், பனிப்பாறைகள் உருகுதல், அல்லது கடும் மழைகள் காரணமாக நீர் செறிவு நிலை அடைந்து சாய்வுகள் உருவாதல். குறைவான உறுதி நிலையிலுள்ள சாய்வுகளுக்கு நில நடுக்கங்கள் மேலும் சுமை சேர்த்தல். நிலநடுக்கத்தால் உருவாக்கப்பட்ட நீர்ம மாக்கல் சாய்வுகளை உறுதிகுலைத்தல். மனித செய்ற்பாடுகளால் நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன.

காட்டுத்தீ: அமெரிக்காவிலும் கனடாவிலும் மற்றும் பல நாடுகளிலும் 90 சதவீத காட்டுத்தீ மனிதர்களால் ஏற்படுகின்றன. வெளிக்கள முகாம்களில் (camping) திறந்த இடச்சமையல் தீ, இரவு வெளிச் சத்திற்கு உண்டாக்கும் தீ, இடத்தைச் சூடாக்க சில மனிதனால் ஏற்படும் தீ



கவனிக்காமல் விட்டு விடுவதனாலும், குப்பைகளை எரிக்கும்போதும், மீதி சிகரெட்டுகளை எறிக்கும்போது அலட்சிய மாக இருந்தாலும், மற்றும் வேண்டுமென்றே செய்யும் விஷமிகளாலும் ஏற்படுகின்றன. மீதமுள்ள 10 சதவீதம் மின்னல் அல்லது எரிமலைகளால் ஏற்படுகின்றன.

வெள்ளம்: மழை எவ்வாறு ஏற்படுகின்றது எனில், முதலில் கடலில் இருந்தும் பிற நீர்நிலைகளில் இருந்தும், நீரானது கதிர வனின் வெப்பத்தால் நீராவியாகி மேலெழுந்து சென்று மேகங்களை அடை-கின்றது. அப்படி மேலெழுந்து சென்று மேகங்களை அடையும் பொழுது குளிர்வடைந்து நீராக மாறுகின்றது. பின்னர் இந்த நீர்தாங்கிய கார்முகில்களில் இருந்து பூமியின் மேற்பரப்பில் விழும்போது மழையாகிறது. தாழ்வான பகுதிகள் மழைநீரில் மூழ்குவதையே வெள்ளம் என் கிறோம். தொடர் மழை, சூறாவளி மற்றும் அணைக்கட்டுகள் உடைதல் போன்றவை வெள்ளத்திற்கு காரணமாகும். ஏனெனில் நகர திட்டமிடல், கால்வாய் அமைத்தல், குளம் அமைத்தல் மற்றும் மனிதனால் வடிவமைக்கப்பட்ட நீர் நிலைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் நீர் சேமித்து வைக்க இயலாது. இதனால், அதிகப் படியான நீர் நிலத்தில் வழிந்தோடி வெள்ளம் ஏற்படக் காரணமாகிறது.

உலகில் வானிலை முன்னறிவிப்புகளும் எச்சரிக்கைகளும் துல்லியமாகப் பூகோள அளவில் செயல்திறன்மிக்க சேவை வழங்குகின்றன. பாதுகாப்புக்காக உள்ளூர் வானொலிகளில், தொலைக்காட்சிகளில் வானிலை முன்னறிவிப்புகள் வந்து கொண்டிருந்தாலும் இயற்கை சீற்றங்களால் உயிர், பொருள், உடமைகள் சேதம் ஏற்படும். இயற்கை சீற்றங்களில் இருந்து மக்களை காப்பதிலும், சேதத்தை குறைப்பதிலும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஒத்திகைகள் வைக்கப்படுவது

> சட்டம் ஒரு சிலந்திக்கூடு. வண்டுகள் அதை அறுத்துக்கொண்டு அப்பால் போகின்றன. ஆனால், பூச்சிகள் அதில் சிக்கிக் கொள்கின்றன.
>
> - செக்கோஸ்லோவேகியா -

# EDUCATION

## Answer Key : 18- 23

(i) Assume that the bullet is inside the bob

If bob swing height of h m , use conservation energy

$$\Delta\frac{1}{2}m_1 v_1^2 = \Delta(m_1 + m_2)gh \quad \text{(Ans = 46m)}$$

(ii) Impulse = change in mommentum

$I = P_f - P_i = mV_f - mV_i$


(0.16x 52) – (0.16x 9 –(40)

= 8.32 + 6.4

= 14.72 kg.m/s (Ans= 15kg.m/s)

(iii) $F_{(ave)} = J/\Delta t$ =15/0.0013 = 11323N Ans=1.1x $10^5$ N)

➢ PHYSICS 12




$$F_w \sin\theta = \frac{mv^2}{r} \quad ; \quad F_w \cos\theta = mg$$

$$\frac{F_w \sin\theta}{F_g \cos\theta} = \frac{\frac{mv^2}{r}}{mg}$$

$$\tan\theta = \frac{v^2}{rg} \quad ; \quad r = \frac{v^2}{g\tan\theta}$$

If V = 800km/h and θ = 30°

Radius = 8728m

Radius of the turn 9km

**BIOLOGY 11**

lethal recessive alleles usually do not have a large effect on heterozygous carriers. As a result , alleles for recessive disorders may pass undetected from generation to generation.

➢ ADVANCED FUNCTIONS 12

a) $|x^2 - x - 3| > 0$ or $|x^2 - x - 3| < 0$

$if\ x^2 - x - 3 = -x + 5\ ;\ x^2 = 8$

$x = \pm 2\sqrt{2}$

$if\ -(x^2 - x - 3) = -x + 5$

$-x^2 + x + 3) = -x + 5$

$-x^2 + 2x - 2 = 0$ ; no solution

(b) |3x + 8| = |2x – 3|

Both become equal when ,


3x +8 = 2 x- 3 or 3x +8 = - (2x -3)

x = 11 or x = - 1

➢ CHEMISTRY 12

(A ) methyl -3-nitro benzoate

(B) 2-methyl-5-(1-methylethyl)-phenol




(ii) Balanced equation in acidic solution

$FeS + 3NO_3^- + 4H^+ \rightarrow Fe^{3+} + 3NO + SO_4^{2-}$

➢ CHEMICTRY 11

$K_2Cr_2O_7(aq) + 14HCl(g) \rightarrow$
$7H_2O(l) + 2KCl(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

Calculate the number of moles of each reactant

$K_2Cr_2O_7$= 0.9x 20 = 18g; $K_2Cr_2O_7$ = 0.061225mol

Number of moles of HCl = 50/36.46= 1.3714

Limiting reactant is $K_2Cr_2O_7$

(ans :3x 0.061225= 0.18g)

Questions 19-1 next issue ☎ 647 341 3975 | KEEN TUTORING CENTRE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசைச் சுளுக்குகளுக்கான காரணிகளும், சிகிச்சையளிப்பும் சுகவாழ்வுக்கான ஆலோசனை

- Dr. ஜோர்ஜ் ட்ரெயிட்ரெஸ் -

## Wellness Tip: Causes and Treatment Options for Muscle Cramps

தசையில் சுளுக்கு ஏற்படும்போது, அது தேகாப்பியாசத்திற்காக மெதுவாக ஓடும் ஒருவரின் செயற்பாட்டினை நிறுத்திவிடுகின்றது அல்லது நீச்சல் அடிக்கும் ஒருவருக்கு நீரில் மூழ்கிவிடுவோமோ என்ற அச்ச உணர்வை ஏற்படுத்திவிடுகின்றது. இவ்விடயத்தில் விளையாட்டு வீரர்கள் மட்டுமே தசைச் சுளுக்கினை அல்லது இழுப்பினை அனுபவிக்கும் தனிப்பட்டவர்கள் அல்லர். ஒரு மதிப்பீட்டின் பிரகாரம், அண்ணளவாக 95 சதவீதத்தைக் கொண்ட மக்கள் வாழ்க்கையில் ஏதோவொரு நேரத்தில் தசைச் சுளுக்கொன்றுடன் இணைந்துள்ள சடுதியானதும், கடுமையானதுமான வலியினை அனுபவிக்கின்றனர்.

தசையொன்றின், தசையொன்றின் அங்கத்தில் அல்லது வழமையாக ஒன்றாகச் செயற்படும் பெருமளவு தசைகளின் தன்னிச்சையிலான சுருக்கமொன்றே தசை இழுப்பொன்றாகும். தசை இழுப்பு சக்தி வாய்ந்ததாகவும், நிலைத்திருப்பதாகவும் விளங்கினால், அது சுளுக்கொன்றாக விளங்குகின்றது. தசையின் இறுக்கத்தன்மையின் உணர்வொன்றாகவே தசைச் சுளுக்கொன்றைப் பெருமளவு மக்கள் விபரிக்கின்றனர். சுளுக்கு ஏற்பட்டுள்ள பகுதியில் உள்ள சருமத்தின் கீழேயுள்ள கடுமையான தசை இழையத்தினைக் கட்டியாக உணர்வதும் வழமையானதல்ல. சுளுக்குகளின் அல்லது இழுப்புக்களின்போது வலி இருக்கும் அல்லது பாதிக்கப்பட்ட தசையை அல்லது தசைத் தொகுதியைப் பயன்படுத்துவது கஷ்டமாக இருக்கும்.

சுளுக்குகளுக்கும், இழுப்புகளுக்கும் ஏதேனும் தசையை, உடலின் பலதரப்பட்ட உறுப்புகளுடன் இணைந்துள்ள தசையைக் கூடப் பாதிக்கலாம். எனினும், இவை நாத்தலைத்தசை (quadriceps), தசை நாண்கள் மற்றும் பின்னங்கால் கெண்டைப் பகுதி (claves) ஆகியவற்றில் பொதுவானவையாகும். கால்கள், கைகள், புஜங்கள் மற்றும் கீழ்ப்புறப் பின்பகுதி ஆகியவற்றில் சுளுக்கு அடிக்கடி நிகழ்கின்றன. பெருமளவு சாத்தியமான காரணிகள் அவை பொதுவாகவே உள்ளதினாலும், வலி உள்ளதாக இருப்பதனாலும் தசை இழுப்புக்களினதும், சுளுக்குகளினதும் காரணியை மர்மத்தின் போர்வையொன்று சூழ்ந்துள்ளது. உடல் உறுப்புக்களைப் போதியளவு நீட்டாதிருத்தல் அத்துடன் தசைச் சோர்வு ஆகியன சுளுக்குகளுக்கு இட்டுச்செல்வதாக சில ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் கூற்றுப்படி, குறைந்த தகுதி நிலை, கடுமையான உழைப்பிலான (விசேடமாக தீவிரமான வெப்பநிலையில்) அழுத்தம் மற்றும் மிதமிஞ்சிய வியர்வை அல்லது உடலில் நீர் பற்றாக்குறை ஊடாக நீர்மப்பொருள்கள் அற்றுப்போதல் ஆகியவற்றை வேறு சாத்தியமான காரணிகள் உள்ளடக்குகின்றன. சோடியம், பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் ஆகியவற்றின் இழப்பொன்றின் காரணமாக சிறுநீர் உற்பத்தியை அதிகரிக்கும் சில மருந்துகளும் சுளுக்கினை விளைவிக்க முடியும்.



### தசை இழுப்புக்கான சிகிச்சையளிப்பு

உருமாதிரியாக, பொறுமையைக் கடைப்பிடிப்பதையும், உடல் உறுப்புக்களை நீட்டுதலையும் தவிர, தசைச் சுளுக்குகளுக்கு சிகிச்சை அவசியமில்லை. பொதுவாகவே, சாதாரண தசைச் சுளுக்குகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு மருந்துகள் அவசியமில்லை. உடலைப் பிடித்துவிடுதலுடன் (மஸாஜ்) சேர்த்து உடல் உறுப்புக்களை மிருதுவாகவும், படிப்படியாகவும் நீட்டுதல் வலியைத் தணிப்பதுடன், சுகமடைவதையும் துரிதப்படுத்துகின்றது.

காயமொன்றின் விளைவாக தசைச் சுளுக்கு அல்லது இழுப்பு ஏற்படும்போது, முதல் இரண்டு, மூன்று நாட்களுக்கு 'ஐஸ்' பொதிகளைப் பிரயோகிப்பது நோவைத் தணிப்பதற்கு உதவிசெய்யும். நீண்ட நேரம் நீடிக்கின்ற இழுப்புக்கள் நாளொன்றுக்கு பெருமளவு தடவை என 20 நிமிடங்களுக்கு ஈரம் கலந்த சூட்டுடன் சிகிச்சையளிக்க முடியும். தேகாப்பியாசத்தின் போது தசைச் சுளுக்குகளை நீங்கள் அடைந்தால், போதியளவு திரவங்களைக் குடிப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அத்துடன் உங்கள் தேகாப்பியாசத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட தசைகளை நீட்டுவதைத் தொடர்ந்து, வெதுவெதுப்பான 'எப்சம்' உப்பு குளியலொன்றைக் கரிசனைக்கெடுங்கள். பொதுவாகச் சொல்வதென்றால், மீள்நீரேற்றத்திற்கு நீர் போதுமானதாகும். எனினும், தமது உடலின் நீர்மப்பொருள் சமநிலையைப் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான வழி-வகைகளில் ஒன்றாக விளையாட்டுக்களின் போது பருகும் பானங்கள் அல்லது 'ஜூஸ்' நன்மையை அளிப்பதாக சிலர் கண்டறிகின்றனர்.

குறிப்பான மருத்துவ நிலைமையொன்றுடன் உங்கள் தசைச் சுளுக்குகள் இணைந்திருந்தால், சுளுக்கு குறைவடைவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆரோக்கியப்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)


# RESTAURANT FOR SALE

## MARKHAM & EGLINTON

**சகல வசதிகளுடன் கூடிய நல்ல வருமானமுள்ள , சகல இன மக்களும் வந்து போகும், நல்ல இடத்தில் அமைந்துள்ள** ( near bus stop) **RESTAURANT விற்பனைக்கு உண்டு.**

**WALK IN FREEZER, WALK IN FRIDGE,**
**FRONT DOOR FREEZER & FRIDGE IN THE KITCHEN**

# READY TO START BUSINESS

# Contact:

# 647-780-6832/ 416-261-0001




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் உலகம் -The World of the Heart

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877.707 3221 Toll free
416 431 5000 தமிழ்
www.wopg.org www.tprf.org

இந்த முழு உலகிலும், தனிநபர் நிறைவின் அடிப்படையானது புகழும் செல்வமும்தான் என பாரிய அளவில் நம்பப்படுகிறது. இந்த எண்ணக் கருத்தானது ஒரு வெற்றியடைந்த மனிதன் எப்படி இருப்பான் என்பதை அடிப்படையாகக் கொண்டதென பிரேம் ராவத் கூறுகிறார்.

அலுவலக ரீதியில் பல நாடுகளால் அமைதியின் தூதுவர் என இனங்காணப் பட்டுள்ள திரு. ராவத் தனது செய்தி நிறைவானதும் மிகவும் எளிமையானதென்றும், அது அனேக மக்கள் உணர்ந்து கொண்டுள்ளதைவிட மிக ஆழமானது என்ற செய்தியுடன் உலகெங்கும் பிரயாணம் செய்கிறார்.

வெற்றி என்றால் என்ன? என அவர் கேட்கிறார். வெற்றியடைந்தவர் யார்? அதிகளவு பணம் உள்ளவனா? “மனிதன் ஒருவன் இறந்ததன் பின்னர், அவனுடைய இறுதிக் கிரியைகளின்போது அவனுடைய நண்பன் ஒருவன் கூறினான் நான் இவருக்கு ஆயிரம் டொலர் கொடுக்க வேண்டும். என்னால் அவருக்கு அதைத் திருப்பிச் செலுத்தமுடியவில்லை, இன்று நான் அதைத் திருப்பிச் செலுத்தப் போகிறேன் எனக்கூறி அவர் ஆயிரம் டொலரை பிரேதப் பெட்டியினுள் போட்டார்.

“இன்னுமொரு நண்பன் நான் அவருக்கு இரண்டாயிரம் டொலர் கொடுக்கவேண்டும். இப்பாழுது அவர் இறந்துவிட்டார். நான் கணக்குவழக்கு சரியாக இருக்கவேண்டும் என எண்ணுகிறேன். ஆகவே நான் இரண்டாயிரம் டொலரை இந்தப் பிரேதப் பெட்டியினுள் போடுகிறேன் எனக் கூறினார்.

அப்போது அவரின் மூன்றாவது நண்பன் வந்தான். அவன் நான் அவருக்கு ஐந்தாயிரம் டொலர் கொடுக்க வேண்டும் எனக் கூறினான். ஆகவே நான் அவருக்கு எட்டாயிரம் டொலருக்கு காசோலை ஒன்று எழுதுகிறேன். அவருக்கு நான் ஐந்தாயிரம் மட்டும் தான் கொடுக்கவேண்டும். ஆனால் அதனால் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஏனெனில் நான் மூவாயிரம் டொலரை எடுத்து விட்டேன் என்றான். இப்பொழுது எமக்கு எல்லாம் தெளிவாகி இருக்கும். அது பரிகாசம், உண்மையிலேயே கவர்ச்சிகரமான பழைய கூற்று ஒன்று உள்ளது. அதாவது உங்களால் உங்கள் பணத்தை உங்களுடன் எடுத்துச்செல்ல முடியாது.

ஆனால் இது அதிகளவு பணத்தைச் சேகரிப்பதை பற்றியது. அல்லா விட்டால் வெற்றி என்றால் என்ன என்று திரு. ராவத் கேட்கிறார். இது கீர்த்தியா? “இந்த உலகில் மிகவும் பிரபலம் வாய்ந்த மக்கள் கூட படிப்படியாக மறக்கப்படுகிறார்கள்.” என அவர் கூறுகிறார். “சில காலங்களுக்கு நீங்கள் யாரோ ஒருவரின் பெயர் பொறிக்கப் பட்ட சிலை ஒன்றைக் காணலாம். அதன் பின்னர் புதிய செயற்திட்டங்கள் வரும், அத்துடன் அந்தச் சிலையும் கணாமற் போய்விடும். அந்தப் பெயரும் போய்விடும். அந்த இடத்தில் புதிய கட்டிடம் ஒன்று இருக்கும். அந்தப் பெயரும் அந்தப் புகழும் எங்கே போனது. போய்விட்டது.”

இந்த வாழ்வில் யாரோ ஒருவர் நிறைவைத் தேடினால் செல்வந்தனாக வருவதற்கோ அல்லது கீர்த்திபெற்றவனாக வருவதற்கோ சிந்தித்தால் அது புத்தியைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என திரு. ராவத் கூறுகிறார். இந்தப் புத்தி எதற்கானதென்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எவ்விதம் உணவு சமைப்பதென்பதை இது உங்களுக்குச் சொல்லித் தரும். எவ்விதம் கார் ஓடுவது என்பதை இது உங்களுக்குச் சொல்லித்தரும். எவ்விதம் விமானத்தை ஓட்டுவதென்பதனையும் இது உங்களுக்குச் சொல்லித்தரும். இது உங்களுக்கு அதிகளவு ஆசைகளைத் தரும். ஆனால் உண்மையான நிறைவை இதனால் உங்களுக்குத் தரமுடியாது.

உண்மையான நிறைவானது உங்களின் உள்ளே மிக ஆழத்தில் இருந்து மட்டுமே வரமுடியும். இதுதான் அந்த இடம், உங்களின் உள்ளே மிக ஆழத்தில், அங்கிருந்துதான் அமைதி ஊற்றெடுக்க வேண்டும். ஏனெனில் அமைதி ஒரு தத்துவம் அல்ல. அமைதி ஓர் உணர்வாகும்.” அந்த அமைதி இருக்கும் இடம் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு மானிடனின் உள்ளேதான் உள்ளது என அவர் கூறுகிறார். அதை அடைவதற்கு நாம் மேலதிகமாக எதுவாகவும் வரத்தேவையில்லை.

நீங்கள் இந்த உலகில் எதுவாக இருக்கிறீர்களோ அதைப்பற்றி நான் பேசவில்லை” என அவர் கூறுகிறார். “நீங்கள் ஓர் இராணுவ வீரராக இருக்கலாம், நீங்கள் ஒரு டாக்டராக இருக்கலாம், நீங்கள் ஒரு வழக்கறிஞராக இருக்கலாம், நீங்கள் ஒரு பொலிஸ்காரராக இருக் கலாம். நீங்கள் யாராகவும் இருக்கலாம். அதற்கு முதல் நீங்கள் யார்?. முதலாவது விடயம் நீங்கள் ஒரு மானிடன்.

“இப்பொழுது அது நல்லதா அல்லது கெட்டதா? மானிடன் என்ற ரீதியில் மிக நல்ல - மிக உயர்ந்த - மனிதன் என்ற ரீதியில் அவரவர் தங்கள் மனிதத் தன்மையை மறந்துவிடக்கூடாது என நான் எண்ணுகிறேன். எப்பொழுது மானிடன் ஒருவன் தனது மனிதத் தன்மையை இழக்கிறானோ அப்போது அவன் ஒரு வெற்றுக் கூடுதான். அப்போது அவன் வரண்டுபோனதொரு ஆற்றைப் போன்றவன். அப்போது அவன் மழையற்ற மேகம் போன்றவன். அப்போது அவன் பழம் தராத மரத்தைப் போன்றவன். அவ்விதம்தான் அவன் மாறுவான்.

“ஆகவே நீங்கள் இந்த உள்ளம் என்னும் உலகில் வாழ விரும்புகிறீர்களா? ஏனெனில் இங்கேதான் உங்கள் மோட்சம் உள்ளது. உங்கள் கற்பனையில் வரும் மோட்சம் அல்ல. நீங்கள் உங்கள் உள்ளே பார்க்கும்போது நீங்கள் அந்த அமைதியை உணர்வீர்கள். அப்போது இது ஓர் ஊகம் அல்ல என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். “நிறைவிற்காக உள்ளே தேடக் கற்றுக்கொள்ளுங்கள் என திரு. ராவத் கூறுகிறார். “ஏனெனில் உங்களால் கற்பனை பண்ணமுடியாத அளவிற்கு நீங்கள் செல்வந்தர் ஆவீர்கள்.”

“இது ஓர் ஆசீர்வாதம் ஆகும். இது ஓர் அற்புதமாகும். அந்த மோட்சத்தை ஒவ்வொருநாளும் உணர, அந்த அமைதியை ஒவ்வொருநாளும் உணர, அந்த ஆனந்தத்தை ஒவ்வொருநாளும் உணர. ஒவ்வொரு நாளும்.



H Math tutorial 378

Answers to tutorial 377

1)E(V) =1600V/(V$^2$+6400) 0≤V≤100

E'(v) =[1600(v$^2$+6400) - 1600v(2v)]/(v$^2$+6400)$^2$ ,for max. or min. E'(V) =0.

1600V$^2$+6400X1600 -3200V$^2$=0 V=80km/h

2)C9625) =75(√625-10)=1125

Average cost is 1125/625 =$1.80

b)C(X) =75(√X -10)=75√x -750

C'(x) =75/2√x ,C''(1225) =75/2√1225 =$1.07

3)y$^3$-3xy -5 =0

3y$^2$dy/dx -3y –dy/dx (3x) =0

At (2,-1),3dy/dx +3 -6dy/dx =0

Dy/dx =1, hence the equation of tangent at(2,-1) is y=x-3

4)(a) A line l through A96,4,0 ) and parallel to a line through ab(-2,0 4 )C(3,-2,1) has direction vector

BC =(5 ,-2, -3) and parametric equations x=6+5t,y=4-2t ,z=-3t

Tutorial 388

Questions

1)How much work is doneby gravity in causing a 30kg rock to tumble 40m down a slopeat an angleof 52 degrees to the vertical

2)Show that the vectors (-1 ,1 ,1 ), (1 ,-1 ,1 ) and (1 1 ,-1 ) can be used as a basis for vectors in space

3)At what point does the the line (x+4)/2 =(y-6)/-1 =(z+2)/4 meet the co-ordinate planes

4)An average of 400 people attend the local amateur theatre night , each time when the admission is$3.50.If the attendance drop by 20 for each&0.25 added to the price ,what admission price will maximise income?

5)Solve $\log_4$ (x+2) +$\log_4$ (x-1) =1

By Mr S.F.Xavier (Teacher)

Tel6473409490/4167322228



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசைச்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரச்சனையைக் கவனத்திற்கு எடுப்பது உங்களுக்கு அவசியம் என்பதை மனதில் கொண்டிருங்கள்.

## தடுப்பதற்கான ஆலோசனைகள்

ஏதேனும் ஆரோக்கிய நிலைமையுடன், தசைச் சுளுக்குகளை அல்லது இழுப்புகளை நீங்கள் அடைய முற்படுவீர்கள் என்றால், அவற்றைத் தடுப்பதே எப்பொழுதும் சிறந்ததாகும். பின்வரும் ஆலோசனைகளை ஒன்றிணைப்பதன் மூலம் உங்கள் உணவையும், வாழ்க்கை முறையையும் மாற்றுவதையிட்டு கரிசனைக்கெடுங்கள்.

உங்கள் உணவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுங்கள். உணவில் இருந்து சீனியையும், வெறியத்தையும் (caffeine) விட்டுவிடுங்கள். அதிலும் நார் மற்றும் புரதம் ஆகியவற்றின் நுகர்வினை அதிகரியுங்கள். மேலதிகமாக, பச்சை இலை மரக்கறிகள், தயிர், பயிற்றினங்கள், முழுத்தானியங்கள், ரோஃபு (tofu), மற்றும் பிரேசில் விதைகள் (Brazil nuts) போன்ற கல்சியம் மற்றும் மகனீசியம் வளமான உணவு வகைகளை அதிகளவு நினைவில் வைத்திருங்கள். வாழைப்பழம், அவகாடோ, லிமா அவரைகள் (Lima beans) மற்றும் மீன் ஆகியன உட்பட உயர் பொட்டாசியம் உணவு வகைகளும் உதவியாக இருக்கும். நீங்கள் தேகாப்பியாசத்தை செய்வதற்கு முன்னரும், பின்னரும் சுளுக்கு அடைவதற்கு முனையும் தசைத்தொகுதிகளை நீட்டுங்கள்.

உங்கள் தகுதிகாண் காரியக்கிரமத்தில் பலப்படுத்தும் தேகாப்பியாசங்களை ஒன்றிணையுங்கள். உடலில் நீர் பற்றாக்குறையாக இருப்பதைத் தவிருங்கள். உடலில் நீர் பற்றாக்குறையாக இருப்பதைத் தடுப்பதற்கு அதிகளவு திரவங்களையும் அத்துடன் நீர் உயர்வாக உள்ள பழங்கள் மற்றும் மரக்கறிகள் போன்றவற்றையும் நுகருங்கள்.



சோடியத்தையும், சோடாவையும் (பொஸ்போரிக் அமிலத்தை அதிகளவு கொண்ட) தவிருங்கள். ஏனெனில் இவை கல்சியத்தைக் கரைக்கலாம். சொக்லேட், வெறியம் மற்றும் மதுபானம் ஆகியவற்றையும் தவிருங்கள். இவை மகனீசியம் உறிஞ்சலுடன் தலையிடலாம். உங்கள் உடல் நிற்கும் தோரணையை விருத்திசெய்யங்கள். உதாரணமாக, ஓர் அசௌகரியமான நிலையில் நீண்ட நேரத்திற்கு கணினி மேசையொன்றின் முன்பாக இருந்த பின்னர் உங்களுக்கு பின்பகுதியின் மையப்பகுதியில் இழுப்புக்கள் வரக்கூடும். சுளுக்கு நிகழ்வதைக் குறைப்பதற்கு விட்டமின் E உதவுவதாகச் சொல்லப்படுகின்றது. இந்தத் தாக்கத்தை ஆவணப்படுத்தும் விஞ்ஞானரீதியிலான ஆய்வுகள் இல்லாத போதிலும், கட்டுக்கதையிலான அறிக்கைகள் பொதுவானவை என்பதுடன், ஓரளவுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடியவையும் ஆகும். வேறு நன்மையிலான ஆரோக்கியத் தாக்கங்களை விட்டமின் E கொண்டிருக்காததுடன், வழமையான மருந்தளவுகளில் நச்சியல் தன்மையற்றவை என்பதனால், நாளாந்தம் 400 அலகுகள் கொண்ட விட்டமின் Eஐ உள்ளெடுப்பது கரிசனைக்கெடுக்கப்பட முடியும்.

உங்கள் சுளுக்குகள் பாரதூரமானவை, அடிக்கடி நிகழ்கின்றன, எளிய சிகிச்சையளிப்பு மோசமாகவே பதிலிறுக்கின்றன, அல்லது அயராத தேகாப்பியாசம் போன்ற வெளிப்படையிலான காரணங்களுக்கு தொடர்பானவை அல்ல என்றால், உங்கள் மூட்டு கையாள்கைச் சிகிச்சை (Chiropractic) வைத்தியருடன் கலந்தாலோசியுங்கள். இவை சுற்றோட்டம், நரம்புகள், ஜீவதத்துவ பரிணாமம் (metabolism), ஹோர்மோன்கள், மருந்துகள் அத்துடன்-அல்லது போஷாக்கு ஆகியவற்றுடன் சாத்தியமானதொரு பிரச்சனையை எடுத்துக்காட்டலாம்.

* பேசி தீருங்கள், பேசியே வளர்க்காதீர்கள்.
* உரியவர்களிடம் சொல்லுங்கள், ஊரெல்லாம் சொல்லாதீர்கள்.
* நடப்பதைப் பாருங்கள், நடந்ததைக் கிளறாதீர்கள்.
* உறுதி காட்டுங்கள், பிடிவாதம் காட்டாதீர்கள்.
* விவரங்கள் சொல்லுங்கள், வீண்வார்த்தை சொல்லாதீர்கள்.
* தீர்வை விரும்புங்கள், தர்க்கம் விரும்பாதீர்கள்.
* விவாதம் செய்யுங்கள், விவகாரம் செய்யாதீர்கள்.
* விளக்கம் பெறுங்கள், விரோதம் பெறாதீர்கள்.
* சங்கடமாய் இருந்தாலும், சத்தியமே பேசுங்கள்.
* செல்வாக்கு இருந்தாலும், சரியானதைச் செய்யுங்கள்.
* எதிர் தரப்பும் பேசட்டும் என்னவென்று கேளுங்கள், எவ்வளவு சீக்கிரம் தீர்வு வரும் பாருங்கள்.
* நேரம் வீணாகாமல், விரைவாக முடியுங்கள்.
* யாரோடும் பகையில்லாமல், புன்னகித்து வாழுங்கள்.
* வாழ்க்கை குறுகியது, ஆனால் அழகானது...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவைத் தொடர் 387 ராசம்மா ராச்சியம்

கூகைப்பு நீதன்



சீரியல் பார்ப்பவர்கள் தொகை குறைந்துவிட்டது. சிரியா, ஸ்ரீலங்கா, அலரிமாளிகை, ஆகாஸ் அம்பாணி வீட்டு திருமணம்... ரஜினியின் பட கட்டவுட் பாலூற்றல்... சீரியலை விட முன்னனியில் நிற்பதால் சீரியல்கள் பார்ப்போர் இல்லை...



சீரியல்களில் முக்கிய கட்டம் வரும்பொழுது... ஆவ்ரத பிறேக் அல்லது மீதி அடுத்தவாரம் என ரி.வி.யில் அறிவித்தல் வருவது போல...



இன்று புதிய பிரதமரை ஜனாதிபதி அறிவிப்பார். பழைய ஜனாதிபதிதான் புதிய பிரதமர். ஆனால் வெகுவிரைவில் அறிவிக்கப்படும். செய்திகளைப் பார்த்துப் பார்த்து மக்கள் சீரியல் நடிகர்களின் முகங்களையும், பெயர்களையும் மறந்துவிட்டனர்.

அன்னம்மாக்கா... உங்கை... உவவை... முந்தி கனதரம் கொழும்பு ரி.வி.யிலை பாத்தனான். பேர் மறந்துபோனன்...

உலகர் குழாம் ஆளையாள் பார்த்து சிரித்தனர். செல்லா அன்றி அது சந்திரிகா இப்ப பிரான்சிலையோ, லண்டனிலேயோ இருக்கிறா?


றியலி... நினைச்சே பாக்கேலாமல் கிடக்கு... என வட்ஸ்அப் வரதன் வட்ஸ்அப் வேலைகளை விட்டுவிட்டு...



உலகரைப்பார்த்து உலகண்ணை... முந்தி ஆரன் வேலைக்கு போகாமல் ஊர்வேலை ஏதன் பார்த்தா... சம்பளம் இல்லா உத்தியோகம் பாக்கிறதெண்டு கதைப்பினம்... இப்ப... பார்லிமெண்டிலையும், அலரி மாளிகையிலும் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை வில்லட்டி இல்லாமல் இருக்கினம்......

உந்த கவுண்மென்ரை நம்பி... கனவு கண்டுகொண்டு காசை முதலீடு செய்த சீனா, இந்தியா, அமெரிக்கா, அவை இவையெல்லாம் முகட்டைப் பாக்கவேண்டியதுதான்... எனச்சொல்லிவிட்டு நீண்ட பெருமூச்சுவிட்டார்... வட்ஸ்அப் வரதன்.

வட்ஸ்அப் வரதன் பரீட்சைக்கு புதிய பாடத்திட்டம் பழைய பாடத்திட்டம் இரண்டையும் படித்து குழம்பிய மாணவன் போல... செய்தி அப்டேற்றை கைவிட்டுவிட்டார்.



இதேவேளை சுகிள் கோகிலா... தமிழ்நாட்டில் அண்மையில் நடந்த காஜா புயல் வெள்ளத்திற்கு மறைந்த மக்களுக்கு ஜெயலலிதா கட்சியினர் வழக்கிய முக்கிய அத்தியாவசிய பொருள்தவிர... அம்மாவின் லேபிள் ஒட்டிய பெட்டிகளில் வழங்கிய சாறிகள் அங்கிங்கெண்ணாதபடி கிழிந்திருந்தன...



நடுவிலை பாதி மீதியைக்காணோம்... உலகர் வேட்டி சால்வை எடுத்து அமளிதுமளிப்படும்போது ரூபனும், ரூபியும் கனடா கந்தசாமி கோவில் கும்பாபிசேகத்திற்கு வரும்படி கேட்டது ஆட்டிலறி அன்னம்மாவுக்கும், செக்கண்ட்புளோர் செல்லம்மாவிற்கும் ஞாபகம் வந்தது.

உலகண்ணை... இந்தப்படங்களைப் பாருங்கோ இவ்வளவுகாலமும் தேரும் சிற்ப வேலையளும் செய்த சிற்பக்கலையரசன் ஜெயராஜா தான் கருங்கல் வேலைப்பாடுகள் செய்திருக்கிறார் எனக்காட்ட... ரூபன் காரை ஸ்ராட் செய்தான்.


டிசெம்பர் 15 தொடக்கம் 31 வரை



15. 1965இல் "த சவுண்ட் ஒவ் மியூசிக்" ஆங்கிலப்படம் வெளியானது.

15. வால்ட் டிஸ்னி (பிரபல காட்டூன் ஓவியர்) நினைவு தினம். 1901-1966

16. 1925 இலங்கை வானொலி சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.



16. ஜப்பானில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் கொல்லப்பட்டனர் - 1920.

17. இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது.





18. சர்வதேச புலம் பெயர்ந்தோர் தினம்.




18. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிறந்த தினம் 1822 - 1879. (ஆன்மீகவாதி தமிழ் உரைநடையின் முன்னோடி)

21. வரதர் (வெள்ளி : ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர். 1924-2006



21. வின்ரர் ஆரம்பம்.

22. ஜேர்மனியில் கிழக்கு மேற்கு என பிரித்த பேர்லின் சுவர் 30 வருடங்களின் பின் 1989இல் (பிரான்டன்பேர்க் கதவு) திறந்து விடப்பட்டது.



24. ஈ.வே.ரா பெரியார் நினைவுதினம். (திராவிடர் கழகத்தை தோற்றுவித்தவர்)




24. புரட்சித்தலைவர், மக்கள் திலகம், தமிழக முதல்வராகப் பதவி வகித்த எம்.ஜி.ஆர். எனும் எம் ஜி. ராமச்சந்திரன் நினைவுதினம்.




25. நத்தார் பண்டிகை (கிறிஸ்மஸ்)

25. சார்லி சாப்ளின் நினைவுதினம் (சிறியோர் முதல் பெரியோர்வரை ரசிக்கும் நகைச்சுவை நடிகர் -1889 - 1977.



26. சுனாமி பேரலை பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலிகொண்ட நாள் - 2004.





31. 2018 ஆம் ஆண்டு நிறைவு.

01.01.2019 ஆங்கில புது வருடம்.




# நத்தார்




வெண் பனித் தூறலில் வெள்ளி நட்சத்திரம் போல்
உலகம் உய்ய உன்னத தேவன்
விண்ணில் இருந்து மண்ணில்
அவதரித்தநாள் நத்தார்

மார்கழித் திங்கள் இருபத்தைந்தாம் நாளில்
மாட்டுத் தொழுவம் அதில் அன்னை
மரியாவுக்குப் பாலகனாய்
ஆண்டவன் ஜேசு பிறந்தநாள்

எள்ளளவேனும் வேற்றுமை இல்லா எல்லா
உயிர்களும் ஒன்றெனக் கருதி
அன்பை விதைக்க ஜேசுபிரான்
அவனியில் தவழ்ந்த நாள்

மனிதன் எங்கே பிறந்தாலும் எங்கேதான் வாழ்ந்தாலும்
அவைருக்கும் எழுதிய முடிவு
ஒன்றேஎன அர்த்தம் சொல்லித்தர
வந்த நாள்

புண்ணிய நாளில் ஆனந்தம் பொங்க புதுவிதமான
புதிய பலவிதமான பரிசுகள்
விண்ணை எட்டும் வாழ்த்துக்கள்
வீட்டினை வந்தடையும் நாள்

கிறிஸ்மஸ் தாத்தா வந்து பரிசில்கள் பல தருவார்
என சிறுவர் சிறுமிகள் யாவரும் கூடி
சிரித்து மகிழ்ந்து கொண்டாடும்
ஒரு நாள்

விடுமுறையோடு விருந்துகள் கேளிக்கைகளுடன்
ஆனந்தம் ஆனந்தம் பரமானந்தம்
ஆண்டுதோறும் அகிலத்தில் வாழும்
கிறிஸ்தவர்கள் அனைவரும்
கொண்டாடும் நாள் நத்தார்



கவிநாதம் பரந்தாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** | **Purchase** | **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com

*Some conditions apply


MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org